கவிச்சக்கரவர்த்தி கம்பன்
மகாகவி வேமனு

எஸ். என். ஆர். டி. ரத்தினம் அம்மாள்
நினைவு மலர்.

வெளியீடு :
கம்பன் கழகம், இராஜபாளையம்.

கம்பன் கழகம்

இராஜபாளையம்

மலர் மணம்

35/3

வணக்கம்.

இராஜபாளையம் கம்பன் கழகத் தலைவர் திருமிகு **எஸ். என். ஆர். டி. ராமசுப்பிரமணிய ராஜா** அவர்களின் அன்னையார் **எஸ். என். ஆர். டி. ரத்தினம் அம்மாள்** முதலாவது ஆண்டு, நினைவு நாளான இன்று, நினைவஞ்சலியாக இந்நூலைக் கம்பன் கழகம் வெளியிடுகிறது.

இந் நூலில் —

திருமிகு **கம்பன் அடிப்பொடி சா. கணேசன்** அவர்கள் அருள்கூர்ந்து வழங்கிய, 'கவிச்சக்கரவர்த்தி கம்பன்' எனும் அரிய கட்டுரையைத் தொடர்ந்து, கம்பராமாயணப் பாடல்களில் சிலவற்றைக் கருத்துரையுடன் வெளியிட்டுள்ளோம்.

திருமிகு பன்மொழிப் புலவர் **மு. கு. ஜகந்நாத ராஜா** அவர்கள் அன்பு கூர்ந்து அளித்த, **'மகாகவி வேமன'** எனும் சீரிய முகவுரையுடன், அவர்களே மொழிபெயர்த்துக் கொடுத்த மகாகவி வேமனவின் சிறந்த சிந்தனைகள் சிலவற்றைத் தொகுத்து வழங்கியுள்ளோம்.

நினைவஞ்சலிச் சிறப்புச் சொற்பொழிவு (1—2—81ல்) நிகழ்த்திய பெரும் புலவர் **கீரன்** அவர்களுக்கும், கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர் கம்பன் அடிப்பொடி அவர்களுக்கும், பெருந்தகையாளர் மு. கு. ஜகந்நாத ராஜா அவர்களுக்கும், இந்நூல் வெளியீட்டிற்கு அனுமதியும், உதவியும் நல்கிய தலைவர் திரு **எஸ். என். ஆர். டி. ராமசுப்பிரமணிய ராஜா** அவர்களுக்கும், இணக்கமும், இனிய ஒத்துழைப்பும் அளித்த கம்பன் கழக அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், நன்றிப்பெருக்கோடு கூடிய நல் வணக்கங்களை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

இராஜபாளையம்,
6—2—81.

குன்றக்குடி பெரியபெருமாள்,
என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா,
பொதுச் செயலர்கள்.



எஸ். என். ஆர். டி. ரத்தினம் அம்மாள்



நினைவஞ்சலி

எஸ். என். ஆர். டி. ரத்தினம் அம்மாள், பகவத் கீதையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, தினமும் கீதையைப் பாராயணம் செய்வார்கள். அவர்கள் ஆர்வத்தோடும், ஆன்மீக உணர்வோடும் ஒவ்வொரு நாளும் ஓதி உள்ளம் நெகிழ்ந்த கீதையிலிருந்து ஒரு சில மணிகளை ஒலிக்கச் செய்து நினைவஞ்சலியாக்குகிறோம்.

★ ★ ★

கண்ணன் :

துயரப்படத்தகாதார் பொருட்டுத் துயரப்படுகிறாய். அறிஞர் போல பேசுகிறாய். இறந்தார்க்கேனும் இருப்பவர்க்கேனும் அறிஞர் துயரப்படமாட்டார்.

ஆத்மாவுக்கு எவ்வாறு இவ்வுடலில் பிள்ளைப் பருவமும், இளமையும். மூப்பும் தோன்றுகின்றனவோ அவ்வாறே வேறொரு சரீரமும் பிறப்பும் ஏற்படுகின்றன. இதைப் பார்த்து தீரன் கலங்க மாட்டான்.

தொழில் செய்யத்தான் உனக்கதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே. தொழில் செய்யாமலுமிராதே.

தனஞ்சயா ! என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை. நூலில் மணிகளைப்போலே இவ்வையகமெல்லாம் என்மீது கோர்க்கப்பட்டது.

இலையேனும் பூவேனும் கனியேனும் நீரேனும் பக்தியுடன் எனக்கு ஒருவன் அளிப்பானாயின் தன்னைத்தான் அடக்கியாண்டு அவ்வாறு பக்தியுடன் அளித்ததை பசிக்கு உணவைப்போல் ஆவலுடன் ஒப்புக்கொள்வேன்.

நான் எல்லா உயிர்களிடத்தும் சமமானவன். நான் யாரையும் வெறுப்பதுமில்லை, விரும்புவதுமில்லை. என்னை பக்தியுடன் யார் வழிபடுகிறார்களோ அவர்கள் என்னகத்துள் அமர்ந்திருப்பார்கள். அவர்கள் அகத்துள் நான் இருப்பேன்.

ஆத்ம நாசத்துக்குக் காரணமான காமம், குரோதம். லோபம் (காமம், சினம், அவா) ஆகிய மூன்று நரக வாயில்களிலும் புகாதே.

தன்னை உயர்த்திக்கொள்ளும் சாதனம் ஒருவனுக்கு தன்னிடமே உள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள். உள்ளத்தைக் கெடுத்துக்கொண்டு தாழ்வடையாதே. ஒருவனுக்குத்தானே நண்பன். ஒருவனுக்குத்தானே பகைவன்.

எவன் மக்களுக்கு வேதனை உண்டாக்காமலும், மக்களின் செயல்களால் வேதனையடையாமலுமிருக்கின்றானோ, எவன் ஒருவன் மகிழ்ச்சி, பயம், கோபம் ஆகியவற்றால் ஏற்படும் மாறுதல்களை அடையாது அவைகளினின்று விடுபட்டானோ அவன் எனக்கு இனியவன்.

அர்ஜுனா ! உயிர்கள் அனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதி நான். இடையும் அவற்றின் இறுதியும் நானே.

தனக்குரிய தொழிலைச் செய்தால் உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய் இவ்வையகம் அனைத்தும் பரவி நிற்கும் இறைவனை வழிபாடு செய்ததாகும். அதனால் மனிதன் சித்தியடைகிறான்.

★

கவிச்சக்கரவர்த்தி கம்பன்

கம்பன் அடிப்பொடி
சா. கணேசன்.

தமிழ் இலக்கியச் சோலையில் அறம் அரும்பும்; பொருள் மலரும்; இன்பம் மணக்கும். நீதி, தத்துவம், சமயம், மருத்துவம், சோதிடம், கட்டடம், சிற்பம் போன்ற எண்ணற்ற இலக்கியம் செடி, கொடி, மரங்களாகத் திகழும். இலக்கியச் சோலையின் வேலியான இலக்கணம்கூட முள்ளுக் கம்பியாயில்லாமல் கவிதையாக-கம்பன் கூறுமாப்போலே-மாதவி மலர்க்கொடி வேலியாகவே திகழும். அச்சோலையினுள்ளே நுழைந்துவிட்டால் பலப்பல கதைகள், வரலாற்று இலக்கியங்கள், சிறு காப்பியங்கள், பெருங்காப்பியங்கள் என்றெல்லாம் எத்தனை எத்தனையோ தாவரங்கள்!

குளிர் நிழல் தருவன; நறுமணம் பரப்புவன; அணிநிறம் நிரப்புவன; செவிநுகர் கனிகள் சொரிவன என்று இப்படி இருக்கும் அந்தச் சாவா மூவா இலக்கியச் சோலை. ஆம்! காலமும் அழிக்க மாட்டாக் கனகக் கற்பகச் சோலை அது! இத்தகைய பெருமை மிக்க இலக்கியச் சோலையின் மத்தியில் முன்னைப் பெருமரங்கட்கும், பின்னை வளர் செடிகட்கும் நடுவே அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து, போகக் கனிகளை உதிர்த்துக்கொண்டேயிருக்கும் பரந்து வளர்ந்து சிறந்து நிற்கும் ஒரு மரந்தான் இராமாவதாரம். அப் பயன்மரத்தை இலக்கியச் சோலையின் நாப்பண் நட்டுப் பயிராக்கி வளர்த்து நம்மிடம் விட்டுச் சென்றிருக்கும் பாட்டாளி ஒரு பெருங்கருணைத் தடங்கடல். அவனைத்தான் ஆயிரம் ஆண்டுகளாகக் ''கவிச்சக்கரவர்த்தி'' என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டி வருகிறது.

அவன் அருளிய இராமாவதாரத்தைக் ''கம்ப ராமாயணம்'' என்றே பெரும்பாலோர் கூறுவர். பெரும் காப்பியத்திற்குக் கம்பன் வகுத்த வழியே இன்றுவரைக் கட்டளையாக அமைந்து நிற்கிறது.

இராம காதை கம்பனுக்கு முன்னே குறைந்தது மூன்று இராமாயணங்களாவது தமிழ் மொழியில் இருந்திருக்கவேண்டும். ''இராமாயணமும் பாரத-மும் போல்வன இலக்கியம்'' என்று நச்சினுர்க்கினி-யரும், தொன்மை என்னும் வனப்பிற்கு ''பாரதம், இராமாயணம் முதலானவும் கொள்க'' என்று யாப்-பருங்கல உரையாசிரியரும் கூறியுள்ளனர்; இவை கம்பனுக்கு முந்திய இராமாயணத்தையே குறிப்பன வாகும்.

சங்க காலத்திற்குப் பின்னே, வள்ளுவனுக்குப் பிறகு இளங்கோ காலத்திற்குப் பின்னர், ஆழ்வார் கட்கும் பிற்பட்டுத் தோன்றியவன் கம்பன். இவன் காலம் ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதி.

கி.பி. 9-ம் நூற்ருண்டில் அதாவது 871 முதல் 907வரை சோழ மண்டலத்தை ஆண்ட கோதண்ட ராமனுன ஆதித்தன் கம்பனிடம் பெருமதிப்பும், அருநட்பும் கொண்டவன். வெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் கம்பனைக் கண்மணியாய்க் கருதிப் பேணிக் காத்தவர். இவை எல்லாம் நூலுட் காணப்பெறும் குறிப்புகளால் புலப்படுகின்றன.

கம்பன் தனது இராமாவதாரத்தை கி.பி. 886, பெப்ருவரி, 23-ந் தெய்திக்குச் சரியான விசுவாவசு-பங்குனி 4-ந் தெய்தி புதன்கிழமை அஸ்த நட்சத்-திரத்தில் வெண்ணெய்நல்லூரில் அரங்கேற்றினுன்.

இளங்கோ சேர-சோழ-பாண்டிய மண்டலங்-கள் மூன்றையும் தமிழ்நாடென்னும் ஒரு நாடாக்கும் கதையை ஏற்று, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தை அருளினுர்.

கம்பன் அகில இந்தியாவையும் ஈழம் உள்பட ஒரு நாடாக-பாரத தேசமாக-ஆக்கும் கதையை ஏற்று, அற்புதக் காப்பியத்தை வடித்தருளினன்.

வள்ளுவன் அறமே அவன் மனத்தைப் பெரிதும் ஈர்த்து நின்றது. மனிதன் வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதில் வள்ளுவமே சிறந்தது என நம்பியவன் கம்பன். வள்ளுவன் அறத்தை மூர்த்திகளாக்கி அவன் எடுத்த மணிக்கோயிலே இராமாவதாரம் என்னலாம்.

இந்த மெய்ம்மையை,

வையம் என்னை இகழவும்,
மாசு எனக்கு
எய்தவும், இஃது இயம்புவது
யாது ? எனில்;
பொய் இல் கேள்விப்
புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி
மாட்சி தெரிக்கவே !

"சாதாரண மக்கள் என்னைப் பழிக்கவும், என் புலமைக்கு இழுக்கு ஏற்படவும் இக்காப்பியத்தை நான் ஆக்கக் காரணம் என்ன என்றால், சிறந்த கேள்வி ஞானம் உள்ள அறிஞர்களெல்லாம் பாராட்டிப்பேசும் தெய்வப் புலவன்-அதாவது திருவள்ளுவன் மாண்பினை உலகிற்கு உணர்த்தத்தான்" என்று, தெளிவாக வெளிப்படுத்துகிறான்.

இராமன் அறத்தின் மூர்த்தியாகவும், இராவணன் பிறன் மனை கவர்ந்த பாவியாகவும் விளங்குகின்றனர். இராமன் படைபலம், கருவிகள், அரண் முதலிய வாய்ப்புக்கள் உடையவனல்லன். இராவணனே முக்கோடி வாழ்நாள், முயன்று பெற்ற பெரு வரங்கள்; ஒப்பற்ற அரண்; அளவிலாப் படை பலம், பேரறிவு, பெருஞ்செல்வம், உடல் வளம்,

அறிவுக் கூர்மை எல்லாம் நிரம்பியவன். பிரமனுக்குக் கொள்ளுப்பேரன்; வேதம் வல்லவன்; நிரம்பிய தெய்வபக்தி உடையவன். சுருக்கமாகச் சொன்னல் சுவைப் பால் நிரம்பிய பொற்குடம்! எல்லாம் இருந்தும் அறம் மட்டுமில்லை. பிறன் மனை நயந்த பேதமை என்னும் ஒரு சொட்டு விஷம் அத்தனை பாலையும் அழித்துத் தொலைத்துவிட்டது!

''அறம் வெல்லும் - பாபம் தோற்கும்'' என்ற உண்மையை உணர்த்த இராம காதை நல்ல-சிறந்த- ஒரு கட்டுக்கோப்பு என்று கருதியே கம்பன் வான்மீகி வழங்கிய, தமிழகத்தில் காலூன்றிவிட்ட, கதையை தன் காப்பியத்திற்கு மூலமாக, வித்தாக எடுத்துக்-கொண்டிருக்கிறுன்.

அன்றியும் தமிழகத்தில் பிறன் மனை நயத்தலே பெரும் பாபமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. எனவேதான் உச்சபட்சத் தண்டனையான கழுவேற்றல் இக் குற்றவாளிகட்கு அளிக்கப்பட்டும் வந்திருக்கிறது.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் கம்பன் அருளிய காப்பியத்தின் அருமையும், பெருமையும், பயனும் நன்கு புலப்படும்.

எனவே, கம்பன் காப்பியத்தை மட்டும் அல்ல, இராம காதையையே மாநில - இனக் கண்கொண்டு பார்க்கலாகாது. இந்த நெறி எல்லாக் காப்பியங்களுக்குமே பொருந்தும்.

இராமன் அறப் பாத்திரம், இராவணன் மறப் பாத்திரம். இராமன் அறத்தைச் சார்ந்திருந்தான். இராவணன் ஆணவச் செருக்கால் அறத்தை மறந்திருந்தான். அறம் வென்றது; பாபம் எத்துணை ஆற்றலோடு கூடியிருந்தாலும் இறுதியில்தோற்றது. இதுதான் கதைக் கூறு.

அதற்கெல்லாம் மேலாக, காப்பியக் கட்டுக் கோப்பு, கதை ஓட்டம், பாத்திர இயக்கம், கவிதைச் சுவை, பொருளமைதி, ஓசை இன்பமாகிய இழுமை ஆகியவை ரசனை உள்ளத்தை மகிழ்விக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அன்புள்ளம் அறத்-தாற்றில் செல்ல அறிவூட்டும் ஓர் இலக்கியமாகத் திகழ்கிறது.

நல்ல சிற்பி ஒருவன் சிறந்த மூர்த்தியை உரு-வாக்குவதற்குக் கல்லையோ, செம்பையோ தேர்ந்-தெடுக்கும்போது அது இத்தாலிக் கல் என்றோ தூரக்கிழக்கு நாட்டில் கிடைத்த செம்பென்றோ ஒதுக்கமாட்டான். தான் அடித்து அல்லது வடித்து உருவாக்குவதற்கு ஏற்றதா ? கால காலத்திற்கும் தாக்குப்பிடித்து நிற்குமா ? என்றுதான் கணித்துப் பார்ப்பான்.

அப்படித்தான் சிறந்த கவிஞனும் கதைக் கரு எங்கு தோன்றியது என்பதைப்பற்றிக் கவலைப்படா-மல் தன் படைப்பிற்கு ஏற்றதா? காலவெள்ளத்திற்கு ஈடுகொடுத்து நிற்குமா? தன் நாட்டுமக்கள் நல்-வாழ்வுக்கு உதவுமா ? என்றுதான் பார்த்துத் தேர்ந்துகொள்வான்.

ஆதி கவி என்று அகிலமெலாம் பாராட்டும் வான்மீகிபடைத்தளித்த காப்பியக்கதையை முன்னைத் தமிழ்ப் புலவர்களைப்போலவே கம்பனும் போற்றி மகிழ்ந்தவன். அப்பாத்திரங்களை மனமார நேசித்த-வன். தன் திறமையை, கவிதா சன்னதத்தை முழுதும் காட்டத் தக்கதொரு பெருங்கதை என மனங்கொண்டான். காலம், இடம், மக்கள், பண்பாடு மரபுகளுக்கேற்ப கதையை அமைத்துக்கொண்டான். சில நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் நீக்கினான்; சில நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் சேர்த்தான். வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டான்.

தான் பயின்ற பல கலையறிவும், வேத உபநிடதக் கருத்துக்களும், அகத்தியம் முதலான இலக்கணங்

களும், சங்க காலம் தொடங்கி மலர்ந்துள்ள தமிழ் இலக்கியங்களும் கைகொடுத்துதவத் தமிழ்த் தாய்க்கு மணிமுடிபோன்ற ஒப்பற்ற காப்பியத்தை அருளிச் செய்துள்ளான்.

''கல்லாத கலேயும் வேதக் கடலுமே இல்லாத உலகத்து எங்கும்'' என்று பாராட்டத்தக்க பேராற்றலும், பேறறிவும், பெரு நம்பிக்கையும் உடையவனுகத் திகழும் கவிச்சக்கரவர்த்தி ''செவிக்குத் தேன்'' என, இராகவன் புகழினேத் திருத்திய கவிக்கு நாயகனுகவும் விளங்குகிருன்.

இவன் படைத்த அற்புதக் காப்பியம் மேலே-நாட்டுத் திறனுய்வுக் கருவியால் அளக்கும்போதும் எங்நாட்டுக் காப்பியத்திற்கும் ஈடுகொடுத்து நிற்கும் அருமையை எண்ணித் தலே நிமிர்ந்து நிற்க முடிகிறது.

இனிக் கம்பன் சமைத்த மாமணிக் கோயிலான இராமாவதாரமென்னும் மகோன்னதக் காப்பியத்தின் உள்ளே சென்று பல்வேறு அழகுகளேயும் கண்குளிர மனம் களிப்பக் காண்போம்.

கம்பன் ஒரு நல்ல கவிஞன்; மகாகவி; கவிச்-சக்கரவர்த்தி. செந்தமிழ்-ஆரியம் இரு மொழிகளி-லும் கரைகண்டவன். வேறு சில மொழிகளும் அறிந்திருந்தான் என்று தெரிகிறது. வேதம், உப-நிஷதம் முதலாக உள்ள பல சமஸ்கிருத நூல்களேயும், அகத்தியம் முதலாக உள்ள தமிழ் நூல்களேயும் ஐயம் திரிபு அறக் கற்றுத் தெளிந்திருக்கிருன். இசை, பரதம், சிற்பம் முதலிய கலேகளிலும் வல்லவ-னுக இருந்திருக்கிருன். சுருக்கமாகச் சொன்னுல் அவன் காலம்வரைத் தோன்றிய பல நூல்களிலும் தோய்ந்து கற்றுத் தேர்ந்திருக்கிருன்.

இந்த உண்மையெல்லாம் கம்பன் காப்பியத்தில் பரக்க வெளிப்படுகிறது. இத்தகைய பேராற்றலே

ஒப்பற்ற காப்பியம் தோன்றத் துணைபுரிந்தது. வான்மீகி அருளிய ஆதி காவியத்தைப் பலமுறை ஆய்ந்திருக்கிறான். தனக்கு முன் தமிழில் தோன்றிய ராமகதை நூல்களையும், திவ்யப் பிரபந்தம் முதலான பாசுரங்களையும் தோய்ந்து படித்திருக்கிறான். அதன் பிறகே, தான் ஆக்கிய ராமாவதாரத்திற்குச் சட்டகம் வகுத்துக்கொண்டிருக்கிறான்.

சீதையின் பண்பை எவ்வளவோ உயரத்திற்கு ஏற்றிவைத்து,

''சோகத்தாள் ஆய நங்கை
கற்பினால், தொழுதற்கு ஒத்து
மாகத்தார் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மௌலி மேலாள்''

என்று பெண் குலமே பெருமையால் ஓங்கச்செய்து விடுகிறான்.

இறை வணக்கம் செய்தே நூலைத் தொடங்குவது நமது மரபு. கம்பனும் முன்னையோரைப் பின்பற்றிக் கடவுள் வணக்கம் செய்கிறான். எந்தச் சமயத்தவரும் மறுக்கமாட்டாத முறையிலன்றோ கடவுள் வாழ்த்துச் செய்கிறான்!

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்;
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே!

எவ்வுருவும், எப்பெயரும் கூறாது, எங்குமாய் யாவுமாய் இலங்கும் ஒரு தனிப்பொருளை, திணை, பால், எண், இடம் ஏதும் சுட்டாது, வாழ்த்தும் அருமைப்பாடே கம்பனின் மேலான மெய்யறிவுக்கு ஓர் எடுத்துக்காட்டன்றோ?

காப்பிய அங்கத்தில் ஆற்றுப் படலத்தை முதலாவதாக ஆக்கிய பெருமகன் அப்படலத்தில் நீரை வைத்துக்கொண்டே கடவுள் தத்துவத்தை அருமையாக அழகாக உணர்த்திவிடுகிருன்.

மலேயில் தோன்றி, வழிநெடுக ஓடிக் கடலில் சங்கமமாகிற ஆற்றை நாம் பலகாலும் கண்டு கொண்டுதானிருக்கின்ருேம். இந்தஆறு எங்கிருந்து வருகிறது என்ருல், ஓஹோ! இது காவிரி நதியல்லவா ? இது சைய மலேயிலிருந்து வருகிறது என்று கூறுவோம். இது கங்கையன்ருே ? இது இமயமலேயில் உற்பத்தியாகிறது என்போம். பூகோள முறைப்படி இவ்விடைகள் முற்றும் சரியே ! ஆனுல் உண்மை என்ன? எங்கும் பரந்துகிடக்கிறது நீர்; அதைக் கடல் என்போம் நாம்; அதுதான் முதல் அல்லது மூலம்; சூரியன் காய்கிறது; கடல் நீர் ஆவியாக எழும்புகிறது; மேகமாகப் பரவுகிறது; மழையாகப் பொழிகிறது; கால்களாகப் பாய்கிறது; அருவியாகக் குதிக்கிறது; ஆருக ஓடுகிறது; இறுதியில் தான் எங்கிருந்து வந்ததோ அங்கு, அந்தக் கடலுக்கே, சென்று கலந்து ஒன்றிவிடுகிறது. இடையில் பெற்ற காவிரி, கங்கைபோன்ற பெயர்களும் மறைந்துவிடுகின்றன. இந்த உண்மையைக் கவிஞன் எவ்வளவு அருமையாக உணர்த்துகிருன் என்பதைக் காண்போம்:

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லே இல் மறைகளாலும்
இயம்ப அரும்பொருள் ஈது என்ன;
தொல்லேயில் ஒன்றே ஆகி,
துறைதொறும், பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல், பரந்தது அன்றே !

''கல்லிடை, அதாவது மலையிடத்தே தோன்றி நீளச் சென்று கடலிடத்தே ஒன்றிவிட்ட நீராறு இருக்கிறதே அது வரம்பில்லாத வேதங்களாலும் சொல்லமுடியாத பரம்பொருள்தான் இஃது என்னும்படி ஆதியில் ஒன்றே ஆகி எல்லா இடங்களிலும் விரவிச் சூழ்ந்துள்ள நிலையைப் பார்த்தால் பல பெரிய மதங்களும் கூறும் பரம்பொருளைப்போல அல்லவா பரந்துகிடக்கிறது'' என்று எவ்வளவு எளிதாக அரிய தத்துவப் பொருளையே கூறிவிடுகிறான்! அவனுள் ஊறிக்கிடந்த உபநிஷத ஞானமன்றோ அரிய கவிதையாக மலர்ந்து மணக்கிறதென்று வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

கடவுள் தன்மையை விளக்கும் இடங்கள் பல. அங்கெல்லாம் வேதகால ரிஷியாகவே காட்சி தருவான் கம்பன்.

தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து = தன் அகத்திருந்தே உலகங்கள் அனைத்தையும் மலரச் செய்கின்றானும்; **அவை தன்னுளே நின்று** = அப்படித் தன்னாலே தரப்பெற்ற அவ்வுலகங்கள் ஒவ்வொன்றினுள்ளும் தனித்தனியாய் நிற்கின்றானும்; **தான் அவற்றைத் தாங்குவான்** = தானே அந்த உலகங்கள் அனைத்தையும் சுமந்து கொண்டிருக்கிறானும்; அவன் யார்? **பின் இலன்** = இவனுக்குப் பின்னே யாரும் இல்லாதபடி கடையூழியில் தானாகவே இருப்பவன்; **முன் இலன்** = அப்படியானால் அவன் பிற்காலத்தில் தோன்றியவனோ என்றால் இவனுக்கு முன்னே தோன்றியவர் எவரும் இல்லையாம்; இவன்தான் ஆதி முதல்வனும்; **ஒருவன்** = அவன் தனியனும்; **பேர்கிலன்** = அழிவு, மாற்றம், அசைவு கூட இல்லாதவனும்; **தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ?** அத்தகைய தனிப் பரம் பொருளின் உண்மையான நிலை இதுதான் என்று எந்த ஒரு ஞானியாலும்கூட வரையறை செய்து விடமுடியுமா? முடியாது என்று வரையறை

செய்து காட்டும் அருமையை அவன் வாக்காகவே கேட்போம்:

''தன்னுளே உலகங்கள்
எவையும் தந்து, அவை—
தன்னுளே நின்று,
தான் அவற்றைத் தாங்குவான்;
பின் இலன்; முன் இலன்;
ஒருவன்; பேர்கிலன்;
தொல் நிலை ஒருவரால்
துணியற் பாலதோ ?''

ஒரு நல்ல கவிஞன் முடிந்தவரைத் தான் வெளிப்படாமல் பாத்திரங்களைக் கொண்டே கதையை நடத்திச்செல்ல வேண்டும். அப்பொழுதுதான் கதை ருசிக்கும்; பாத்திரங்களின் தனித்துவமும் வெளிப்படும். அது கம்பனுக்குக் கைவந்த கலை. ஆகவேதான் '' கம்ப நாடகம் '' என்றும் கம்பன் காப்பியத்தை மேலோர் கூறுவர். அத்தகைய பல நிகழ்ச்சிகளுள் ஒன்றைமட்டும் இப்பொழுது காண்போம்.

இராமன் வனத்துள் இருக்கிறன்; சீதை இராவணனல் தூக்கிச்செல்லப்பெற்று இலங்கையில் சிறையில் இருக்கிறள்; சுக்ரீவன் வாக்களித்த வண்ணம் குரங்குப் படைகளுடன் வரவில்லை; இலக்குவனைக் கிஷ்கிந்தைக்குத் தூது அனுப்புகிறன் இராமன். இலக்குவன் கிஷ்கிந்தைக்குச் செல்லுகிறன். அங்கே நிகழ்ந்தவை ஒரு அருமையான நாடகமாக அமைகிறது. அதில் ஒரு பகுதி பல நாட்களாய் நடந்துவருவது. அதைக் கம்பன் முன்னே கூறியிருக்கலாம். ஆனல் சொல்லவில்லை. காரணம் ஒரு பாத்திரத்தின்மூலமாகவே தெரிவிக்க வேண்டும் என்று கருதியிருக்கிறன். தக்க வாய்ப்புக் கிட்டியது செயல்படுகிறன்.

சீதை உடனிருந்தவரை கீரை, கிழங்கு, காய், கனி முதலியவற்றை ஆய்ந்து, திருத்திப் பக்குவமாக

இராமனுக்குப் பரிமாரியது சீதையே. அவன் பிரி-வுக்கு அப்புறம் அப்பணியையும் தம்பி இலக்குவனே ஆற்றிவருகிறுன். அப்படிப்பட்ட செய்தி இங்குதான் நெடுநாட்களுக்குப் பின்னர் புலப்படுத்தப்படுகிறது.

இலக்குவனை நோக்கி, "தாங்கள் குளித்து முழுகிவிட்டு உணவுகொள்ளவேண்டும்!" என்று சுக்ரீவன் வேண்டுகிறுன், அதற்கு இலக்குவன் கூறும் விடையில் செய்தி புலப்படுகிறது.

கீரை, கிழங்கு, காய் முதலியவற்றில் இராமன் உண்டு மீந்ததைத்தான் நான் உண்பேன்; வேறு ஏதும் விரும்பமாட்டேன்; அப்படி ஏதும் ரும்பினுல், அது நாய் தின்ற எச்சிற் பண்டமே!

அல்லாமலும் மற்றெரு காரணமும் உள்ளது. நான் திரும்பிச்சென்று அதன்பின் உணவுப் பண்டங்களைச் சேகரித்துக் கொண்டுவந்து சீவி, நறுக்கிப் பக்குவம் செய்யவேண்டும். அதுதான் இராமனுக்கு உணவு. எனவே இன்று சிறிதும் காலம் தாழ்த்தப்படாதென்று கூறிப் புறப்படுகிறுன்.

"பச்சிலை, கிழங்கு, காய் பரமன் நுங்கிய
மிச்சிலை நுகர்வது; வேறுதான் ஒன்று
நச்சிலேன்; நச்சினேன் ஆயின் நாயுண்ட
எச்சிலே அஃது; இதற்கு ஐயம் இல்லையால்!"

"அன்றியும் ஒன்று உளது ஐய! யான் இனிச்
சென்றனேன் கொணர்ந்து அடை திருத்திறுல் அது
நுன்துணைக் கோமகன் நுகர்வது; ஆதலான்
இன்று இறை தாழ்த்தலும் இனிது அன்ரும்!"

என்றுன்.

இப்படி அருமையாகக் காப்பியத்தை அமைக்-கும் திறமையை எண்ணும்பொழுது, கம்பனின் மேதா விலாசம் நமக்கெல்லாம் புலப்படுகின்றதன்றே?

பண்ணடைவு தாளக் கட்டமைய, எத்தனை எத்தனையோ பாடல்களை ஆக்கியுள்ளான். பிற்காலக் கீர்த்தனை வடிவு எளிதிற் கிடைக்குமாறு எண்ணற்ற பாடல்கள் கிடைக்கின்றன. ஒன்றை மட்டும் பார்ப்போம்.

பல்லவி

செம்மைசேர் நாமம் தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்

அநுபல்லவி

இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும் (செம்மைசேர்)

சரணம்

மும்மைசால் உலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே (செம்மைசேர்)

ஓர் எழுத்தைக்கூட மாற்றாமல் கீர்த்தனை வடிவம் அழகாக அமையும் பாடல்கள் பலவற்றுள் இ∴து ஒன்று இது சங்கராபரண ராகத்தில் மிச்ர சார்ப்பு தாளத்தில் பாடப்பெற்றுவருகிறது.

இ∴தன்றிப் பரத நூல்தனையும் பாங்குறப் பயின்ற அருமை பல இடங்களிற் பளிச்சிடக் காண்போம்.

விசுவாமித்திரனோடு இராம-லட்சுமணர்கள் மிதிலையுட் செல்கின்றனர். பல்வேறு காட்சிகளும் இவர்கள் கண்ணிற் படுகின்றன; அவற்றுள் ஒன்று நாட்டிய அரங்கம்; அதையும் கண்டார்கள். இது வழிநடைக் காட்சிபற்றிய ஒரு சாதாரணச் செய்திதான். அதைக் கூறும் முறை அருமையாகவுள்ளது. "ஆடக அரங்கு கண்டார்" அதாவது பொன்போன்று ஒளிரும் மேடையைக் கண்டார்களாம். "ஐயநுண், இடையார் ஆடும் ஆடக அரங்கு". உண்டோ இல்லையோ என்று சந்தேகப்-

படும்படி, அவ்வளவு சிறுத்த இடையோர்-இளம் பெண்டிர்-ஆடும் அரங்கு என்று பரத நடனம் ஆடத் தக்கார் தோற்றத்தையும், உடல் அமைப்பையும் உணர்த்துகிருன். அப்படிப்பட்ட மெல்லியலார் ஆடும் முறையை எத்துணைக் கச்சிதமாகப் புலப்படுத்துகிருன் தெரியுமா ? "நெய் திரள் நரம்பில் தந்த மழலையின் இயன்ற பாடல்" அதாவது தேன் ஒழுக்குப்போன்ற நிறமுடைய விரைப்பான நரம்புக் கருவியால் இசைக்கப்பட்டதுபோன்ற சன்னமான இனிய குரலில் பாடப் பக்கவாத்தியங்களாக் வீணையும் தண்ணுமை என்னும் மிருதங்கமும் பாடலோடு ஒன்றிப் பிணைந்து நிற்க; மகளிர் ஆடவேண்டும்; எப்படி ஆடவேண்டுமாம்? கைவழி நயனம் செல்ல - முத்திரை பிடித்த கை எப்படி, எங்கெல்லாம் செல்லுகிறதோ அங்கெல்லாம் சென்று கண் லயிக்கவேண்டும்; கண்வழி மனமும் செல்ல-கண் சென்ற வழி மனமும் சென்று முத்திரையின் பொருளில் பதியவேண்டும். அப்படி ஆடுகிற அரங்கினைக் கண்டார்கள் என்கிருன். பரதக் கலையின் அடிப்படையாய் அமைந்த இலக்கணத்தை எவ்வளவு கணக்காகக் கூறுகிருன் !

"யாதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி !
யதோ த்ருஷ்டிஸ் ததோ மன:"

எனப் பரத சாஸ்திரம் கூறுவதைக் கம்பன்

"கை வழி நயனம் செல்ல,
கண் வழி மனமும் செல்ல"

என்று எவ்வளவு எளிதாக, தெளிவாகப் புலப்படுத்திவிடுகிருன் ?

பரத சாஸ்திரத்தையும் நன்கு பயின்று, பல அரிய பரத நாட்டியத்தையும் கண்டு மகிழ்ந்திருக்கிருன் கம்பன். எனவேதான் பல இடங்களில் பரத நூல் பற்றியும் பேசுகிருன்.

அனுமனிடமிருந்து, இராமனின் மோதிரத்தைப் பெற்று, இராமன் வந்து கொண்டிருக்கிறுன் என்ற செய்தி கேட்ட பரதன் எல்லையில்லாத மகிழ்ச்சியால் ஆடிப்பாடி ஆனந்தத் தாண்டவம் புரியத் தொடங்கி விடுகிறுன். அதைச் சித்திரிக்கிறுன் கவி கம்பன். சொல்லால் தீட்டிய அந்த ஓவியம் பரதக்கலை வல்லவனுக்குத்தான் சாத்தியமாகும். இரு பாதத்தையும் ஒரு சேர வைத்து, கால்கள் இருபக்கமும் விரிய, ஒரு டைமன் சதுரவெளியேற்படுமாறு நின்று உந்திக் குதிக்கும் முறையை நாட்டிய மொழியில்,

''குஞ்சித அடிகள் மண்டிலத்தில் கூட்டுற
அஞ்சனக் குன்றின் நின்று ஆடும்; பாடுமால்''

என்று சுருக்கமாக-ஆனுல்-தெளிவாக உணர்த்துகிறுன் என்றுல் கம்பனுக்கு பரதக்கலை அறிவு அப்படிக் கைகொடுத்து உதவுகிறது!

இனி, கம்பனுக்குள்ள உயிர்நூல் அறிவில் ஒரு கூறைப் பார்க்கலாம்! மலர் நிறைந்த கூந்தல் மாதர்கள் பலர் பெண் யானைமீது அமர்ந்து செல்கிருர்கள். அம்மலரில் தேனுக்காகப் பலவகை ஈயினம் அவர்கள் தலைக்கு மேல் மொய்த்துப் பறந்து-கொண்டே செல்கின்றன. அவை அம்மகளிர்க் ஒரு பந்தர் இட்டதுபோல இருக்கிறதாம்; இதுதான் செய்தி. ஆனுல் கம்பன் அந்த ஈக்கூட்டத்தை நான்கு பெயரிட்டு அழைக்கின்றுன். ''தேனெடு மிஞிறும், வண்டும் தும்பியும்'' என்கிறுன். தேன் என்பது பெண் தேனீ; மிஞிறு என்பது ஆண் தேனீ; வண்டு என்பது பெண் வண்டு; தும்பி என்பது ஆண் வண்டு; பால காண்டத்தில் கூறும் இந்த வேறுபாட்டை, கிஷ்கிந்தா காண்டத்தில் ''பேடையும் ஞிமிறும்'' என்றும், ''துணை வண்டு'' என்றும் பால் பகுத்துக் கூறல் கம்பனுக்கு உயிரியல் அறிவு சிறந்-திருந்தமைக்குச் சான்றுகும்.

இப்படியே பூத பௌதிக அறிவும் நிரம்பிய-வனாய் விளங்கினான் கம்பன். அதையும் ஓரளவு காணலாம்.

இக்காலத்தை 'அணுயுகம்' என்பது மரபாகி-விட்டது. இன்று விஞ்ஞான வளர்ச்சியால் அணு அறிவு தழைத்துள்ளது. நாற்பது ஆண்டுகட்கு முன்வரை 'அணு' என்பதே கடைசித் துகள்; அது பகுக்கப்பட முடியாத ஒன்று என்பதே விஞ்ஞானி களின் — ஆம், நவீன விஞ்ஞானிகளின் - முடிவு ''atom'' என்பதற்கு முற்கால ஆங்கில அகராதிகளில் ''last particle which cannot be cut or divided'' என்றே பொருள் விளக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்று, ''The atom may be considered as the smallest particle into which matter can be broken up by chemical means'' என்று பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. ஆனால், கம்பன் காலத்தில் அணுவைப்பற்றிய அறிவு எப்படியிருந்-திருக்கிறது என்பதைப் பார்க்கலாம். ''எங்கடா இருக்கிறான் நீ சொல்லும் இறைவன்?'' என்று உருமும் இரணியனுக்கு விடைதரும் பிரகலாதன்:

''அணுவினைச் சத கூறிட்ட கோணிலும் உளன்'' என்று உணர்த்துகிறான். 'கூறு' என்றால் ஒன்றனுக்கொன்று தரத்திலும், அளவிலும். ஒத்தது. அப்படி அணுவினை நூறு பங்காகக் கூறிடுதலைப்-பற்றிச் சொல்வதுடன், அப்படிக் கூறிட்ட அணுவின் நூற்றொரு பாகத்திற்குக் ''கோண்'' என்று பெயர் என்பதையும் இந்தக் கவிஞன் அறிந்து வைத்திருக்-கிறான். அதை நமக்குக் கற்பிக்கும் நல்லாசா-னாகவும் விளங்குகிறான்.

ஒரு மகாகவி எத்தனை எத்தனை கலைகளை, துறைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்-டும் என்பதற்குக் கம்பன்தான் ஒரு சிறந்த எடுத்துக்-காட்டு, இல்லையா ?

அற நூல்களும், நீதி நூல்களும் செய்வன இன்ன, செய்யத் தகாதன இன்ன என்பனவற்றை வரையறை செய்து கூறும். அது பலருக்குக் கசப்பான மருந்துபோன்றிருக்கும். எல்லோரும் அவற்றை மனத்திற் பதித்துக்கொள்வதும் கடினம். ஆனுல் அந்தக் கருத்துக்கள் கதையோடு கலந்து வருமேயானுல் யாவரும் நெஞ்சில் இருத்தி நெடும் பயன் பெறக்கூடும். சுவை மிக்க கனிச்சாற்ருேடு கலந்த கசப்பு மருந்தும் மகிழ்வுடன் பருகப்பட்டு உள்ளே சென்று நற்பயன் தருவது நாமெல்லாம் அறிந்த ஒன்றுதானே ?

அதனுல்தான் இராமாயணம், பாரதம், பெரிய புராணம் முதலான அரிய நூல்கள் பல நூற்ருண்டு களாக மக்களிடையில் பெரும் செல்வாக்குப்பெற்று விளங்குகின்றன. கற்ருேரிடையில் மட்டுமின்றிக் கல்வியறிவு இல்லாதவர்களிடையிலும் ராமகாதை முதலியன பரம்பரையாக வந்த கேள்வியறிவாலே நிலைத்து நின்று பயன்தந்து வருகின்றன.

தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் கம்பராமாயணம் அறியப்பெற்றுப் போற்றப்பெற்றது. மலேயா, ஜாவா, சுமத்ரா, செயாம் போன்ற வெளிநாடுகளிலும் கம்பராமாயணம் செல்வாக்குப்பெற்றது. சிற்பங்களும், மொழிபெயர்ப்பு வழிநூல்களும் அங்கெல்லாம் காணப்பெறுகின்றன.

கதையின் சிறப்பும், பாத்திரங்களின் உயர்வும், அவற்றுள் உணர்த்தப்பெறும் அறத்தின் மாண்பும், எல்லாவற்றிற்கும் மேலாகக் காப்பியத்தை அமைத்து நடத்திச்செல்லும் உத்தியுமே கம்பனுக்கு இத்துணைப் பெருமை ஏற்படக் காரணங்களாகும்.

இத்தகைய பெருங்காப்பியத்தில் நீதியுள்பட்ட அறம் எப்படிப் புகுந்து வேலை செய்கிறது என்பதை இனிப் பார்க்கலாம். பழச்சாறு தன்னுள் கசப்பான மருந்தை அடக்கிக்கொண்டிருந்தாலும் மருந்து

நமக்குக்கட் புலனாகாது. ஆனால் உள்ளே சென்றதும் மருந்து தன் பணியைச் செய்யத் தொடங்கிவிடும். அது மருந்தின் இயல்பு அல்லது ஆற்றல் இல்லையா?

அதைப்போலத்தான் **காப்பியம் என்னும் கனிச்சாற்றில் அறம் என்னும் மருந்து தன்னை இனம் காட்டாமல் ஒன்றிக்கிடக்கிறது. அது கண்வழியும், காதுவழியும் சென்று கருத்தில் சார்ந்து மன, மொழி, மெய்யை ஆட்கொள்ளு-கிறது.** இந்த வித்தையை கம்பன் அற்புதமாகச் செய்துள்ளான்.

அப்படி மறைந்துள்ள அறக்கூறுகள் சிலவற்-றைக் கண்டு மகிழ்வோம். வள்ளுவப் பேராசான் வகுத்த அறம்

" கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் "

என்று சட்டம்போல உணர்த்தும்.

இக்கருத்தை, நேரடியாக நமக்கு உணர்த்தாமல் கதையோடு கலந்து பாத்திரத்தின் உரையாடலில் நாடக அலங்காரத்துடன் வெளிப்படுத்தி நம்நெஞ்சில் நிலைபெறச் செய்துவிடுகிறான் கம்பன். கருத்து மட்டுமின்றிச் சந்த அமைதியும் சேர்ந்து விஷயத்தை எவ்வளவு அழுத்தமாக வெளியிடுகிறது என்பதைப் பார்ப்போம்.

மகாபலிச் சக்கரவர்த்தி வாமனனாக வந்த திரு-மாலுக்கு மூன்றடி மண் தர இசைந்து தாரை வார்த்துக்கொடுக்கப்போகிறான். அதை முக்காலமும் உணர்ந்த சுக்ராச்சாரியார் தடுக்கிறார். அப்பொழுது மாவலி சினந்து கூறுகிறான் !

எடுத்து ஒருவருக்கு ஒருவர் ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கு அழகிதோ ? தகைவில் வெள்ளி!

என விளித்து,

கொடுப்பது விலக்கு கொடியோய்! உனது சுற்றம்,
உடுப்பதுவும், உண்பதுவும் இன்றிவிடு கின்ருய்!

என்று பேசவைப்பதன்மூலம் கொடுப்பதைத் தடுப்பது எத்துணைப் பாபம் என்பதை எவ்வளவு உணர்ச்சியோடு வெளிப்படுத்துகிருன்! மாவலி கதையுடன் இந்த அறமும் ஒன்றிநின்று மக்கள் மனத்தைக் கவ்விப் பிடித்துக்கொண்டுவிடுகிறது அல்லவா ?

கானகத்தில், "சீதை, இலக்குவன் இருவருடன் ராமனையும் விட்டுவிட்டு வெறுந் தேரோடு எப்படி அயோத்தி செல்வேன் ? தயரதன் முதலியோருக்கு என்ன பதிலை எப்படி உரைப்பேன் ?" என்று தயங்கி மயங்கும் சுமந்திரனை நோக்கி இராமன் கூறும் அறிவுரை, அறவுரையாக மட்டுமின்றி அறங் கடைப்பிடிக்கும் ஆண்மைக்கேயன்றோ வரையறை கூறுகிறது !

நிறப் பெரும் படைக்கலம் நிறத்தின் நேர்உற
மறப் பயன் விளைத்திடல் வன்மை அன்றரோ !

ஒளிமிக்க கூரிய பெரிய ஆயுதம் நெஞ்சுக்கு நேர் வரும்பொழுது அஞ்சித் தளராமல் வீரச் செயல் புரிவதுதான் ஆண்மை என்பது சரியல்ல! ஆனல் எது ஆண்மையாளனுக்கு மிகச் சிறந்தது என்று கூறுகிருன். பின் இரண்டு அடிகளில் இராமன் :

இறப்பினும், திருஎலாம் இழப்ப எய்தினும்,
துறப்பிலர் அறம் எனல் சூரர் ஆவதே !

உயிரே போயினும், எல்லாச் செல்வங்களையும் பறிகொடுத்தாலும், அறத்தை-தரும நெறியை-கை விடமாட்டார் என்பதே "ஆற்றல் உடையோர்" என்பதற்கு மெய்யான இலக்கணம் என்று கூறுவது எவ்வளவு அழகாகவுள்ளது பார்த்தீர்களா ! இனி, மற்ருென்று :

இராமன்பால் உள்ள மெய்யன்பால், பக்திப் பரவசத்தால், கள்ளமில் உள்ளத்தனுன குகன், நல்ல மீனேயும், நறுந்தேனேயும் காணிக்கையாகக் கொண்டுவருகிருன். இராமனேச் சுற்றியுள்ள முனிவர்கள் எல்லாம் அவன் கொண்டுவந்த பொருளேக் கண்டு அருவருப்புற்று நோக்க, குகனின் உள்ளத்தன்பின் மேன்மையையும், தன்பால் உள்ள பரிவு (Sympathy)ப் பெருக்கத்தையும் பார்த்து,

"உள்ளத்து அன்பினுல் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்ருல்
அமிர்தினும் சீர்த்த அன்றே"

என்று கூறிய இராமன், முனிவர்கள் உள்ளக் கிடக்கையையறிந்து அவர்கட்கு அறிவுறுத்துவான் போல,

"பரிவினில் தழீய என்னில் பவித்திரம்"

என்று கூறுகிருன் பிறர்படும் துன்ப-துயரங்களில் தங்களேயும் ஆட்படுத்தி அவர்கள்மாட்டுக் கொள்-ளும் பரிவு இருக்கிறதே அந்தப் பரிவினுல் சூழப்-பட்ட எந்தப் பொருளும் பவித்திரம்; அதாவது புனிதத்தினும் பல மடங்கு மேம்பட்ட தன்மை என்கிருன்.

'பரிவினில் தழீய என்னில் பவித்திரம்"

என்ற அருமைக் கணிப்பு நமக்குக் கண்ணப்ப நாயனுரையும், அவர் செயல்களேயும், அதற்கு மகிழ்ந்த காளத்தியப்பனேயும் நினேவு கொள்ளச் செய்கிறது, இல்லேயா?

இன்று உலகம் முழுவதும் எதை ஒழித்தாலன்றி மக்கட் சமுதாயம் அமைதியாக வாழ முடியாதென்று கருதுகிறதோ அந்தப் போர் அகன்று உலகம் உய்ய அருமையான வழிவகுக்கும் அறம் கூறுகிருனே அதைப் பார்ப்போம், இனி!

தமிழகத்தில் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் போர் செய்தலும், வெற்றி கொள்ளலும், வாகை-

சூடிப் பெருமிதத்தோடு நகர்வலம் வருதலுமே பெரும் பெருமை எனக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

" எண்கொண்ட தொண்ணூற்றின்
மேலும் இரு மூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலன் "

என்றும்,

அடுத்தடுத்துச்

"சீறும் செருவில் திருமார்பில் தொண்ணூறும்
ஆறும் படுதழும்பின் ஆகத்தோன் "

என்றும்.

" தொழும்புடைய ஆகத்துத்
தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்ர சண்டன் "

என்றும்,

பலவாறாக வியந்து பாராட்டப்பட்ட மாமன்னன் விஜயாலயன் என்னும் சோழப் பேரரசன் காலத்தில் வாழ்ந்தவன் கம்பன். அவன் பொருதிவென்ற போர்களால் விளைந்த நாசங்களையெல்லாம் கண்டும், கேட்டும் பெரிதும் உள்ளம் நைந்து புழுங்கி-யிருக்கிறான். போர் வெறிக்கு மூலகாரணம் புகழ் பெறும் ஆர்வமே! என்பதையும் கண்டுள்ளான்.

எனவே போர் ஒன்றுதான் புகழுக்கு வித்து என்பதை மாற்றவேண்டும்; போரையும் தடுக்க-வேண்டும்; இதை ஒரு தக்க வேளையில் தக்க பாத்திரத்தின்மூலம் உலகுக்கு உணர்த்த முயல்கிறான், கம்பன்.

இராமனுக்கு முடிசூட்டு விழா; அதற்கு முந்திய தினம், குல குருவான வசிட்டன், மனித அறம் முதலாக மன்னன் கடைப்பிடிக்கவேண்டிய உறுதிப் பொருள்களை இராமனுக்கு உணர்த்துகிறான்.

அவற்றுள் ஒன்றை மிகவும் வலியுறுத்திக் கூறுகிறுன் வசிட்டன்.

முதலில் கவியைப் பார்ப்போம்;

**'' யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?''**

எவருடனும் பகைமை கொள்ளாவிட்டால் போர் அற்றுப்போகும்; அதனுல் புகழ் மங்கிப்போகாது! ஒரு மன்னனின் ஆட்சியும், அவன் வாழ்வும் குறைவுபடாது. அந்த நிலே ஏற்பட்டுவிட்டால் எந்த ஒரு மன்னர் குலத்தையும் அடியோடு அழிய வேண்டுமென்று எவரும் சபித்துக்கொண்டிருக்கவும் மாட்டார்கள்.

எத்தகைய அறவுரை! அறிவுரை! அருளுரை! ஆயிரம் ஆண்டுகட்கு முன்னேயே காந்தியுகம் பிறந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது! போர் ஒழிந்து உலகெலாம் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவ நாமும் ஆண்டவனே வேண்டி நிற்போமாக! வாழ்க கம்பன்! வாழ்க உலகம் எல்லாம்!

கம்பராமாயணம்

கடவுள் வணக்கம்

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் நீங்கலா
அல(கு)இ லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே.

எல்லா உலகங்களும் உண்டாகுமாறு படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய முத்தொழிலையும் திருவிளையாட்டாகச் செய்பவரே அனைத்துலகிற்கும் தலைவர் ஆவர். அத்தலைவருக்கே நாங்கள் அடைக்கலப் பொருளாக இருக்கின்றோம்.

தமிழில் இராமன் கதை

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவி னார்உரை யின்படி, நான்தமிழ்ப்
பாவி னால்இ(து) உணர்த்திய பண்(பு); அரோ.

வடமொழியில் இராமன் கதையைச் செய்த வான்மீகி, வசிட்டர், போதாயனர் என்ற மூவர் நூல்களிலும் எந்த எந்த இடத்தில் எவர் கருத்துச் சிறக்கின்றதோ, அவர் கருத்தைத் தழுவி இக்கதையை நல்ல தமிழ்ச் செய்யுட்களால் நான் அமைத்துள்ளேன்.

கடவுளும் சமயங்களும்

கல்இடைப் பிறந்து போந்து
கடல்இடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும்
இயம்பரும் பொருள்ஃ(து) என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்,
துறைதொறும், பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்த(து); அன்றே.

மலையில் தோன்றி, இடையில் பலபலவாகப் பிரிந்து கடைசியில் கடலிற் கலக்கும் ஆற்றிற்குச் சமயநெறி உவமானம் கூறப்படுகிறது. முதலில் ஒன்றாக இருந்த சமயம் பல திறப்பட்ட ஆன்மாக்களின் நிலைமைக்கும், இடம், சுற்றம் ஆகியவற்றிற்கும் ஏற்றவாறு பல மதங்களாகப் பிரிந்து, கடைசியில் ஒரே முடிவை அடைகின்றது. எல்லா மதங்களுக்கும் தலைவனாவான் ஒரே கடவுள்.

[கடல் கடவுளுக்கும், நதி சமயங்களுக்கும் உவமானம்]

அவையடக்கம்

வாங்கரும் பாதம் நான்கும்
வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்;
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை,
அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசல் உற்ருன்
என்ன,யான் மொழியல் உற்றேன்.

ஒரு சுலோகத்தின் ஓர் அடியை எடுத்துவிட்டு, வேறு சொற்களால் அவ்வடியை நிரப்பினும் அது சிறப்புடையதாகாது என்று சொல்லும்படி வான்மீகி இனிய சுலோகங்களால் கோசல நாட்டு வளத்தைப் புகழ்ந்து பாடி-யிருக்கிருர். அவ்வாறு அவர் பாடியதை இராமனிடத்திலுள்ள அன்பாகிய கள்ளையுண்டு நான் மொழியத் தொடங்குகிறேன்.

மருத நிலவளம்

தண்டலை மயில்கள் ஆடத்,
தாமரை விளக்கம் தாங்கக்,
கொண்டல்கள் முழவின் ஏங்கக்,
குவளைகண் விழித்து நோக்கத்,
தெண்திரை எழினி காட்டத்,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம்வீற்(று) இருக்கும் மாதோ.

தாமரைகள் விளக்குகளை ஏந்தவும், மேகங்கள் வாத்தியங்களை வாசிக்கவும், மகர யாழ் வாசிப்பதுபோல் வண்டுகள் பாடவும், அலைகள் திரைச் சீலைகள்-போல் தோன்றவும், மயிலாகிய நாட்டிய மாது ஆட, குவளைகளாகிய கண்-களால் அவையினர் விழித்துப் பார்க்கவும், மருதமாகிய அரசன் கொலு-வீற்றிருக்கிருன்.

நாட்டு வளம்

கலம்சு ரக்கும் நிதியம்; கணக்கிலா
நிலம்சு ரக்கும் நிறைவளம்; நன்மணி
பிலம்சு ரக்கும்; பெறுதற்(கு) அரியதம்
குலம்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்.

கடல் வழியாகக் கப்பலிலிருந்து அளவற்ற நிதியங்கள் குவிகின்றன; விளை நிலங்களிலிருந்து வரும் வளங்கள் நிறைகின்றன; சுரங்கங்களிலிருந்து விலையுயர்ந்த இரத்தினங்கள் கிடைக்கின்றன; எல்லாக் குலத்தினரும் தேசீய ஒழுக்கப்படி நடக்கின்றனர்.

நாட்டில் இல்லாதவை

வண்மை இல்லை,ஓர் வறுமை இன்மையால்,
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் யுரைஇ லாமையால்;
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்.

அந்நாட்டில் பொய் பேசுவோர் இன்மையால் உண்மையென்று ஒன்று இல்லை. பகைஞரே இல்லாமையினால் வலிமையென்று ஒன்று இல்லை. ஏழைகள் ஒருவரும் இன்மையால் ஈகையென்று ஒன்று இல்லை. அனைவரும் கற்றிருத்தலால் 'அறிவுடைமை'யென்று ஒன்று இல்லை.

நாட்டில் கல்வியும் செல்வமும்

கல்லாது நிற்பார் பிறர்இன்மையின், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாரும் இல்லை;
எல்லாரும் எல்லாப் பெரும்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை; மாதோ.

அந்நகரத்தில் ஆண் பெண் அனைவரும் கற்றிருந்தவர்களாக இருத்தலால், கற்றவரும் கல்லாதவரும் அங்கில்லை. எல்லாவிதச் செல்வங்களும் எல்லாருக்கும் பொருந்த இருத்தலால் அங்கு ஏழைகளும் இல்லை. பணக்காரர்களும் இல்லை.

ஆட்சிப் பெருமை

வயிரவாள் பூண்அணி மடங்கல் மொய்ம்பினன்,
உயிர்எலாம் தன்உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிர்இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர்எலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்.

தசரதன் தன் குடிமக்களையெல்லாம் தன்னுயிராக எண்ணிப் பாதுகாத்து வந்தான். இரத்தினங்கள் பதித்த ஆபரணங்களை அணிந்த சிங்கம்போலும் வலிய தோளையுடைய தசரதன், உலக மக்களையெல்லாம் தன்னுயிராகக் கருதிப் பாதுகாத்ததனாலே, அவற்றிற்கு ஓர் உடம்புபோல் இருந்தான்.

இராமனின் பிறப்பு

ஒருபகல் உலகெலாம் உதரத் துள்பொதிந்(து)
அருமறைக்(கு) உணர்வரும் அவனை, அஞ்சனக்
கருமுகில் கொழுந்(து)எழில் காட்டும் சோதியைத்
திருஉறப் பயந்தனள் திறம்கொள் கோசலை.

மகாப் பிரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தன் வயிற்றில் அடக்கிப் பிரளயம் நீங்கியதும் அவற்றை முன்புபோல் உமிழ்ந்து வெளிப்படுத்துகின்ற கடவுளாகிய திருமாலைக் கோசலை தன் வயிற்றிலிருந்து ஈன்றாள்.

இராமன் கருணை

எதிர்வரும் அவர்களை, எமையுடை இறைவன்,
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர,
'எதுவினை? இடர்இலை? இனிதுநும் மனையும்,
மதிதரு குமரரும், வலியர்கொல்?' எனவே.

சோலை முதலிய இடங்களுக்குச் சென்று அரண்மனைக்குத் திரும்பும் பொழுது தமக்கு எதிர்ப்பட்ட நகர மாந்தர்களைக் கண்டு, "என்ன தொழில் செய்கிறீர்கள்? நலமாக இருக்கிறீர்களா? மனைவியும் குமரரும் நலமாக இருக்கிறார்களா?" என்று விசாரித்து வருவான்.

தாடகை வதம்

சொல்ஒக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்
அல்ஒக்கும் நிறத்தி னுள்மேல்
விடுத்தலும், வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்கா(து)
அப்புறம் கழன்று; கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள்எனப் போயிற்(று); அன்றே.

முனிவர் சபிக்கும் சாபத்தைப்போன்ற இராமனது அம்பு, தாடகையின் வயிரமலைபோன்ற மார்பில் பட்டு உருவி, அற்பர்களுக்கு அறிஞர்கள் கூறும் நல்ல கருத்துக்கள் அவர்கள் மனத்தில் தங்காது ஓடிவிடுவதுபோல் ஓடிவிட்டது.

இராமன் திறம்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;
இனிஇந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர்
துயர்வண்ணம் உறுவ(து) உண்டோ !
மைவண்ணத்(து) அரக்கி போரில்
மழைவண்ணத்(து) அண்ண லே,உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன்;
கால்வண்ணம் இங்குக் கண்டேன்.

'கரிய நிறத்தையுடைய இராமனே! நின் பாதம் பட்டதால் அகலிகை பழைய உருவத்தை அடைந்தாள். நீ மனிதனாக அவதாரம் செய்தபடியால் இனி இந்த உலகிற்கு ஒரு குறையும் உண்டாகாது. உனது கையின் திறமையைத் தாடகை வதத்தில் கண்டேன். இங்கு (அகலிகை சாப விமோசனத்தால்) உன் காலின் திறத்தைக் கண்டேன்'.

இராமனும் சீதையும்

எண்அரு நலத்தினுள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றைஒன்(று)
உண்ணவும், நிலைபெரு(து) உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினள்.

இவ்வாறு மிதிலை நகரின் பல வளங்களையும் கண்டு சென்ற மூவரும் அரச வீதியில் சென்றபொழுது அரண்மனையின் மேல்நிலையில் இருந்த சீதையை, இராமன் நோக்க அவளும் இராமனை நோக்கினள்.

வில் முறிதல்

தடுத்(து)இமை யாமல் இருந்தவர், தாளின்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்;
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையில்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்.

இவன் வில்லை வளைப்பானே என்னவோ என்று கண் இமைப்பைத் தடுத்து, விடாமல் பார்த்துக்கொண்டிருந்த அத்தனைபேரும், இராமன் கையில் வில்லை எடுத்ததைக் கண்டார்கள். அடுத்த கணம் அவ்வில் ஒடிந்ததைக் கேட்டார்கள். மற்று எடுத்த வில்லைக் காலில் வைத்ததையும், நாண் பூட்டியதையும் கண்டிலர்.

இராமன் அழகைக் கண்டோர்

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத்(து) அன்னான்
உருவுகண் டாரை ஒத்தார்.

இராமனுடைய தோள்களையும் பாதங்களையும் கைகளையும் பிற அவயவங்களையும் கண்ட மகளிர், தாம் கண்ட அந்த ஓர் அவயவத்தைத்தவிர அடுத்த அவயவத்தின் அழகை அறிந்தாரில்லை. அக்கூட்டத்துள் வந்த பெண்களுள் அவனது முழுவடிவத்தின் அழகையும் கண்டவள் எவளும் இல்லை. இறைவனை அடைதற்குரிய பலவகை நெறிகளில் ஒன்றனையே மேற்கொண்ட சமயவாதிகளின் நிலையை ஒத்திருந்தது அம்மகளிரின் நிலை.

சீதையின் எழில்

சங்கம்கை உடைமை யாலும்,
　　தாமரைக் கண்ண தாலும்,
எங்கெங்கும் பரந்து வெவ்வே(று)
　　உள்ளத்தின் எழுதிற்(று) என்ன
அங்கங்கே தோன்ற லாலும்,
　　அருந்ததி அனைய கற்பின்
நங்கையும் நம்பி ஒத்தாள்;
　　நாம்இனிப் புகல்வ தென்னே !

சீதை இராமனைப்போலவே காணப்பட்டாள். எங்ஙனமெனின் இராமனுக்கும் கையில் சங்கம் (திருமாலிடமுள்ள பாஞ்சசன்னியம் என்னும் சங்கம்) உண்டு. சீதைக்கும் சங்கம் (வளையல்கள்) உண்டு. இராமன் தாமரைக் கண்ணன்; பிராட்டியாரும் தாமரைபோன்ற கண்ணைக்கொண்டவள். சீதையின் உருவைக் கண்டவர்கள் உள்ளத்தில் வேறு எதைப்பார்த்தாலும் சீதையின் உருவமே தோன்றுகிறது. இராமனும் எல்லாருடைய உள்ளத்திலும் தோன்றுபவன். இத்தன்மையினால் சீதை இராமனை ஒக்கின்றாள் என்பது கருத்து.

சீதா கல்யாணம்

வெய்ய கனல்தலை, வீரனும் அந்நாள்
மையறு மந்திரம் மும்மை வழங்கா,
நெய்அமை ஆவுதி யாவையும் நேர்ந்தே,
தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்.

இராமன் ஓமம் வளர்த்தல் முதலிய சடங்குகள் அனைத்தையும் செய்து சீதையின் கையைப் பிடித்தான்.

தசரதன் எண்ணம்

'பெருமகன் என்வயின் பிறக்கச் சீதையாம்
திருமகள் மணவினை தெரியக் கண்டயான்,
அருமகன் நிறைகுணத்(து) அவனி மா(து), எனும்
ஒருமகள் மணமும்கண்(டு), உவப்ப உன்னினேன்'.

என் மகனான இராமன் சீதையைத் திருமணம் செய்யக்கண்ட நான், இனி அவன், பூமிதேவியையும் திருமணம் செய்யக் கண்டு மகிழ விரும்புகிறேன்.

கூனி குறுக்கிட்டாள்

தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்;
ஊன்றிய வெகுளியாள்; உளைக்கும் உள்ளத்தாள்;
கான்(று)எரி நயனத்தாள்; கதிக்கும் சொல்லினாள்;
மூன்றுல கினுக்கும்ஓர் இடுக்கண் மூட்டுவாள்.

நெஞ்சு துடிக்க, கோபம் அதிகரிக்க, மனம் கலங்க, கண்ணில் கனல் பொறி பறக்க, உரத்துப் பேசும் சொல்லோடு மூன்று உலகங்களுக்கும் துன்பத்தை உண்டாக்குபவளாகத் தோன்றினாள்.

கைகேயி பேசினள்

'ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள, நீபோய்த்
தாழ்இரும் சடைகள் தாங்கித்,
தாங்கரும் தவம் மேற்கொண்டு,
பூழிவெம் கானம் நண்ணிப்,
புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழிரண்டு ஆண்டில் வாஎன்(று)
இயம்பினன் அரசன்' என்ருள்.

'இந்த நிலமெல்லாம் பரதன் ஆளவும், நீ சடை முடி தரித்து, தவத்தை மேற்கொண்டு வனங்களுக்குச் சென்று, அங்குள்ள புண்ணிய நதிகளில் நீராடிப் பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் திரும்பி வருக' என்று அரசர் உனக்குக் கட்டளையிட்டார் என்று கைகேயி இராமனிடம் கூறினள்.

இராமன் தாயிடம் சென்ருன்

குழைக்கின்ற கவரி இன்றிக்,
கொற்றவெண் குடையும் இன்றி,
இழைக்கின்ற விதிமுன் செல்லத்,
தருமம்பின் இரங்கி ஏக,
'மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்'என் றென்று
தழைக்கின்ற உள்ளத்(து) அன்னள்
முன்,ஒரு தமியன் சென்ருன்.

தன் மகன் முடிசூடும் கோலத்தோடு, தன்னைக் காணவருவான் என்ற மகிழ்ச்சி தழைக்க நின்ற கோசலையின் மாளிகைக்கு, அவை ஒன்றும் இன்றி விதி முன்னே செல்லவும், தருமம் பின்னல் வருந்தித் தொடரவும் இராமன் தனியாக அங்கே வந்தான்.

இலக்குவனும் சீதையும்

'நீர்உள எனின்உள மீனும் நீலமும்;
பார்உள எனின்உள யாவும்; பார்ப்புறின்
நார்உள தனுஉளாய்! நானும், சீதையும்
ஆர்உளர் எனில்உளேம் அருளு வாய்'என்ருன்.

''இராமபிரானே ! ஒரு குளத்தில் தண்ணீர் இருக்குமானல் அங்கே மீனும் நீலோத்பலமும் இருக்கும்; பூமி இருக்குமானல் அதிலிருந்து உண்டாகும் பொருள்கள் எல்லாம் இருக்கும். அதுபோல நானும் சீதையும் உயிர்வாழ்ந்திருப்பது யாரால் என்று நினைக்கிறீர்?'' என்று தன்னை வனத்திற்கு வரவேண்டாமென்ற இராமனிடம் இலக்குவன் கூறினன்.

ஊழ்வினை

'வாழ்வினை நுதலிய மங்க லத்துநாள்
தாழ்வினை அதுவரச் சீரை சாத்தினன்;
சூழ்வினை நான்முகத்(து) ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவர்பால் ஒழிக்கற் பாலதோ!'

'அரச போகம் குறித்த அந்த மங்கல நாளில் தாழ்நிலைமையுடையதாகிய மரவுரியை இராமன் உடுத்தினன்; அந்த நான்கு முகத்தையுடைய பிரம்மாவே பாதுகாக்க நினைத்தாலும், ஒருவருக்கு உற்ற ஊழ்வினையை ஒழிக்கமுடியுமா?' என்று வசிட்டர் வருந்தினர்.

இராமன் காடு செல்லல்

தையல்தன் கற்பும்,தன் தகவும், தம்பியும்,
மையறு கருணையும், உணர்வும், வாய்மையும்,
செய்யதன் வில்லுமே சேமம்ஆ கக்கொண்டு
ஐயனும் போயினன் அல்லின் நாப்பணே.

சீதையின் கற்பும், தனது நற்குணமும், கருணையும், அறிவும், உண்மையும், தன் வில்லும், தன் தம்பியுமாகிய இவற்றைத் துணையாகக்கொண்டு நடு இரவில் இராமன் காட்டில் சென்றான்.

குகன்

காழம் இட்ட குரங்கினன்; கங்கையின்
ஆழம் இட்ட நெடுமையி னன்; அரை
தாழ விட்டசெந் தோலன்; தயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினன்.

கால் உடை அணிந்தவனும், கங்கையின் ஆழத்தைப்போல நெடியவனும், இடுப்பில் தோலாடை உடுத்தியவனும், புலிவாலாகிய கச்சையை அணிந்தவனுமாய்க் குகன் தோன்றினன்.

குகன் பரதனைப் புகழ்தல்

'தாய்உரை கொண்டு,தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச், சிந்தனை முகத்தில் தேக்கிப்,
போயினை என்ற போழ்து, புகழினோய் தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!'

''தாயின் வார்த்தையை மேற்கொண்டு, உன் தந்தை உனக்குக் கொடுத்த பூமியாளும் பொறுப்பை, 'இது பாரம்' என்று விலக்கித் துன்பம் நிறைந்த முகத்தோடு நீ காட்டிற்கு இராமனை அழைத்துவர வந்ததை உணருமிடத்து, ஆயிரம் இராமர்கள் சேர்ந்தாலும் உன் ஒருவனுக்கு இணையாவார்களா?'' என்று குகன் பரதனைப் புகழ்ந்தான்.

இலக்குவன் நிலையைக் குகன் கூறினன்

'அல்லைஆண்(டு) அமைந்த மேனி
அழகனும், அவளும் துஞ்ச,
வில்லைஊன் றியகை யோடும்,
வெய்(து)உயிர்ப் போடும், வீரன்
கல்லைஆண்(டு) உயர்ந்த தோளாய் !
கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான் !
இமைப்பிலன் நயனம்' என்றான்.

இராமனும் சீதையும் தூங்கும்பொழுது, இலக்குவன் கையில் வில்லை ஊன்றிக்கொண்டு, பெருமூச்சோடு விடியுமளவும் சற்றும் கண் இமையாமல் அவர்களைப் பாதுகாத்து நின்றான்.

தசரதன் மறைவால் இராமன் வேதனை

'நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனிஅறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல்வேந்தர் ஏறே! இறந்தனையே!
அந்தோ! இனிவாய்மைக்(கு) ஆர்உளரே! மற்(று)'என்றான்.

''நந்தா விளக்கைப்போன்று புகழ் குன்றாது வாழ்ந்த தலைவனே! இவ்வுலகிற்குத் தந்தையே! தருமத்திற்கு ஒரு தாயே! கருணைக்கோர் நிலக்களமானவனே! எமது தந்தையே! பகையரசர்களுக்கு ஆண் சிங்கமே! இறந்து விட்டீரே! ஐயோ! உண்மையைக் காப்பதற்கு உலகத்தில் இனி யார் இருக்கிறார்கள் ?'' என்று இராமன் புலம்பினான்.

பரதன் நிலை

நந்தியம் பதியிடை, நாதன் பாதுகம்
செந்தனிக் கோன்முறை செலுத்தச், சிந்தையான்
இந்தியங் களைஅவித்(து) இருத்தல் மேயினன்
அந்தியும் பகலும்நீர் அறாத கண்ணினன்.

திரும்பிச்சென்ற பரதன், அயோத்தி போகாமல் நந்திக் கிராமம் என்ற ஊரில் போய், இராமனது பாதுகை அரசாட்சி செய்ய, தான் இராப்பகலும் அழுத கண்ணீரையுடையவனாய் மனவலியினால் ஐம்பொறிகளையும் அடக்கி இருந்தான்.

கோதாவரியின் கரையில்

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்;
மாதவள் தானும், ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.

அங்கே விளையாடும் அன்னங்களின் நடையையும் தன்னோடு வரும் சீதையின் நடையையும் ஒப்புமை நோக்கி இராமன் சிறிய முறுவல் செய்தான். சீதை, அங்கே நீருண்டு செல்லும் ஆண் யானைகளின் நடையையும் தன்னோடு உலாவும் இராமனின் நடையையும் ஒப்புமை நோக்கி இதுவரையும் சிரித்திராத சிரிப்பை உடையவளானாள்.

சூர்ப்பணகை வருகிறாள்

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடிகள் ஆகி,
அம்சொல்இள மஞ்ஞைஎன, அன்னம்என, மின்னும்
வஞ்சிஎன, நஞ்சம்என, வஞ்சமகள் வந்தாள்.

வஞ்சனையுடையவளாகிய அவள் ஒரு மின்னற்கொடியைப்போல் அழகிய வடிவம் எடுத்துக்கொண்டு மயில்போலும் தோற்றத்தோடு அன்னமென நடந்து வந்தாள்.

சூர்ப்பணகை புலம்புகிறாள்

'நசையாலே மூக்கிழந்து,
நாணம்இலா நான்பட்ட
வசையாலே நினதுபுகழ்
மாசுண்ட(து) ஆகாதோ !
திசையானை விசைகலங்கச்,
செருச்செய்து, மருப்(பு)ஒசித்த
இசையாலே நிறைந்த புயத்(து)
இராவணவோ ! இராவணவோ !'

''திக்கு யானைகளோடு போர்புரிந்து அவற்றின் கொம்பை ஒடித்த புகழாலே நிறைந்த புகழையுடைய இராவணா! இராவணா!! ஆசையினாலே நான் மூக்கிழந்து அவமானமடைந்தது உன் கீர்த்திக்குக் குறைவாகாதா ?''

இலங்கையின் முதல் அழுகுரல்

முழவினில், வீணையில், முரளி, யாழினில்
தழுவிய குழலினில், சங்கில், தாரையில்
எழுகுரல் இன்றியே, என்றும் இல்ல(து) ஓர்
அழுகுரல் பிறந்த(து)அவ் விலங்கைக்கு அன்(று); அரோ.

எங்கே பார்த்தாலும், எப்பொழுதும் முழவு, வீணை, புல்லாங்குழல், யாழ், ஆம்பலந்தீங்குழல், வெற்றிச்சங்கு, தாரை ஆகியவற்றின் ஓசையைத் தவிர வேறு ஓசையைக் கேட்டறியாத இலங்கையில், இன்று என்றுமில்லாத புலம்பலோசை புதிதாகக் கேட்கிறது.

இராவணனுக்கு ஆசை மூட்டும் சூர்ப்பணகை

'இந்திரன் சசியைப் பெற்ருன்,
இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்ருன்;
தாமரைச் செங்க ணுனும்
செந்திரு மகளைப் பெற்ருன்;
சீதையைப் பெற்ருய் நீயும்,
அந்தரம் பார்க்கின், நன்மை
அவர்க்கிலை உனக்கே ஐயா !'

''இந்திரன் இந்திராணியையும், சிவபெருமான் உமாதேவியாரையும், திருமால் இலக்குமியையும் மனைவியராகப் பெற்றதைப்போல நீயும் சீதையைப் பெற்றிருக்கின்ருய். இதில் அவர்களுக்கும் உனக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்த்தால் நீ பெற்ற நன்மை அவர்களுக்கு இல்லை''.

இராவணன் நிலை

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்ருன்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினுன் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட
மங்கையை மறந்தி லாதான்.

சீதையின் அழகிய வடிவம் பரவியதால் இராவணனது முழு மனமும் அவளை நினைத்தவாறிருந்தது. மன்மத பாணத்திஞல் வருந்திய அவன் வேருென்றையும் நினைக்க முடியவில்லை. பிறன் மனைவியைத் தீண்டிஞல் தனக்கு அழிவு நேரும் என்ற சாபத்தையும் மறந்தான். கரன் முதலிய உடன்பிறந்தார்களைக் கொன்று தங்கையின் மூக்கரிந்தவனது வலிமையைக்கூட மறந்திருந்தான்.

மாரீச மாயமான்

'காயம் கனகம்; மணிகால், செவி, வால்
பாயும் உருவோ(டு) இதுபண்(பு) அலவால்;
மாயம், எனல்அன் றிமனக் கொளவே
ஏயும்,இறைமெய் அல,என் றளவே'.

உடம்பு முழுதும் பொன் மயம்; காலும், செவியும், வாலும் இரத்தின மயம். 'இப்படிப்பட்ட மான் தோன்றுவது ஏதோவொரு மாயமாக இருக்குமேயன்றி உண்மையாக இருக்குமா' என்று எல்லோரும் ஐயுறும்படி இருந்தது.

இராவணன் சீதையை எடுத்தல்.

ஆண்டா யிடைதீ யவன், 'ஆ யிழையைத்
தீண்டான் அயன்முன் உரைசிந் தைசெயாத்;
தூண்தான் என்லாம் உயர்தோள் வலியால்,
கீண்டான் நிலம்யோ சனைகீழ்ப் புடையே.

அப்பொழுது அவன் பிரமன் கொடுத்த சாபத்தை நினைத்து, அவளைத் தீண்டாதவனாகிப் பூமியை ஒரு யோசனை தூரம் அவள் இருந்த இடத்தோடு பெயர்த்தான்.

சடாயு இராம இலக்குவரைத் தேற்றுதல்.

'அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ !
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ ?'

''ஒருவருக்குப் பழைய வினைப்படி இன்ப துன்பங்கள் வரும்; புதிதாக ஒன்றையும் உண்டாக்கிக்கொள்ள முடியாது. ஆதலால் இது முற்பிறப்பில் செய்த வினையின் பயனென்று அமைதியாக இருக்கவேண்டும். விதியை நமது மதியால் வெல்ல முடியுமா ?''

இராமன் அநுமனைப்பற்றி இலக்குவனிடம் கூறுதல்.

'இல்லாத உலகத் தெங்கும்,
 இங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும், வேதக்
 கடலுமே; என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற்(று) அன்றே;
 யார்கொல் இச் சொல்லின் செல்வன்,
வில்லார்தோள் இளைய வீர,
 விரிஞ்சனோ! விடைவல் லானோ ?'

''இளையவனே ! இவன் சொற்களிலிருந்து எல்லாக் கலைகளையும் வேதங்களையும், இவன் நன்கு கற்றவனென்று தெரிகிறது. ஆதலின் இவனை ஒரு சொல்லின் செல்வனென்று கூறலாம். இவன் பிரமனோ? சிவபெருமானோ?'' என்று இலக்குவனை வினவினன்.

சுக்கிரீவன், இராமன் ஆகிய இருவரின் தோற்றம்.

கூட்டம்ஒத் திருந்த வீரர்,
  குறித்தது ஓர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும், பின்னர்
  முயற்சியும், இயைந்த(து) ஒத்தார்;
மீட்டும்வாள் அரக்கர் என்னும்
  தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு
  ஞானமும் கிடைத்த(து) ஒத்தார்.

சுக்கிரீவனையும் இராமனையும் நோக்கினால் அரக்கர்களை வேரோடு அழிக்கத் தவமும், முயற்சியும் கூடி நிற்பது போலவும் கல்வியும் ஞானமும் கூடி நிற்பது போலவும் காணப்பட்டனர். இது கவிக்கூற்று.

வாலியின் மார்பில் பாய்ந்த அம்பில்

மும்மைசால் உலகுக் கெல்லாம்
  மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
  தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
  மருந்தினை, இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக்
  கண்களில் தெரியக் கண்டான்.

மூன்று உலகங்களுக்கும் மூலமந்திரமாக இருப்பதும், தன்னை எண்ணுகின்றவர்களுக்குத் தன்னையே கொடுக்கும் சொல்லும், பிறவி நோய்க்கு மருந்தாய் இருப்பதும் ஆகிய இராம மந்திரத்தை அம்பில் தன் கண்களால் கண்டான்.

வாலி கேட்ட கேள்வி

'வீரம் அன்று; விதிஅன்று; மெய்ம்மையின்
வாரம் அன்று; நின் மண்ணினுக்(கு) என்உடல்
பாரம்அன்று; பகையன்று; பண்(பு)ஒழிந்(து)
ஈரம் இன்றிஇ(து) என்செய்த வா(று)அரோ?'

"நீ என்னைக் கொன்ற இச்செயல் உன் வீரத்திற்கும் பொருந்தாது; அரச நீதிக்கும் ஒவ்வாது; நல்லொழுக்கத்திலும் சேராது; நீ ஆளும் இந்தப் பூமிக்கு என் உடல் ஒரு பாரமும் அன்று; நான் உனக்குப் பகைவனும் அல்லன்; உன்னுடைய பண்புடைமை நீங்கி உன் அன்புக்கு மாறாக இச்செயலைச் செய்தது எதனால் ?"

மன்னிப்பு வேண்டல்.

'தாய்என உயிர்க்கு நல்கித், தருமமும், தகவும், சால்பும்
நீஎன நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய்என நின்ற எம்மால் நவைஉற உணர லாமே!
தீயன பொறுத்தி!' என்ருன்; சிறியன சிந்தி யாதான்.

''உயிர்களுக் கெல்லாம் ஒரு தாயைப் போல அருள் சுரந்து, அறம், ஒழுக்கம், மேன்மைக் குணம் இவற்றிற் கெல்லாம் ஒருவனேயாகி நின்ற ஆடவரிற் சிறந்தவனே! பரம் பொருளாகிய நீ செல்லும் உயர் நெறியை உற்று அறிதற்குரிய நேரான அறிவு நாய் போன்ற எங்களிடத்தில் உண்டா? நான் சொன்ன கொடிய சொற்களைப் பொறுத்தருள்வாயாக'' என்று பெருமைக் குணமுடைய வாலி சொன்ஞன்.

சுக்கிரீவன் அனுமனிடம் கூறல்.

'வள்ளல் தேவியை வஞ்சித்து வவ்விய
கள்ள வல்அரக் கன், செலக் கண்டது,
தெள்ளி யோய்! அது தென்திசை என்பதோர்
உள்ள மும்எனக்(கு) உண்டென உன்னுவாய்.'

''தெளிந்த அறிவுடைய அனுமானே! நமது வள்ளலாகிய இராமபிரானது தேவியாரை இராவணன் கள்ளத்தனமாக வஞ்சித்து எடுத்துச் சென்றது தெற்குத் திக்கு என்று நான் நினைக்கிறேன். நீயும் அதை நினைத்துப்பார்'' என்று கூறிஞன்.

இராமன் அனுமனிடம் சீதைக்குச் சொல்லியனுப்பல்.

'முன்னைநாள், முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீள் மாலையான் வேள்விகா ணியசெல,
அன்னம்ஆ டும்துறைக்(கு) அருகில்நின் ருளை அக்,
கன்னிமா டத்திடைக் கண்டதும், கழறுவாய்!'

''முன்பு கோசிக முனிவரோடு சனகன் யாகத்தைக் காணும்பொருட்டு மிதிலை நகருக்குள் செல்லும்பொழுது, அரசவீதியில், கன்னிமாடத்தில் சீதை நிற்க, நாங்கள் இருவரும் கண்டு கொண்டதைப்பற்றிச் சொல்வாயாக.''

அனுமன் கண்ட இலங்கை மாந்தரின் நிலை.

'பளிக்கு மாளிகைத் தலந்தொறும்,
இடந்தொறும், பசுந் தேன்
துளிக்கும் கற்பகத் தண் நறும்
சோலைகள் தோறும்,
அளிக்கும் தேறல் உண்(டு), ஆடுநர்,
பாடுநர் ஆகிக்
களிக்கின் றார்அலால், கவல்கின்றார்
ஒருவரைக் காணேன்.'

'பளிங்குக் கல்லினால் செய்யப்பட்ட மாளிகையின் இடங்களிலும், ஏனைய இடங்களிலும், அங்கு அமைக்கப்பட்ட கற்பகச் சோலைகளிலும், எங்கே பார்த்தாலும் மதுவை உண்டு ஆடுகிறவர்களும் பாடுகிறவர்களுமாய் இருக்கின்றார்களே யன்றிக் கவலையுடையவர்களாக ஒருவருமே காணப்படவில்லை' என்று அனுமான் கூறினான்.

அனுமன் சீதையைக் கண்டு பாராட்டுதல்.

'மா(சு)உண்ட மணிஅனாள், வயங்கு வெங்கதிர்த்
தே(சு)உண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்;
கா(சு)உண்ட கூந்தலாள் கற்பும், காதலும்
ஏசுண்ட(து) இல்லையால்; அறத்துக்(கு) ஈ(று) உண்டோ?'

'மாசுபடிந்த இரத்தினம்போல் காணப்படுகிறாள்; சந்திரன் கலை குறைந்து தேய்ந்திருப்பதைப்போல் உடல் இளைத்திருக்கிறாள்; அவளுடைய கற்பிற்கும் இராமனிடத்தில் வைத்த காதலுக்கும் குறைவில்லை; அறத்திற்கும் அழிவு உண்டோ?' என்று சீதையைக் கண்ட அனுமான் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

சீதை தனக்குள் எண்ணுவது.

'அரக்கனே ஆக, வேறோர்
அமரனே ஆக, அன்றிக்
குரக்கினத்(து) ஒருவ னேதான்
ஆகுக; கொடுமை ஆக;
இரக்கமே ஆக; வந்(து) இங்(கு)
எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத்; தந்தான்
உயிர்; இதின்உதவி உண்டோ ?'

'இவன் அரக்கனாக இருந்தாலும் சரி; அல்லது வேறு தேவனாக இருந்தாலும் சரி; குரங்கா யிருந்தாலும் சரி: இவன் இங்கு வந்தது எனக்கு நன்மையாயினும் சரி; தீமையாயினும் சரி;. இப்பொழுது வந்து என் நாயகனது பெயரைக் கூறி, நெஞ்சை உருக்கி, அழிந்து போகும் என் உயிரைத் தந்தான்; இதைவிட எனக்குச் சிறந்த நன்மை உண்டோ ?'

சீதை இராமனுக்குச் சொல்லியனுப்பும் செய்தி.

'ஆரம் தாழ்திரு மார்பற்கு அமைந்த(து)ஓர்
தாரம் தான்அலளேனும், தயாஎனும்
ஈரம் தான்அகத்(து) இல்லேஎன் ருலும், தன்
வீரம் காத்தலே வேண்(டு)என்று வேண்டுவாய்.'

"அவர் என்னை மனைவி என்று மீட்காவிட்டாலும் அல்லது கருணையினுல் மீட்காவிட்டாலும் தன் விரதத்தைக் காத்தற்காவது வந்து மீட்கச் சொல்" என்று சீதை அனுமனிடம் கூறினுள்.

சீதை சூளாமணியை கொடுத்தனுப்புதல்.

'சூடை யின்மணி கண்மணி ஒப்பது; தொல்நாள்
ஆடை யின்கண் இருந்தது; பேர்அடை யாளம்;
'நாடி வந்(து) என(து) இன்உயிர் நல்கினை! நல்லோய்!
கோடி! என்று, கொடுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

"அனுமனே! நான் தலை உச்சியில் அணியும் இந்த மணி கண்மணியைப் போன்றது; பல நாட்களாக ஆடையில் முடிந்து மறைத்து நான் வைத்திருந்தது. இங்கு வந்து என்னைக் கண்டு சென்றதற்கு அடையாளமாக இதை இராமனிடம் கொடுப்பதற்குப் பெற்றுக்கொள்" என்று சீதை சூளாமணியை அனுமனிடம் கொடுத்தாள்.

அனுமன் இலங்கையை எரியூட்டத் தொடங்குதல்.

துன்னலர் புரத்தை முற்றும்
சுடுதொழில் தொல்லை யோனும்,
பன்னின பொருளும் நாணப்,
பாதகர் இருக்கை பற்ற,
'மன்னனை வாழ்த்திப், பின்னை
வயங்(கு)எரி மடுப்பன்' என்னுப்
பொன்னகர் மீதே தன்போர்
வாலினைப் போக விட்டான்,

முற்காலத்தில் திரிபுரங்களை எரித்த சிவபெருமானும், அவர் அது செய்தற்கு உதவியாயிருந்த தேர் முதலிய பொருள்களும் நாணமடையும்படி, 'முதலில் இராமனை வணங்கிக்கொண்டு பின், பாவிகளாகிய அரக்கர் இருப்பிடமான இலங்கை, பற்றி எரியும்படி சுடுவேன்' என்று தீர்மானித்து, நெருப்புச் சுற்றிய தன் வாலை நீட்டினுன்.

அநுமான் இராமனிடம் கூறுவது.

'கண்டனென் கற்பினுக்(கு) அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தொன்னகர்;
அண்டநா யக ! இனித் துறத்தி ஐயமும்,
பண்டுள துயரும்' என்று அனுமன் பன்னுவான்.

''கடலாற் சூழப்பட்ட இலங்கையிலே, கற்பினுக்கு அணிகலனாகிய பிராட்டியாரை என் கண்களால் நேரே கண்டு வந்தேன்; தேவநாயகனே! இனிப்பிராட்டியாரைப்பற்றிய ஐயமும் துயரமும் நீங்குவீராக'' என்று சொல்லுவானானன்.

அநுமன் கண்ட சீதை.

'வில்பெருந் தடந்தோள் வீர !
வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தள் ஆய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்(பு) என்ப(து) ஒன்றும்,
இரும்பொறை என்ப(து) ஒன்றும்,
கற்(பு)எனும் பெயர(து) ஒன்றும்,
களிநடம் புரியக் கண்டேன்.'

''ஐயனே ! கடலாற் சூழப்பட்ட இலங்கையிற் சென்று, தவவடிவிலிருந்த சீதையை நான் பார்க்கவில்லை; பின் எதைக் கண்டேனென்றால் உயர்குடிப் பிறப்பும், பெரிய பொறுமையும், கற்பும் ஆகிய மூன்றும் கலந்து களிப்பினால் நடம்புரிவதைப் பார்த்தேன்.''

வீடணன் அறவுரை.

'கோநகர் முழுவதும், நினது கொற்றமும்,
சானகி எனும்பெயர், உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்த(து) அல்ல(து),ஓர்
வானரம் சுட்ட(து), என்று உணர்தல் மாட்சியோ ?'

இந்த இலங்கை நகரம் முழுவதும், உனது வெற்றியும் ஒரு குரங்கினால் சுடப்பட்டு அழிக்கப்பட்டன. இவ்வாறு அழிந்தது குரங்கினாலென்று நினைக்கின்றாய்? உலக மாதாவாகிய சானகியின் கற்பினால் அழிந்ததென்று நினைக்கவேண்டும்.

இரணியனுக்குப் பிரகலாதன் சொன்னவை.

'சாணினும் உளன்ஓர் தன்மை
அணுவினைச் சதகூ(று) இட்ட
கோணினும் உளன்;மா மேருக்
குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்;நீ சொன்ன
சொல்லினும் உளன்;இத் தன்மை
காணுதி விரைவின்'என்ருன்;
'நன்(று)' எனக் கனகன் நக்கான்.

"ஒருசாண் அளவான இடத்திலும் இருக்கின்ருன்; ஒரு அணுவை நூறு கூறிட்ட அந்தச் சிறு அணுவிலும் இருக்கின்ருன்; பெரிய மகாமேறு மலையிலும் இருக்கின்ருன்; இங்கே உள்ள இந்தத் தூணிலும் இருக்கின்ருன்; நீ சொன்ன சொல்லிலும் இருக்கின்ருன்; இந்தத் தன்மையை நீ விரைவில் பரிட்சித்துப் பார்க்கலாம்" என்று கூறியதைக்கேட்ட இரணியன், "நீ கூறுவது நன்ருயிருக்கிறது" என்று சிரித்தான்.

வீடணனை இராமன் ஏற்றல்.

'பிறந்தநாள் தொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ ? என்னைச்
சரண்என வாழ்கின் ருனைத்
துறந்தநாள் இறந்தநாள் ஆம்;
துன்னினுன் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்ருே, என்றும்
இருந்தநாள் ஆவ(து)'என்ருன்.

"புருவின் பொருட்டுத் தன் உடலை அறுத்துத் தானும் தராசில் ஏறியச் சிபிச்சக்கரவர்த்தியின் பெருமையை இவ்வுலகத்து மனிதர்கள் மறந்த நாளும் உண்டோ? ஆகையினுல் என்னைச் சரணமடைந்தவனை ஏற்றுக்கொள்ளாமல் நீக்குவேனேயானுல், அதுவே நான் இறந்த நாளுக்கு ஒப்பாகும். ஒருவேளை நம்மைச் சரணமென்றடைந்தவன் சூழ்ச்சியால் எனக்குச் சாவு நேருமேல், அவ்வாறு இறந்த நாளே என்றும் அழியாது புகழுடம்போடு இருந்த நாளாகும்."

அங்கதன் தூது.

'கூவியின்(று) என்னை 'நீபோய்த்
தன்குலம் முழுதும் கொல்லும்
பாவியை, அமருக்(கு) அஞ்சி
அரண்புக்குப் பதுங்கி ஞானத்
தேவியை விடுக! அன்றேல்
செருக்களத்(து) எதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக! என்றான்,
அருள்இனம் விடுகிலாதான்,'

இராமன் என்னை அழைத்து, "அங்கதனே! நீ, தன் குலம் முழுவதும் அழிக்க இருக்கும் பாவியும், போருக்கு வருவதற்கஞ்சிக் காவலான இடத்தில் பதுங்கிக் கிடக்கின்றவனும் ஆகிய இராவணனிடம் சென்று 'என் தேவியை விடுக அல்லது போர்க்களத்தில் எதிர்ந்து என்னோடு போர் செய்து தன் ஆவியை விடுக ஆகிய இவ்விரண்டிலொன்று செய்க' என்று சொல்லுமாறு என்னைத் தூதனுப்பினான்" என்று அங்கதன் கூறினான்.

இராமன் பரிவுரை.

'ஆள்ஐயா! உனக்(கு) அமைந்தன, மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா' என நல்கினன்; நா(கு)இளம் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

கமுக மரத்தின் மேல் வாளை மீன்கள் தாவிப் பாயும் நீர்வளம் பொருந்திய கோசல நாட்டின் அதிபனாகிய வள்ளல் இராமபிரான் இராவணனைப் பார்த்து, "ஆண்மைக் குணமுடைய வீரனே! உனக்குத் துணையாக வந்த நால்வகைப் படைகளும் பெருங் காற்றால் பூளைப் பூக்கள் பறந்தோடியதைப் போல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. அதை நீயும் பார்த்தாய். ஆதலால் போர் செய்வதென்றால் இன்று போய் நாளை வா" என்று அருள் கூர்ந்து உரைத்தான்.

கும்பகர்ணன் அறிவுரை.

'ஆனதோ வெம்சமர்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்த(து) இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?'

"கொடிய போர் தொடங்கிவிட்டதோ? சானகியின் துயரங்கள் ஒன்றும் நீங்கவில்லையா? வானுலகும் மண்ணுலகும் பரவிய நமது புகழ் போய்விட்டதோ? நாம் அழியும் காலம் வந்துவிட்டதா?" என்று கும்பகர்ணன் இராவணனுக்கு நீதியை உணர்த்தத் தொடங்கினான்.

கும்பகர்ணன் துயரம்.

'ஐயன் வில்தொழிற்(கு) ஆயிரம் இராவணர்
அமைவிலர்; அந்தோ! யான்
கையும் கால்களும் இழந்தனென்; வே(று) இனி
உதவலாம் துணைகாணேன்;
மையல் நோய்கொடு முடித்தவா தான்,என்றும்
வரம்(பு)இன்றி வாழ்வானுக்(கு)
உய்யு மா(று)அரி(து),' என்றும்தன் உள்ளத்தின்
உணர்ந்(து) ஒரு துயர் உற்றான்.

'இராமனது விற்போர் வலிமைக்கு இந்த ஒரு இராவணன் அல்ல; ஆயிரம் இராவணராயினும் ஈடாகார். நான் கைகளும் கால்களும் இழந்துவிட்டேன். எனக்கு உதவ வேறு ஒருவரையும் காணேன். இராவணன் காமநோய் கொண்டு முடிந்த முடிபு என்னே! என்றும் நீடித்து வாழக்கூடியவனாகிய இராவணனுக்கு இனிப் பிழைக்கும் வழி இல்லை.' இவ்வாறு கும்பகர்ணன் தன் உள்ளத்திலே எல்லாவற்றையும் உணர்ந்து துயரம் அடைந்தான்.

இராமனைத் தேவர்கள் தேற்றிக் கூறுதல்.

'வருவாய் போல வாராதாய்,
வந்தாய்என்று மனம் களிப்ப
வெருவா(து) இருந்தோம்! நீ இடையே
துன்பம் விளைக்க மெலிகின்றாய்;
கருவாய் அளிக்கும் களைகண்ணே!
நீயே இடரைக் காவாயேல்,
திருவாழ் மார்ப! நின்மாயை
எம்மால் தீர்க்கத் தீருவதோ?'

''அன்பர்க்குப் பிறவி நோய் வாராது காத்து நிற்கும் பற்றுக் கோடான பரம் பொருளே! வருபவன் போலத் தோன்றி வாராமல் மறைகின்றாய். அத்தகைய பரம் பொருளாகிய நீ எங்கள் பொருட்டு மானிட வடிவந் தாங்கி வந்தனையே என்று மனம் மகிழ அஞ்சாமல் இருந்தோம். எங்களைக் காக்கும் இடையிலேயே, துன்பம் அடைய வருந்துகின்றாய். மாயைக்கு அப்பாற்பட்டவனாகிய நீயே இந்தத் துன்பத்தினின்றும் விடுபடாயேயானால், திருமகள் வாழும் மார்பையுடையவனாகிய உன்னுடைய மாயையை எங்களால் தீர்க்க முடியுமா?''

திரிசடை சீதையைத் தேற்றல்.

'கண்டஅக் கனவும், பெற்ற
நிமித்தமும், நினது கற்பும்
தண்டவாள் அரக்கர் பாவச்
செய்கையும், தருமம் தாங்கும்
அண்டர்நா யகன்தன் வீரத்
தன்மையும், அயர்ந்தாய் போலும்;
புண்டரீ கற்கும் உண்டோ
இறுதி! இப் புலையர்க்(கு) அல்லால்.'

"சீதையே! நான் கண்ட கனவுகளையும், நல்ல சகுனம் நேர்ந்தமையையும், உனது கற்புடைமையையும், சேனைகளுடைய வாளையேந்திய அரக்கர்களின் பாவச்செய்கையையும், அறத்தைப் பாதுகாக்கும் தேவர் நாயகனாகிய இராமபிரானது வீரத் தன்மையையும் நீ மறந்து விட்டனை போலும்! இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கு மிடத்து இராவணனுக்கு அழிவு நேரலாமேயன்றித் தாமரைக் கண்ணனாகிய இராமபிரானுக்கு ஒருகாலும் அழிவு வராது என்று உறுதியுடன் இருப்பாயாக" என்று திரிசடை தேற்றினாள்.

அனுமான் சஞ்சீவி மலையைத் தூக்கிச் செல்லல்.

இங்குநின்(று) இன்னன மருந்(து)என்(று) எண்ணினால்,
சிங்கும்ஆல் காலம்; என்(று) உணர்ந்த சிந்தையான்,
அங்கது வேரொடும் அங்கை தாங்கினன்,
பொங்குநல் விசும்பிடைக் கடிது போகுவான்.

இங்கு நின்று, இன்ன மருந்து இன்ன அடையாளமுடையது என்று தேடிப்பிடுங்கத் தொடங்கினால் காலம் வீணாகும் என்று மனத்தில் நினைத்து அனுமான், அந்த மலையை வேரொடும் பிடுங்கிக் கையில் ஏந்திக் கொண்டு வான் வழியாக விரைந்து சென்றான்.

இந்திரசித்து இராவணனை வேண்டுதல்.

'ஆதலால் அஞ்சி னேன்என்(று)
அருளலை; ஆசை தான்அச்
சீதைபால் விடுவை யாயின்
அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர், செய்த
தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்' என்றான்,
உலகெலாம் கலக்கி வென்றான்.

"ஆகையினால் நான் போருக்கு அச்சமுற்றுச் சொல்லுகிறேன் என்று நினைக்கலாகாது. சீதைமேல் வைத்த ஆசையை நீ விடுவாயேயானால் அந்த இராம இலக்குவர் கோபம் ஒழிவர்; ஊருக்குத் திரும்பிப் போய்விடுவர். நீ அவர்களுக்குச்செய்த தீமையையும் பொறுத்துக்கொள்வர். இதை உன்மேல் நான் கொண்ட அன்பினால் உரைத்தேன்" என்று உலக முழுவதையும் கலங்கச்செய்து வென்றவனாகிய இந்திரசித்து இராவணனிடம் கூறினான்.

இராமன் மகிழ்ச்சி.

தலையினை நோக்கும்; தம்பி
கொற்றவை தழீஇய பொன்தோள்
மலையினை நோக்கும்; நின்ற
மாருதி வலியை நோக்கும்;
சிலையினை நோக்கும்; தேவர்
செய்கையை நோக்கும்; செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும்
உரைத்திலன் களிப்புக் கொண்டான்.

இந்திரசித்து மடிந்தான் என்ற மகிழ்ச்சியின் மேலீட்டினுல் யாதொன்றும் சொல்லமுடியாமல் விம்மிதமுற்றவனுகிய இராமபிரான், இந்திரசித்தின் தலையினைப் பார்ப்பான்; தம்பியின் வெற்றி இலக்குமி தழுவிய பொன்மலை போன்ற தோளை நோக்குவான்; அருகில் நின்ற அனுமானின் வலிமையை நோக்குவான்; தன் வில்லை நோக்குவான்; தேவர்கள் பூமாரி பொழிந்து ஆரவாரித்ததை நோக்குவான்; இந்திரசித்து கொல்லப்பட்டதையும் பார்ப்பான்.

மண்டோதரி இந்திரசித்தின் உடலின்மேல் விழுதல்.

தலையின்மேல் சுமந்த கையள்,
தழலின்மேல் மிதிக்கின் ருள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள்
ஏக்கத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில் வீழ்ந்(து) என்ன,
மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

தலையின்மேல் வைத்த கையையுடையவளும், நெருப்பின்மேல் நடக்கின்ற வளைப்போல பூமியில் வைக்கும் கால்களையுடையவளும், மகனை இழந்ததால் ஏக்கம் நிறைந்த மனமுடையவளுமான மண்டோதரி, ஒரு வேடன் ஒரு மயிலின்மேல் அம்பை எய்ய அதனுல் அது இறந்து மலையின்மேல் சாய்ந்து விழுவதைப் போலத்-தன் மகன்மீது கலக்கமுற்று வீழ்ந்தாள்.

இராவணன் சூளுரை.

‘மன்றல் அம்குழல் சனகி, தன்
மலர்க்கை யால்வயிறு
கொன்(று),அலம்தலைக் கொடு,நெடும்
துயர்இடைக் குளித்தல்;
அன்றி(து) என்றிடின் மயன்மகள்
அத்தொழில் உறுதல்;
இன்(று) இரண்டின்ஒன்(று)
ஆக்குவென் தலைப்படின்;’என்றான்.

‘நான் இராமனை எதிர்ந்து போய்ப் பின், ஒன்று, சானகி தன் கணவனை இழந்து வயிறு பிசைந்து அழுது பெரிய துயரக் கடலில் மூழ்கும்படி செய்வேன்; அல்லது என் மனைவியாகிய மண்டோதரி என்னையிழந்து அவ்வாறு தன் வயிற்றைப் பிசைந்து கொண்டு அத்துயரக்கடலில் மூழ்கும்படி செய்வேன். இந்த இரண்டிலொன்றைச் செய்து முடிப்பேன், என்று இராவணன் சூளுரை கூறினான்.

இராவணன் உயிரிழத்தல்.

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும்,முதல்வன் முன்னாள்
‘எக்கோடி யாராலும் வெலப்படாய்’
எனக்கொடுத்த வரமும்,ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம் போயிற்(று)
இராகவன்தன் புனித வாளி.

இராமபிரானது தூய அம்பானது, இராவணனுடைய மூன்று கோடி ஆயுள், அவன் முயன்று செய்த பெருந்தவம், ‘முப்பத்து முக்கோடித் தேவரில் எவராலும் வெல்லப்படமாட்டாய்’ என்று பிரமதேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வரம், எட்டுத் திக்குகளோடு எல்லா உலகங்களிலும் சென்று போர் செய்து வென்ற அவனது தோள் வலிமை ஆகிய இவற்றையெல்லாம் தின்று, அவன் மார்பில் புகுந்து விரைந்துசென்று, அவனுடைய உயிரைக் குடித்து அப்பாற்போயிற்று.

மண்டோதரி புலம்பல்.

'வெள்எருக்கம் சடைமுடியான் வெற்(பு)எடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள்இருக்கும் இடம்இன்றி, உயிர்இருக்கும்
இடம்நாடி இழைத்த வாறே!
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?'

''வெள்ளெருக்க மாலையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது கைலாய மலையை யெடுத்த உனது அழகிய உடம்பின் மேற்பாகத்திலும் அடிப்பாகத்திலும் பலபல துளைகள்பட்டு இருப்பதை நோக்கினால், சானகியை உனது மனமாகிய சிறையில் வைத்து ஒளித்த காதலானது உன் உடம்பினுள் இருக்குமென்று கருதி எள் இருக்கவும் இடம் போதாதபடி உயிரிருக்கும் இடத்தை நாடி அந்த இராமபிரானுடைய அம்பானது இவ்வாறு செய்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.''

இலக்குவன் விபீடணனுக்கு முடிசூட்டுதல்.

மெய்கொள் வேத விதிமுறை, விண்ணுளோர்
தெய்வ நீள்புனல் ஆடல் திருத்திட,
ஐயன் ஆணையி னால்,இளம் கோளரி
கையி னால்மகு டங்கவித் தான்;அரோ.

உண்மையான வேதத்திற் சொன்ன விதியின் முறைப்படியே தேவர்கள், கங்கை முதலிய தெய்வத் தன்மை பொருந்திய நதிகளின் நீரினால் திருத்தமாக நீராட்ட, இராமபிரானது கட்டளைப்படி இளஞ்சிங்கமாகிய இலக்குவன் தனது கையினால் விபீடணனுக்கு முடிசூட்டினான்.

இராமன் சீதையைக் காணல்.

கற்பினுக்(கு) அரசினைப், பெண்மைக் காப்பினைப்,
பொற்பினுக்(கு) அழகினைப், புகழின் வாழ்க்கையைத்,
தற்பிரிந்(து) அருள்புரி தருமம் போலியை,
அற்பின்அத் தலைவனும் அமைய நோக்கினான்.

கற்புக்கு அரசி போன்றவளும், பெண்மைக் குணத்திற்குக் காவலாக உள்ளவளும், அழகுக்கு ஒரு அழகு செய்பவளும், வாழ்ந்து கொண்டிருக்கும் புகழ் போன்றவளும், தன்னைப் பிரிந்து தன் அருளையே விரும்பி நின்ற தருமம் போன்றவளும் ஆகிய சீதாபிராட்டியாரை அந்தத் தலைவனாகிய இராமபிரானும் அன்போடு அவள் உருவம் முழுவதையும் நோக்கினான்.

இராமபிரான் சீதையைக் கடிந்து கூறல்.

'ஊண்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை, முறைதிறம்(பு) அரக்கன் மாநகர்
ஆண்டுறைந்(து) அடங்கினை; அச்சம் தீர்ந்(து)இவண்
மீண்ட(து)என் நினை(வு)எனை விரும்பும்' என்பதோ?'

''அரக்கருடைய உணவு வகைகளை விரும்பி உண்டுவந்தாய்; உன்னுடைய ஒழுக்கமானது அழிந்ததால் நீ இறந்தாயுமல்லை. முறைமை கெட்ட அரக்கன் ஊராகிய இலங்கையில் தங்கியிருந்தாய். சிறிதும் அச்சமின்றி நீ இங்கே திரும்பியது என்ன நினைத்து? என்னை என் கணவன் விரும்பி ஏற்றுக் கொள்வான் என்ற நினைப்பா?''

சீதையின் பதிலுரை.

'பங்கயத்(து) ஒருவனும், விடையின் பாகனும்,
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்,
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ?'

''தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், காளையிலேறி வருபவராகிய சிவபெருமானும், சங்கு முதலிய ஐந்தாயுதங்களையும் ஏந்திய தரும வடிவினராகிய திருமாலும் ஆகிய இவர்களெல்லாம் உலகத்திலுள்ள பலவற்றை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல உள்ளும்புறமும் நன்கு உணரவல்லவராயினும், மாதர்களின் மனத்தின் நிலைமையை அறியவல்லவர்கள் ஆவார்களோ? ஆகார். ஆகையினால் என் கணவரும் என் மனத்தின் நிலைமையை அறிந்திலர் ஆயினர்.''

சீதை தீக்குளித்தல்.

நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
ஏய்ந்ததன் கோயிலே எய்து வாள்எனப்
பாய்ந்தனள்; பாய்தலும் பாலின் பஞ்(சு)எனத்
தீய்ந்த(து)அவ் வெரி,அவள் கற்பின் தீயினால்.

ஒரு ஆழமான நீர்நிலையில் மலர்ந்துள்ள செந்தாமரைகளாகிய தன் கோயிலை அடைபவளைப் போலச் சீதாபிராட்டியார் செந்நிறமான நெருப்பில் பாய்ந்தாள். அவ்வாறு பாய்தலும் அவளது கற்பு என்னும் தீயினாலே அந்தத் தீக்கடவுளும் வெந்து கரிந்து போயினன்.

அனுமான் பரதனிடம் செல்லல்.

தந்தை வேகமும்,தனது நாயகன் தனிச் சிலையின்
முந்து சாயகக் கடுமையும்,பிற்பட முடுகிச்
சிந்தை பின்வரச் செல்பவன்,குகற்கும் அச் சேயான்
வந்த வாசகம் கூறி,மேல் வான்வழிப் போனுன்.

தன் தந்தையாகிய காற்றின் வேகமும், இராமபிரான் ஏவும் அம்பின் வேகமும் பிற்படும்படியாக மிகுந்த வேகத்தோடு தன் மனவேகமும் பின்வாங்கச் செல்லும் அனுமான், வழியில் குகனைச் சந்தித்து இராமபிரான் வருகையை அவனுக்குத் தெரிவித்து வானின் வழியே போயினுன்.

தீயில் விழச்செல்லும் பரதனைக் கோசலை விலக்குதல்.

'மன்இ ழைத்ததும், மைந்தன் இழைத்ததும்
முன்இ ழைத்த விதியின் முயற்சியால்;
பின்இ ழைத்ததும் எண்ணில்அப் பெற்றியால்;
என்இ ழைத்தனை என்மகனே!' என்ருள்.

கோசலை பரதனை நோக்கி, "என் மகனே! சக்கரவர்த்தி கைகேயிக்கு வரங்கொடுத்ததும், அதனுல் இறந்ததும், அவன் புதல்வனுகிய இராமன் காட்டிற்குச் சென்றதும், நான் முற்பிறப்பில் செய்த விதியின்படியே விளைந்ததாகும். அதன்பின், குறித்த காலத்தில் இராமன் வராமையும், ஆராயுமிடத்து அவ்விதி யின்படியே நடந்ததாகும். ஆகையால் இப்பொழுது நீ தீயில் மூழ்கி உயிர்விடத் துணிந்த காரியம் எதனுல்? எல்லாம் விதியின்படியே ஆகும் என்று நீதியை யுணர்ந்து இச்செயலை நிறுத்துக" என்று கோசலை கூறினுள்.

பரதனிடம் வந்த அனுமான் செயல்.

'அய்யன் வந்தனன்! ஆரியன் வந்தனன்!
மெய்யின் மெய்அன்ன நின்உயிர் வீடினுல்
உய்யு மேஅவன் ?' என்றுரைத்(து) உள்புகாக்
கையி னுல்எரி யைக்,கரி ஆக்கினுன்.

"அனுமான் பரதனை நோக்கி, பரதனே! 'எல்லா உலகங்களுக்கும் தலைவனுனவன் வந்தான்! அனைவராலும் பூசிக்கத்தக்கவன் வந்தான்! மெய்ம்மை குணத்திற்கு உடல்போன்ற நீ அவன் வருவதற்குமுன் இறப்பாயேயானுல், அவன் வந்து உயிர் பிழைத்திருப்பானு?" என்று சொல்லி, அக் கூட்டத்தில் நுழைந்து மூட்டிய நெருப்பை அவித்துக் கரியாக்கினுன்.

இராமபிரானுக்கு முடிசூட்டற் சிறப்பு.

அரியணை அனுமன் தாங்க,
அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன்வெண் குடைக விக்க,
இருவரும் கவரி வீச,
விரைசெறி குழலி ஓங்க,
வெண்ணெய் ஊர்ச் சடையன்தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி,
வசிட்டனே புனைந்தான் மௌலி.

சிங்காசனத்தை அனுமான் தாங்கவும், அங்கதன் உடைவாளைப் பற்றி நிற்கவும், பரதாழ்வான் குடை பிடிக்கவும், இலக்குவனும் சத்துருக்கனும் கவரி வீசவும், பக்கத்தில் வீற்றிருக்கின்ற சீதாபிராட்டியார் மகிழ்ச்சி பெருக-வும், வெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் தங்கள் கையால் முடியை எடுத்துக் கொடுக்க, அதனை வாங்கி வசிட்ட முனிவன் சூட்டினன்.

மகாகவி வேமன

பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாத ராஜா

மனித சமுதாயத்தின் மனமாசுகளைத் துடைத்து மெய்நெறி காட்டவந்த சிறந்த சிந்தனையாளர்களில் **மகாகவி வேமனுவும்** ஒருவர். வேமன ஆந்திர நாட்டில் பதினேழாம் நூற்றாண்டில் அவதரித்தார். ரெட்டி குலத்தில் ஒரு நிலக்கிழாரின் குடும்பத்தில் அவதரித்தார். செல்வச் செழிப்பு மிக்க இவர் இளமையில் காதலின்பத்தில் திளைத்து, பின்பு உலக வாழ்வின் சிறுமையை உணர்ந்து யோகியானர். ரசவாதம் புரியும் கலையும், மருத்துவமும் கற்றுணர்ந்தார். தத்துவ ஞானியாக திகம்பர சன்யாஸியாக திரிந்தார். அவர் தாம் கண்ட சமுதாய மூடப்பழக்க வழக்கங்களைக் கண்டித்து அவ்வப்போது பாடிய பாடல்கள் ஆயிரக்கணக்கானவை. தெலுங்கு மக்களால் போற்றிப் பாதுகாத்து இன்று நமக்கு சுமார் மூவாயிரம் பாடல்கள் வரை கிடைத்துள்ளன.

வேமனுவின் பாடல்கள் மிக எளிமையும், இனிமையும் உடையவை. நான்கடிப் பாடல்களான 'தேட்ட கீதி, ஆட்ட வெலதி' என்னும் செய்யுள்களில் அமைந்துள்ளன. முதலிரண்டடிகள் ஒரு நீதியைக் குறிக்கும். மூன்ருவது அடி அதற்கேற்ற உவமையோடு கூடிய ரத்தினச் சுருக்கமான அறநெறிக் கருத்தைத் தெரிவித்துவிடும். நான்காவது அடி 'விஸ்வதாபி ராம வினுர வேம' என்று முடியும்.

வேமன நீதிகளை உலகைப்பார்த்துச் சொல்லவில்லை. தமக்குத் தாமே கூறிக்கொள்வதுபோல "வினுர வேமா" (கேளடா வேமா) என்று கூறுகிருர். ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு உப-

தேசம் செய்வதில் மிகுந்த ஈடுபாட்டுடன் தாராளமாகவே பேசுகிருன். ஆனுல் தனக்கென்று வரும்போது பிறருக்கு உபதேசித்த அதே தேன் போன்ற பொன்மொழிகள் தன்மட்டுக்கு கசப்பாகப்படுகிறது. ஆனுல் வேமனு ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உபதேசித்துக் கொண்டு சீர்திருந்த வேண்டும் என்று விரும்புகிருர். அதனுலேயே தனக்குத்தானே உபதேசம் செய்துகொள்கிருர். தனி மனிதர்கள் திருந்திவிட்டால் சமுதாயம் திருந்தியதுபோல்தான் என்பது கருத்-தாகும்.

தமிழ்நாட்டில் திருவள்ளுவர், கன்னட நாட்டில் சர்வக்ஞர் போல ஆந்திர நாட்டில் வேமனுவும் அனைவராலும் போற்-றப்பட்ட கவிஞர் ஆவார். மேனுட்டினராகிய சார்லஸ் பிலிப் பிரௌன் வேமனுவின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகுக்கு அறிமுகப்படுத்தினுர். காம்பெல், மாக்டொனுல்டு, டேவிட் பார்னெட், சார்லஸ் கோவர், ஹென்ரி பவர்ஸ் முதலிய மேனுட்-டறிஞர்களும் வேமனுவின் சிறப்பினை உணர்ந்து பாராட்டினர்.

இந்திய நாட்டில் முதற்பெரும் சீர்திருத்தக்கவிஞராக மதிக்கத்தக்கவர் வேமனு. ''கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக'' என்று வள்ளலார் கூறுவது போல வேமனுவும் வெற்றுச் சடங்குகளையும், அர்த்தமற்ற ஆசாரங்களையும், சமூகத்தில் மலிந்து கிடந்த மூட நம்பிக்கைகளையும் தீவிரமாகக் கண்டித்தார். சத்திய தரிசனத்தைக் காணுமாறு தூண்டிய மெய்ஞானி. அவர் ஜாதி மத பேதங்களைக் கண்டித்து மானுட நேயம் மிக்க ஒரே உலகமாக மக்கள் வாழவேண்டும் என்று வற்புறுத்தினுர். ஏழ்மையும் வறுமையும் நீங்கவேண்டும் என்றும் ஆடம்பரமோகம் கூடாது என்றும், எளிய வாழ்வில் இன்புற வேண்டும் என்றும் அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினுர்.

சமுதாயத்தில் வேடதாரிகளான கயவர்கள் மெய் ஞானிகளாக நடிப்பார்கள் என்றும், போலித்துறவிகளாக உலவு வார்கள் என்றும், அவர்களிடம் நாம் எச்சரிக்கையுடன் ஏமாந்து விடாமல் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறுர். சமுதாயத் தீமைகட்கு இடங்கொடாமல், தைரியமாகத் தீமைகளை எதிர்த்துப் போராடி நன்மைக்கு மேன்மையுண்டாகும்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறுர்.

கற்சிலைகளையும், கோவில் கோபுரங்களையும், தீர்த்தங் களையும் பெரிதுபடுத்தி, தன்னுள்ளே அந்தரான்மாவாக இருக்கும் ஆண்டவனைத் தேடிக் காணுமால், புறத்தே கண்ணுல் காண விரும்பும் மூடத்தனத்தைக் கண்டிக்கிறுர். வேமனுவின் தெலுங்கு மொழி மக்கள் மொழியாகும். பண்டிதர்களின் வடமொழிக் கலப்புமிக்க நடையைப் பயன்படுத்தவில்லை. சாதாரண மக்கள் பேசும் மொழி யில், மிக எளிய உதாரணங்களுடன் அவர் தம் நீதி நெறிகளை விளக்கினுர். அவர் அங்கதமாக நையாண்டியும் நகைச்சுவையுமாக குத்தலாகவும், கிண்டலாகவும் பல இடங்களில் கண்டித்துரைக்கின்றுர்.

பொட்ல காய ராயி பொடு'கு' த்ராடனு கட்ட
லீல தோட வங்க்க லேக பெருகு'
குக்க தோக கட்ட குது'ருனு சக்கர'
விஸ்வ தாபி' ராம வினுர வேம.

புடலங்காய் வளையாமல் நேராக வளர கயிற்றில் கல்லைக்கட்டி விட்டால் நேராக வளரும். நாய் வாலை அப்படி நிமிர்த்தி நேராக்க முடியுமா ?

குண்ட சில்லி படின கு’ட்’ட தோ’பக வச்சு
பனிகி வீலு படுனு பா’கு’கா’னு
கூல படின நருடு’ குது’ருட யருத’யா
விஸ்வ தாபி ராம வினுர வேம.

குடம் ஓட்டையானுல் துணியைத் திணித்து பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனுல் மனிதன் சிறுமையுற்ருல் அவன் மேல்நிலையடைவது அரிதாகும்.

இது போன்ற இனிய தெலுங்கில் எளிமைமிக்க நடையில் அவர் பாடல்கள் அமைந்துள்ளன.

வேமனுவின் பல சொற்கள் பழமொழிகள் போல பயன்படுத்தப்படுகின்றன. உலகின் பல மொழிகளில் மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. தமிழிலும் சிலர் மொழி பெயர்த்துள்ளனர். வேமனுவின் சிறந்த பொன்மொழிகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் பொன்மொழிகள் அறநெறிச் சிந்தனையாளர்கட்கு அரிய விருந்தாகும். வேமனுவின் சிந்தனைகள் நமக்கு நல்வழி காட்டுமாக.

வேமனு பொன்மொழிகள்

1

ஆத்தும சுத்தியற்ற ஆசாரங்களால் என்னபயன் ?
பாத்திர சுத்தி யில்லாத சமையலால் என்னபயன் ?
சித்த சுத்தி யில்லாத சிவ பூஜையால் என்னபயன் ?

2

சிறந்த மெய்யான நீலக்கல் ஒன்றே போதும்.
மினுமினுக்கும் கூழாங்கற்கள் ஒருகுவை யிருந்தென்னபயன் ?
கற்று அறிந்து இன்புற ஒரு செய்யுள் போதாதா ?

3

கண்ணுடிக் குப்பிக்குள் விளக்கானது எப்படி ஒளிர்கிறதோ
அதுபோல உடலுக்குள் ஞானதீபமும் ஒளிர்கிறது.

4

அறிவில்லாதவன் என்னென்ன படித்தாலும்
படிக்கும்போது மட்டும் நல்ல குணவாளுக இருப்பான்:
தவளை தாமரையில் சிறிது நேரம் அமர்வதுபோலத்தான்.

5

உண்டி மறுத்துப் பொருள் சேர்த்த மனிதன்
பெண்களைக் கண்டதும் பெருந்துயர்ப் படுவான்.
சுடரைக் கண்டு பாயும் விட்டிலைப்போல உழல்வான்.

6

பசுவுக்குப் புல்லும் பாம்புக்குக் காற்றும் புழுவிற்கு மண்ணும்
மறக்காமல் படைத்த கடவுள்தான் மக்கட்கு சோற்றையும்
படைத்துள்ளான். (சோற்றுக்காகக் கவலைப்படுவானேன் ?)

7

வேர்ப்புழு சேர்ந்து மரத்தைப் பாழாக்கும்.
சீடைப்புழு சேர்ந்து செடிகளைப் பாழாக்கும்.
தீயவன் சேர்ந்து நல்லவனைப் பாழாக்குவான்.

8

உப்பும் கற்பூரமும் பார்க்க ஒன்றுபோல்தான் இருக்கும்
ஆராய்ந்தால் அவற்றின் தன்மைகள் வேருக இருக்கும்
அதுபோன்றே; மனிதர்களுக்குள்ளே நல்லோரும்
வேருகக் காணப்படுவர்.

9

தகுதியற்ற இடத்தில் பெருமை பேசக்கூடாது.
தாழ்ந்துபோவது சிறுமையாகாது. சிறு கண்ணுடியுள்
பெரிய மலையானது அடங்கித் தோற்றமளிப்பதில்லையா !

10

கொல்லத் தகுந்த பகைவனே யானுலும் அவன்
தன்கையிற் பிடிபட்டால் அவனுக்குத் தீங்கு செய்யக்கூடாது.
பொருந்துகின்ற வகையில் நல்லவைகள் செய்து போவென்று
அனுப்பிவிட்டாலே போதும்; அதுவே அவனுக்குத் தண்டனையாகும்.

11

எந்தக் காரியமும் தாமதப்படுத்தக்கூடாது. அதற்காக
அவசரப்பட்டால் அதுவும் தீதாக முடியும். பிஞ்சுக் காய்களை
பழுக்கப்போட்டால் பழுக்குமா ? (வெம்பிவிடும்)

12

நீரில் கப்பலானது எவ்வளவு தூரமாயினும் நேராகச் செல்லும்
கரையில் ஒரு முழங்கூடச் செல்லாது. அதுபோல
நிலை தவறிய இடத்தில் அறிஞனும் பயனற்றவனுகிருன்.

13

நீரில் முதலையானது யானையையும் பிடிக்கும்
வெளியில் வந்தால் நாயினுல்கூட துன்புறுத்தப்படும்
சூழ்நிலையின் வலிமையேயன்றி தன்வலிமை ஒன்றுமில்லை.

14

குலத்துக்கு ஒரு குணவான் இருந்தால் அவனது
குணத்தால் அந்தக் குலமானது சிறந்து விளங்கும்.
காட்டில் சந்தனம் மரம் ஒன்று இருப்பதால் அதன்
மணம் பரவிச் சிறக்குவதுபோல.

15

அறிந்தவனைத் திருத்த யாராலும் முடியும்;
கயவனைத் திருத்த யாராலும் முடியாது.
ஆற்றின் வளைவுகளைத் திருத்த யாரால் முடியும் ?

16

சிறியோர் எப்போதும் ஆடம்பரமாகவே பேசுவார்கள்
அறிஞன் எப்போதும் இனிமையாக அடக்கத்துடன் பேசுவான்.
வெங்கலம் முழங்குவதுபோல தங்கம் முழக்குமா ?

17

கங்கை நதி வெள்ளமானது ஆடாதசையாது நிசப்தமாக ஓடுகிறது.
கழிவுநீர் வாய்க்காலோ பெருமோசையுடன் ஓடுகிறது.
வள்ளல்கள் பொறுப்பதுபோல புல்லறிவாளர்கள்
பொறுக்கமாட்டார்கள்.

13

தீயவனிடம் நேயமுடன் காசளித்து அவன்பின்னுல் சுற்றித்திரிவது பேதமையாகும். பூனையைப் பிடிக்க கோழியைக் கூப்பிட்டால் பதில் கூறுமா ?

19

கஞ்சனைக் கொல்லவேண்டுமானுல் நஞ்சொன்றும் வேண்டியதில்லை. அதற்கு வேறு வழி இருக்கிறது. ஒரு பெருந்தொகையை நன்கொடையாகக் கேட்டாலே இருதயம் நின்றுபோய் இறந்து போவான்.

20

இருக்கும்போது மமதையினுல் மனிதன் யாரையும் பார்க்கமாட்டான். இல்லாதபோது யாதொன்றும் கொடுக்க இயலாதுபோகிறது. இனி உடமையும் வறுமையும் இல்லாத காலமொன்று வரப்போகிறதா ?

21

தானும் அனுபவிக்கமாட்டான். அறமின்றி தன் அன்பர்களையும் அனுபவிக்க விடமாட்டான். இத்தகைய கொடிய விலங்கான மனிதன் சோளக்காட்டில் வைத்திருக்கும் பொம்மைக்குச் சமானம்.

22

முற்பிறப்பில் நல்லறம் செய்யாத பாவி, செல்வத்திற்கு ஆசைப் படுவதெல்லாம், விதைக்க மறந்துவிட்டு அறுவடை செய்யத் தேடி வந்த கதைதான் ஆகும்.

23

அரசனின் கருணையை நம்பி உலகை வாட்டுகின்றவன்
மக்களைப் பீடித்துவிட்டு, பின் தானே கீழே விழுந்தொழிவான்.
பந்தை எறிந்தால் எவ்வளவு நேரந்தான் மேலே நிற்கும் ?

24

தான் வரும்போதோ, மீண்டும் போகும்போதோ, பணம் தன்
பின்னாலும் வராது. அவனும் கொண்டுபோகமாட்டான்.
அவன் எங்குபோவானோ பணம் எங்கு போகுமோ யாரறிவார் ?

25

இரும்பு முறிந்தால் இரண்டு மூன்று தடவை காய்ச்சி ஒட்டவைத்து
விடுவான் கொல்லன்; ஆனால் மனம் முறிந்தால்
எந்த வகையிலாவது ஒட்டவைக்க முடியுமா ?

26

பிறன்மனைக் கொதுங்கி, பிறர் பொருள் விரும்பாமல்
பிறர்க்கின்ப மளிப்பவனாய், பிறர் சினந்தாலும் தான் வெகுளாமல்,
பிறர் புகழ வாழ்பவனே நல்லறிஞன்.

27

நீரிலுள்ள மீனானது ஊனை விரும்பி தூண்டில் முள்ளில் அகப்பட்டு மாய்ந்தாற்போல, மனிதனும் ஆசையினால் கெட்டொழிகின்றான்.

28

அத்திப்பழம் பார்க்க அழகாகத்தான் இருக்கும்
உட்பிளந்து பார்த்தால் புழுக்கள் இருக்கும்.
பேதையரின் ஆடம்பரமான தோற்றமும் இப்படித்தான்.

29

தலைப்பாகை, சால்வை, தொங்தி, குண்டலங்கள் இவைகளைக் கண்டு இரவலர் வருவார்கள். பாவம் அது விலங்கென்று ஆராயாமல் வந்துசேர்வார்கள்.

30

பெண்ணின்பம் விரும்பி, மனதைப் பறிகொடுக்கும் திடசித்தம் இல்லாதவன் நிச்சயம் கெடுவான். ஆற்றங்கரையில் உள்ள மரம் அசைந்துவீழ எவ்வளவுநாள் பிடிக்கும் ?

31

தானிருக்கும் இடத்தில் இடையூறுகள் நேரின்
இன்பம் கிட்டும் இடத்திற்கு மாறவேண்டும்.
குளம் வற்றிவிட்டால் கொக்குகள் அங்கே இருக்குமா ?

32

உலகில் நல்லோர் இருப்பதால்தான் உலகம் நிலைத்திருக்கிறது.
இரவும் பகலும் உண்டாகிறது. கதிரும் மதியும் ஒளி வீசுகின்றன.
இல்லையென்றால் இங்குமங்கும் பாழாகத்தானிருக்கும்.

33

தூய உள்ளத்துடன் செய்யும் புண்ணியமானது சிறிதளவே எனினும் அதைக் குறைவாகக் கருதக்கூடாது. பெரும் ஆல மரத்திற்கு மூலமான விதை எவ்வளவு சிறிதாக இருக்கிறது,

34

கற்புடைய மங்கை உள்ள வீடு, இருட்டறையில் விளக்கேற்றினாற் போல், அழகாகத் திகழும். மனைவியுள்ள வீடானது தேவ பூஜை செய்யும் இல்லத்திற்கு ஒப்பாகும்.

35

தன் இல்லக்கிழத்தியை விட்டுவிட்டு, ஊரில் திரியும் வேசியரின் பின்னால் அலைபவன் பைத்தியக்காரன் ஆவான். விளைந்த வயலை விட்டுவிட்டு சிந்தியமணியை பொறுக்குபவன்போல் ஆவான்.

36

தங்கம் செய்யும் ரசவாத வித்தை தெரிந்தவர்கள் கவலையற்று இருப்பதுபோல், கல்வியினால் தத்துவமுணர்ந்தவர்களுக்கும் கவலை என்பதே கிடையாது.

37

குடம் உடைந்துவிட்டால் வேருென்று புதிதாக வாங்கிக்கொள்ளலாம் மனிதன் கேடடைந்துவிட்டால் மீண்டும் மேல்நிலேக்கு வருவது கடினமாகும்.

38

சத்தியம் அமைந்திருந்தால் ஞானம் அமையும்
ஞானம் அமைந்திருந்தால் சத்தியம் அமையும்
சத்திய ஞானங்கள் சமமாகயிருப்பவனே பிரமத்தை உணர்ந்தவனுகும்.

39

தானத்தைவிட தியானம் சிறந்தது; தியானத்தைவிட ஞானம் சிறந்தது; ஞானத்தைவிட ஆசையறுத்தல் சிறந்ததாகும்.

40

பழகப் பழக நட்பானது கூடுகிறது.
தின்னத் தின்ன வேம்பும் இனித்திருக்கும்
சாதகத்தால்தான் உலகில் செயல்கள் முடிவுறுகின்றன.

41

நீ பேசினுல் நானும் பேசுவேன்; நீ அமர்ந்தால் நானும் அமர்வேன்.
நீ நினேத்தால் நானும் நினேப்பேன்; நீ சிரித்தால் நானும் சிரிப்பேன்.
இது உண்மையாகும்.

42

பணத்தைச் சேர்த்துவைத்து, தருமம் செய்யாமல், தானும் அனுபவிக்காமல் மறைத்துவைப்பான். தேனீ தேனேச் சேகரித்து வைத்து வழிப்போக்கனுக்குத் தருவதில்லேயா ?

43

கொடுப்பவர்கட்கு, செல்வம் கூடுமேயன்றி வறுமை ஏன் உண்டாகிறது. கிணற்று நீரை இறைக்க இறைக்க, மீண்டும் தானுக ஊற்று வந்துகொண்டே இருக்கும்.

44

கெட்ட மனிதர்களேக் கைப்பிடித்துக் காப்பாற்றி நல்வழிக்குக் கொண்டுவருபவன் சிறந்தவன் ஆவான். இந்தப் புண்ணியத்தினுல் என்றும் இறைவனருகிலே இன்புற்றிருப்பார்கள்.

45

யார் சொன்னாலும் அதைக் கேட்கவேண்டும். கேட்டதுமே அவசரப் படாமல் ஆராய வேண்டும். கேட்டும் கண்டும் ஆராய்ந்தவனே நல்ல நீதியான மனிதனாவான்.

46

காய்ந்த மரம் ஒன்றிருந்தால் அதில் தீப்பிடித்து அந்த வனத்தையே அழித்துவிடும். பெரிய வம்சத்தை தீயவன் ஒருவன் பிறந்து கெடுத்துவிடுவான்.

47

மிளகு பார்க்க மேலே கருப்பாகத்தான் இருக்கும். அதைக் கடித்தால் உடனே சுருக்கென காரமேறும். நல்லோருடைய திறமைகளும் இப்படித்தான் அடங்கிக்கிடக்கும்.

48

அரசன் அற்பனை ஆதரித்தால், அவ்வற்பனுக்கு செல்வாக்கு உண்டாகிவிடும். வியாபாரிகள் ஒத்துக்கொண்டால் எந்த நாணயமும் செல்லுபடியாகுமல்லவா ?

49

அறிவு என்னும் விந்தையான கோடரியால், கல்வியெனும் காட்டை வெட்டி, தெளிவுயெனும் பெரிய விளக்கைக் கைக்கொண்டு வீடுபேறுறலாம்.

50

விளக்கில்லா வீட்டில் உருவங்களை அறிய முடியாது உண்மைதான். விளக்காகிய அறிவிருந்தும்கூட பாவமாகிய இருளில் வீழ்ந்து விடுகிறார்களே ?

51

பசுக்களின் நிறம் வேறு வேறானாலும் பால் ஒன்றுதான்.
பூக்களின் நிறம் வேறு வேறானாலும் பூஜை ஒன்றுதான். அதுபோல் தத்துவங்கள் பலவாக இருந்தாலும் தெய்வம் ஒன்றுதான்.

52

நகைகள் பலவிதமாக இருந்தாலும் தங்கம் ஒன்றுதான்.
உடல்கள் வேறுபாடுறினும் உயிர் ஒன்றுதான்.
உணவு வேறுபாடுறினும் பசி ஒன்றுதானே.

53

தனது நெற்றி, காதுகள், முதுகு இவற்றை மனிதனுல் காண முடியாது, தன்னையே காணமுடியாதவனுக்கு தத்துவம் என்ன தெரியும் ?

54

அற்பனுக்கு அதிகாரம் கொடுத்தால், பெரியோர்களையெல்லாம் விரட்டியடிப்பான். செருப்பைக் கடிக்கும் நாய்க்கு கரும்பின் சுவை தெரியுமா ?

55

ஆபத்தான நேரத்தில் உறவினர்களை ஆராய்ந்துபார்
அஞ்சத்தகு நிலையில் படைவீரனின் குணத்தைப்பார்
வறுமையுற்றபின் மனைவியின் நிலையைப்பார்
அப்போதுதான் உண்மையான சொரூபம் தெரியும்.

56

மனைவியைத் திருத்த முடியாமல் பின்னுல் திருந்துவாள் என்று சும்மாகிடப்பது அறிவீனமாகும். மரத்தை முதிரவிட்டபின் வளைத்தால் வளையுமா ?

57

கரடித்தோலைக் கொண்டுவந்து எத்தனைநாள் துவைத்தாலும் கருப்பாக இருக்குமேயன்றி வெளுப்பாகமாட்டாது.
மரப்பாவையைப் போட்டடித்தால் அதற்கு உணர்ச்சியிருக்குமா ?
அதுபோலவே அறிவீனனுக்கு உபதேசம் செய்வதுமாகும்.

58

மனைவி, கணவன் பேச்சைக் கேட்காமல் இடையூறு செய்தால் அவள் மனைவியல்ல. அவனுடைய தலைஎழுத்துதான் ஆகும். அப்படிப்பட்ட மனைவியை விட்டுவிட்டு காட்டில் வாழ்வதே மேல்.

59

ஆசிரியனுக்கு கீரை கூடத்தரமாட்டார்கள். வேசிகளிடம் பணத்தைக் கொட்டுவார்கள். வேசியைவிட ஆசிரியன் எப்படி தாழ்ந்தவனே ?

60

பலாச்சுளையைவிட, கற்கண்டைவிட, தேனைவிட, பாலைவிட, கருப்பஞ்சாற்றைவிட பெண்ணின் சொற்கள் இனிமையுடையவை.

61

தேன், சர்க்கரை, தேமா முதலியவற்றை தின்றாலன்றி இனிமை தெரியாது. காதலியின் மெல்லிதழ்கள் கண்டாலே இன்பம் பயக்கும்.

62

ஏதோ சிறிது அன்னம் ஈஸ்வரார்ப்பணமாக ஈந்தால் அவன் நற்கதியடைவான். அன்னதானத்தைவிடச் சிறந்ததானமில்லை.

63

புத்திரர்களால் நற்பதவியுற்று புண்ணியமடையலாமென மனிதன் கருதுகிறான். யானை விழுந்துகிடந்தால் பூனை எடுத்துநிறுத்த முடியுமா ? அதுபோல், தனக்குத் தானே நற்கருமம் செய்து புண்ணியமடையவேண்டும்.

64

எவ்வளவு படிப்புப் படித்து, எத்துணைதான் கேட்டாலும்
அற்பன் தனது கெட்டகுணங்களை விடமாட்டான்.
அடுப்புக்கரியை பாலில் கழுவினாலும் அதன் நிறம் மாறுமா ?

65

ஆடம்பரமாக உடையணிந்து, வெற்றிலை போட்டுக்கொண்டு கம்பீரமாக வந்தால் தாழ்ந்தவனையும் வரவேற்பார்கள். அழுக்குடை உடுத்து உடல் மாசுடனே உயர்ந்தோன் வந்தாலும் அவனைப் போவென்று விரட்டுவார்கள்.

66

தனது சகோதரர்கள் தானம் செய்தால் தனக்கும் அந்தப் புண்ணியம் வருமெனக் கருதக்கூடாது. தன்னுடைய காலை வெட்டினால் தனது சகோதரன் அழுவானா ?

67

பாம்பைவிடக் கொடிய உயிர் ஒன்றில்லை. அப்படிப்பட்ட
பாம்புகூட மனிதன் சொன்னபடி கேட்கிறது. ஆனால்
காம மயக்கமுடையவனை திருத்த யாரால் முடியும் ?

68

சோற்றுக்கில்லாமல் உட்கார்ந்திருப்பவனுக்கு பெண்மேல் ஆசையிருக்குமா ? அன்ன விசாரத்திற்குப் பிறகுதான் எல்லா விசாரங்களும் இருக்கும்.

69

மனைவியின் பேச்சைக்கேட்டு, அண்ணன் தம்பிகளை வெறுத்து தனிக்குடித்தனம் செல்வோன் தகுதியறியாதவனுவான். நாய்வாலைப் பிடித்துக்கொண்டு கோதாவரி நதியைக் கடக்கமுடியுமா ?

70

சிப்பியில் விழுந்த மழைத்துளியானது முத்தாக மாறுகிறது; நீரில் விழுந்து நீரோடு கலக்கிறது. எது எங்கு சேரவேண்டுமோ அது அங்கே சேர்ந்தால்தான் நிச்சயம் பலன் காணமுடியும்.

71

ஆகாதவனேடு கலந்துறவாடினுல் யார்க்கும் தீமைவிளையலாம் இழுக்கும் உண்டாகும். பனை மரத்தின் கீழிருந்து பால் குடித்த மாதிரிதான்.

72

சுடச் சுடப் பொன்னிற்கு வண்ணம் அதிகரிக்கும். பழகப் பழக அன்பு கூடுகிறது. வயது முதிர முதிர லோபமும் மோகமும் கூடுகிறது.

73

அறிவிலாத மனிதனுக்கு எத்தனைநாள் கீழ்ப்படிந்திருந்தாலும் நல்ல பலன் ஒன்றும் தரமாட்டான். எல்லாம் வீண்தானுகும். மலட்டுப் பசுவிடம் பால் வேண்டினுல் மடி சுரக்குமா ?

74

மலட்டுப் பசுவிடம் பால்பீய்ச்ச சட்டியைக் கொண்டுபோனுல் பல் உதிர உதைக்குமன்றி பால் தராது. அதுபோல் லோபியை வேண்டுவதால் லாபமொன்றுமில்லை.

75

வாய் வீச்சம், பல்வலி முதலிய நோய்கட்கு வெற்றிலை பாக்கு சுண்ணும்பு மருந்தாகும். தாம்பூலம் போடாவிட்டால் வாய் சுத்தமுருது.

76

பருப்பில்லாத சோறு பிறருக்குப் பிடிக்காது. கடன் இல்லாதவனே பலசாலியாவான். அறிவாளியே முதுமையில்லாதவன்.

77

தர்மவானுக்குத்தான் தர்மத்தின் மகிமை புரியும்.
சாதாரண மனிதனுக்கு அது புரியாது.
நீரில் மூழ்காமல் அதன் ஆழத்தை அறிய முடியுமா ?

78

தந்தையைவிட நற்குணம் படைத்தவனுக மகன் இருந்தால் பெரியவர் சின்னவன் என்று கருதாமல், மகனைப் போற்றவேண்டும். வாசுதேவனைப் (கண்ணன்) போற்றுகிறோமன்றி அவன் தந்தை வசுதேவரைப் போற்றுகிறோமா ?

79

மனதிற்குள் இருக்கும் மோட்சத்தை வேறோரிடத்தில் தேடப் போகிறவன் அறிவீனனுவான். ஆட்டைத் தோளில் போட்டுக் கொண்டு தேடிய இடையன்போல ஆவான்.

80

செருப்புக்குள்ளிருக்கும் கல்லும், காதுக்குள் எறும்பும்,
கண்ணில் தூசியும், காலில் முள்ளும், வீட்டுக்குள் போரும்
தரும் துன்பம் இவ்வளவென்று அளவிட முடியாது.

81

மெய்ப்பொருளைக்கண்டின்புறுபவன் மீண்டும் மக்களுடன் கலந்துறவாடமாட்டான். மழைத்துளி முத்தான பிறகு மீண்டும் நீரோடு கலக்குமா ?

82

உடலை வறுத்தி யோகிகள் என்போர் மனதின் மாசுகளை நீக்க இயலாதிருப்பர். புற்றை அடித்தால் பாம்பும் செத்துவிடுமா ?

83

சகல சாஸ்திரங்களையும் படித்தும் எழுதியும் வைக்கத் தெரியுமே யன்றி தனக்கு நேரும் மரணத்தை முன்னதாக உணரமாட்டான். தனது சாவைப்பற்றித் தெரியாத இந்தப் படிப்பினுல் என்ன பயன் ?

84

ஏழைகளைக் காப்பாற்றுபவனே வள்ளலன்றி, பணமுள்ளவனுக்குத் தருபவன் வள்ளலாகமாட்டான். ஏதோ புகழுக்காகச் செய்பவனே யாகும்.

85

தனம் இல்லாவிட்டால் தைரியம் நிற்காது. தைரியமின்றி தனமும் இல்லை. தனமும் தைரியமும் இரண்டுமே அரசர்கட்கு வேண்டும்.

86

தாயுக்கும் தந்தைக்கும் தமையனுக்கும் எதிராக மறுத்துப் பேசுவது முப்பெருங்குற்றமாகும்.

87

அதிர்ஷ்டமில்லாதவனுக்கு, பரிசவேதி கிடைத்தாலும்கூட அது அவனிடம் நிற்காது; தவறிவிடும். மழையுடன் வரும் ஆலங்கட்டி நிற்குமா ? (பரிசவேதி = இரும்பைப் பொன்னுக்கும் ரசம்)

88

தன்னைத்தானறிவதே தத்துவமாகும். தனக்கு பிறர் போதிக்க இயலுமா ? தன்னைத்தானறியானேல் தனக்கு யாரும் தெரிவிக்க முடியாது.

89

பேசத் தெரிந்து, மனதைக் கரைத்து, அன்பு பிறக்கும்படியாக இன்சொல் பேசாவிட்டால், ஒருவர் கையிலிருக்கும் செல்வம் சும்மா வருமா ?

90

உண்டி அளவுக்கு மீறினால் அதுவே கொல்லும்.
உண்டி குறைந்தாலும் உயிர்க்காபத்தாகும். கொல்லவும் துன்புறுத் தவும் சோறு ஒன்றே போதாதா ? வேறொன்று வேண்டுமா ?

91

இளைத்து மெலிந்த காலத்தில் சிங்கத்தைக்கூட நாய் துன்புறுத்தும். வலிமை இல்லாதபோது, பெருமைகள் எல்லாம் செல்லுபடியாகாது.

92

பெரியோர் வசனங்களைக் கேட்டு, தானும் அதுபோல் நடக்க முடியாது. புலியைப் பார்த்து நரி சூடு போட்டுக்கொண்ட கதையாக முடியும்.

93

இழிந்தோரிடமும், பெண்களிடமும், இளைஞரோடும், முதலாளியுடனும், அறிவாளியுடனும், நிதானித்துப் பார்த்துப் பேசவேண்டும்.

94

கணவன் மனமிசைந்தால் மனைவியும் இசைவாள்.
சதிபதிகள் ஒன்றுயிணைந்தால் புனிதத்துவம் அடைவர்.
சதிபதி நியாயமே மோட்சமாகும். இணையற்ற பரமாத்ம ஐக்கியமும் அதுவேயாகும்.

95

ஆகாயத்தில் காற்றும், மரத்தினுட்தீயும் இருப்பதுபோல உள்ளத்தில் இறைவன் உள்ளான். உலகில் தனக்குத் தானே ஒளிர்கின்றுன்.

96

பெண்ணைக் காட்டில் விட்டுவிட்டு, மானுக்குப் பின்போன ராமனைவிட மயல்கொண்டவர் யார் ? கெடுகாலம் வந்தால் புத்தியும் கெடும்.

97

இலங்கை போகும்போது அரக்கர்குலத் தலைவனின் அரசை குரங்குகள் ஆக்கிரமித்தன. கெடுகாலம் வரும்போது கெடுப்பதற்கு அற்பமானவைகளும் போதுமானவை.

98

இராமன் பிறந்து இரகு குலத்தை உயர்த்தினுன். துரியோதனன் பிறந்து கௌரவ குலத்தை நாசப்படுத்தினுன்.
அவரவர் நன்மை தீமைக்கேற்ப அமைகின்றன.

99

விபூதி உடல் முழுவதும் பூசினுல் மட்டும் போதாது;
சிவன்மேல் உள்ளமூன்றி தியானித்தல் வேண்டும்;
இல்லையென்றுல், சாம்பலில் கழுதை புறழவில்லையா?

100

பச்சிலைகளெல்லாம் தின்னும் வெள்ளாட்டிற்கு காயசித்தி கிடைத்ததா ? சாகத்தானே செய்கிறது. உலகோர் காயசித்தி என்று பைத்தியக்காரத்தனமாக மருந்துண்பர்.

101

உடலினுள் ஆத்ம தத்துவத்தை உணராமல், வேறுள்ளதென்று தேடுவானேன். சூரியனிருக்க, விளக்கைப் பிடித்துத் தேட வேண்டுமா ?

102

பிற மாதரை விரும்பினல், நமது கௌரவம் கெடும்.
தீயை நெருங்கிய வெண்ணெ, உஷ்ணத்தால் கரையுமல்லவா ?

103

பூசைகளைவிட அறிவுடன் உள்ளம் ஒன்றுதலே சிறந்தது.
பேச்சுகளைவிட மனமே உறுதியானது.
குலத்தைவிட குணந்தான் சிறந்ததாகும்,

104

உலகத்திலுள்ளோருக்கெல்லாம் ஒரே வட்டில் வைத்து உணவு ஊட்டி, நட்புறவுண்டாக்கி, குலங்களை ஒழித்து, வாழ, அவர்கள் தலையில் கைவைத்து நம்பச்செய்து, ஒன்றுகூட்டுவாயாக.

105

கல் நந்தியை விழுந்து கும்பிட்டுவிட்டு, உயிருள்ள நந்தியை (மாட்டை) குத்துவார்கள். பசவ பக்தர்களெல்லாரும் பாவிகள்தான்.

106

அறியேன் என்பவனே உலகில் அறிஞனுவான்.
அறிவேன் என்பவன் சொல்வீச்சுக்காரன்.
சும்மாயிருப்பவனே உத்தமர்களிலேயே உத்தமனுவான்.

107

புல்லைத் தின்பவனுக்கு பழருசி தெரியாதல்லவா ? அதுபோல கொஞ்சம் படித்தவனுக்கு உயர்ந்த ஞானங்களும் வராது.

108

நாய்வாலை மட்டையிற் கட்டிவைத்தால் மட்டையிலிருக்கும்வரை-தான் நிமிர்ந்திருக்கும்; அதுபோல எவ்வளவு சொன்னுலும் மூர்க்கன் தன் பிடிவாதத்தை விடமாட்டான்.

109

குடத்தில் ஓட்டைவிழுந்தால் துணியடைத்து நன்ருக உபயோகிக்க முடியும். மனிதன் இழிந்துபோனுல் அவனைச் சரிசெய்தல் இயலாது.

110

படித்துப் படித்து, மேலும் மேலும் படிப்பதனுல் பயனென்ன ? கல்வியின் மருமத்தை உணர்ந்து, எதை உணரவேண்டுமோ அதை உணரவேண்டும்.

111

சமயமுணர்ந்து நன்ருகப் பேசினுல் யாராலுைம் எதிர்த்துப் பேச-மாட்டார்கள். சமய சந்தர்ப்பங்களே உணர்ந்து பேசவேண்டும்.

112

தனது நன்மையைக் கோரி தருமம் உரைத்தாலும்,
எதிரில்வைத்தே அறிவீனர்கள் திட்டுவார்கள்.
முட்டுகிற மாட்டுக்கு வைக்கோல் போட்டாலும் முட்டத்தான்வரும்.

113

தாய் இருக்கும்போதுதான் தனது செல்லமெல்லாம்.
தாய் போய்விட்டால் தன்னே யாரும் கவனிக்கமாட்டார்கள்.
நல்லகாலமிருக்கும்போதே கௌரவத்தை அடையவேண்டும்.

114

புடலங்காயை கல் வைத்துக் கட்டினுல் வளேவில்லாமல் நன்கு வளரும். நாயின் வாலே அப்படி நிமிர்த்திவிட முடியுமா ?

115

உலகில் நல்லோரைக் காண்பதுதான் அரிதாகும். சாதாரண மனிதர்கள் எவ்வளவு வேண்டுமானுலும் இருக்கிருர்கள். தங்கம் கிடைப்பதுதான் அரிதேயன்றி சாம்பல் எவ்வளவு வேண்டுமானுலும் கிடைக்குமல்லவா ?

116

ஈட்டியினுல் குத்திய காயத்தை ஆற்ற மருந்திருக்கிறது. ஆனுல் இகழ்ச்சியான சொல் என்னும் புண்ணிற்கு மருந்து எங்குயேமில்லே.

117

ஆடம்பரமான வேஷத்தைப் போட்டுக்கொண்டு திரியாதே.
கருத்த நாயை வெளுப்பாக்கமுடியுமா ? பிறவிக்குணம் மனிதன் தலேயோடுதான் போகும்.

118

காதுகள் இருப்பதின் பயன் என்ன ? பெரியோர்கள் சொல்லும் நல்ல சொற்களைக் கேட்கவேண்டும். கேட்கக் கேட்க உனக்கே எல்லாம் தெளிவாகும்.

119

மரியாதை தெரியாதவர்கள் இந்திரன் வந்தாலும் தெரிந்து கௌரவிக்கமாட்டார்கள். குறைக்கும் நாய்க்கு, யோகியைப்பற்றி என்ன தெரியும்.

120

திருடன் கோயிலுக்குப் போனால் முடிச்சவிழ்ப்பானேயன்றி சாமியைக் கும்பிடப் போகமாட்டான். நாய் வீட்டில் நுழைந்தால் சட்டிகளைத் தேடுமல்லவா ?

121

கரும்புத் தோட்டத்தில் செத்தைகள் இருப்பதால் கரும்பின் குணம் கெடுவதில்லை. அறிஞரிடையே அறிவிலான் இருப்பதால் அவர்கள் தன்மை மாறுபடாது.

122

கடையக் கடைய அரணியிற் தீப்பிறக்கும். கடையக் கடையத்தான் வெண்ணையுண்டாகும். அதுபோல் சிந்திக்கச் சிந்திக்கத்தான் உள்ளத்தில் ஆத்ம தத்துவம் உதிக்கும்.

123

எத்தனையோ காவியங்களை ஆராயலாம். இலக்கண இலக்கியங்களைப்பற்றிப் பேசலாம். ஆனால் பொறுமையைக் கடைப்பிடிப்பது மிகவும் அரிதாகும்.

124

முதலில் உன்னைப் பெற்றவர்களையும் உனக்கறிவூட்டிய குருவையும் வணங்கி நன்னிலை பெறுவாயாக.

125

வேண்டும் என்றதும் வராது. வேண்டாம் என்றதும் போகாது. தான் செய்த வினைப்பயன் என்றுணர்ந்து, அதைக்குறித்து கவலைப் படமாட்டான். அவனே சிறந்த அறிஞனாவான்.

126

கல்வியறிவில்லாதவன் அறிஞர்களுக்கிடையே இருந்தும் பண்டிதனுக மாட்டான். குளத்தில் அன்னங்களுக்கிடையில் கொக்கும் இருக்குமல்லவா.

127

நோய்வந்தால் மருத்துவனிடம் சென்று மருந்தை உட்கொண்டால்-தான் தீரும். விளக்கைப் பொருத்தாமல் இருள் விலகுமா ?

128

அதிகம் செலவளித்து உண்பதால் மூலதனத்திற்கு கேடுண்டாகும். சொத்தை அடகு வைத்தால் சிறிது கேடுண்டாகும். ஆதலின் முதலேக் காப்பாற்ரு விட்டால் பின்பு கேடுண்டாகும்.

129

இகத்தில் சுகம் காணவில்லேயாம். இனி பரத்தில் சுகத்தை அடைவதெப்படி ? செல்வமில்லாமல் இன்பம் பெறுவதெப்படி ?

130

உப்பு இல்லாத கீரை சுவையாக இருக்காது. பருப்பில்லாத விருந்தும் பயனில்லே. கடனில்லாதவன்தான் சிறந்த செல்வந்தன்.

131

கடன் கொடுப்போன் முதலில் மகாராஜாவாகத்தான் தோற்றுவான்; அந்தக் கடனே திருப்பிக் கேட்கும்போது யமராஜனுகத் தோற்றுவான். கடன் வாங்கும்போது அதைத் தீர்க்கும் வழிகளேயும் ஆராய்ந்திருக்க வேண்டும்.

132

பொன்மலேயில் குடியிருந்த இந்திரனேயானுலும் ஆசை யாரை விட்டது. கனக குண்டலங்களே கர்னனிடம் சென்று யாசிக்க-வில்லேயா ?

133

பெண்ணேயும் பொன்னேயும் எப்போதும் காப்பாற்றிவரவேண்டும். காக்காதவன் சாவதே நல்லது. காப்பாற்ருதவன் குடி விரைவில் கெடும்.

134

வியாபாரி – பஞ்சத்தை விரும்புவான். வைத்தியன் பிறருக்கு நோய் வரவேண்டுமென விரும்புவான். ஊராரெல்லாம் சீர்மிகுந்த செல்வனைச் சேரவே கோருவார்கள்.

135

மூலகாரணங்களை அற்பன் உணரமாட்டான். தனக்குச் சொல்லத் தெரியாவிட்டாலும் தப்புகளைக் கண்டுபிடிப்பான். சட்டிபானையை உருட்டத்தான் தெரியுமன்றி அதை அடுக்க நாய்க்குத் தெரியுமா ?

136

பிறருக்குத் தோல்வியுண்டாகவேண்டுமென நினைத்து, சிறியோருடன் கூடி ஒரு வேலை செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் எப்படியும் அவர்கள் நட்பால் தனது கௌரவம் கெடும்.

137

குவளைப் பூப்போல கண்களிருந் தென்ன பயன் ?
கிளிபோல சொற்களிருந்து என்ன பயன் ?
அறிவு வலிமையுடன் பிரகாசித்தும் என்ன பயன் ?
பெண் கற்பினுல்தான் பிரகாசிப்பாள்.

138

குயவனுக்கு தத்துவ ஞானத்தை மெதுவாகச் சொல்லிவிடாதே. பிறகு நான் சிருஷ்டிகர்த்தா என்று கர்வித்து உடனே கெடுவானே-யன்றி திருந்தமாட்டான்.

139

துஷ்டன் இறந்தால் வீட்டு வாசல்வரைக்கும் வந்துவிட்டுப் போவார்கள் அன்றி வருந்தமாட்டார்கள். ஓநாய் இறந்துவிட்ட-தென ஆடு வருந்துமா ?

140

அறிவுள்ளவனுக்கு கல்வி தினைத்துணை கிடைத்தாலும் மலையளவு அவன் குணத்தால் மாண்புறும். மலையளவு படித்தாலும் அற்பன் பயனடையமாட்டான்.

141

கோவணம் (கௌபீனம்) அவிழ்ந்துவிட்டதென்று பித்துடைய யோகியை ஊரைவிட்டு வெளியேற்றுவார்கள். இந்தப் பொழுது மறைந்தபின் யாருடைய கோவணந்தான் அவிழாது ?

142

எந்த உயிரையும் கொல்லக்கூடாது. உட்பகையான மத-மாச்சரியங்களைத்தான் கொல்லவேண்டும். தேளின் கொடுக்கு கொட்டியதற்கு தேளைக் கொல்வானேன்? கொடுக்கை மட்டும் தொலைத்தால் போதுமன்றோ?

143

திக்கற்ற அனாதையின் ஏழ்மையைப் போக்கியவன், மக்களிலே சிறந்த மனிதனாக இவ்வுலகில் போற்றப்படுவான். வானுலகிலும் அவன் சிறப்புடனிருப்பான்.

144

தனக்கு நன்மை செய்தவனை நாய் நன்றி மறக்காமல் இருக்கிறது. தனக்குச் செய்த நன்றி மறந்த மனிதன் எவ்வளவு தாழ்ந்தவனாவான்.

145

பொறுமையில்லாத மனைவியினால் யாது பயன்?
அறிவில்லாத மக்களால் என்ன பயன்?
நற்குணமில்லாத படிப்பால் என்ன பயன்?

146

காலத்தை உணராமல் இன்னும் பலகாலமிருக்கிறதெனக் கருதி உள்ள காலத்தை வீணாக்கித் திரிபவன் திடீரென்று விடியும்போதே எல்லோருக்கும் முன்பாகவே இறந்தொழிகின்றான்.

147

கீரை வேகும் முன்பே அதன் காம்பை அரியவேண்டும். வெந்த பிறகு எல்லாம் கலந்துவிடும். காலத்தில் தவறாமல் அறம் செய்தல் வேண்டும்.

148

குணம் குறைவுபட்டால் குலமும் கெட்டுவிடும். பெண் நடத்தை-யினால் மரியாதை போகும். சதுப்பு நிலத்தில் பெய்தமையால் நீர் பயனில்லாது போய்விடும்.

149

ஆசிரியன் வரும்போது உட்கார்ந்துகொண்டு எழுந்திராத சிறுமதியுடையவனுக்கு எப்படி வீடுபேறுண்டாகும்? கணவனை லட்சியம் செய்யாத மனைவிக்கு நற்கதியுண்டோ?

150

தன்னைப்போன்று அவையும் உலகிற் பிறந்தவையன்ரே. தன்னைப்போன்றே அவையும் வாழ்கின்றதல்லவா ! தன்னைப்போன்ற அறிவுடைய பொருளை அறிவுடையவன் கொல்லலாமா ?

151

ஆற்று நீரானது முடிவாக கடலை அடைவதுபோல, மனிதனது தத்துவ ஞானமும் முடிவாக கடவுளை அடைவிக்கும்.

152

நல்லோரிணக்கத்திஞல் அற்ப குணங்களெல்லாம் அழிந்து போகின்றது. உடல் நாற்றம் சந்தனம் பூசுவதால் மறைந்து விடுகிறதல்லவா ?

153

வருந்துவதாலும், அழுவதாலும் பயனென்ன ? உன்னைப் பிறர் இகழ்ந்தாலென்ன ? புகழ்ந்தாலென்ன ? உலகில் லாப நஷ்டங்கள் சகஜமென்று உணர்ந்து உன் உள்ளத்தை நன்னிலையில் வைத்துக் கொள்ளவேண்டும்.

154

ஒருவருடைய தீமையை ஒருவருக்குத் தரமாட்டான். ஒருவரது நன்மையும் மற்ருெருவருக்குத் தரமாட்டான். நன்மையும் தீமையும் தனது செயல்களிலிருந்துதான் வருகிறது என்பதை உணரமாட்டார்கள்.

155

தருமன் கங்கபட்டர் எனும் பெயரில் கஷாயத்தைக் கட்டிக்கொண்டு விராடன் சபையில் அமர்ந்திருந்தான். காலமும் வினையும் யாரையும் விடுவதில்லை என்பதை உணரவேண்டும்.

156

காலகதியை யாராலும் மீற முடியாது. சில சமயத்தில் எளிமையை அடைதல் நேரும். விரலில் மலையைத் தூக்கிய கண்ணனே, ஆலிலையில் படுத்து மிதக்கவில்லையா ?

157

சிறந்த மகான்கள் எங்கும் பிறப்பார்கள். கிளி வயிற்றில் சுகமுனிவர் பிறந்ததாகச் சொல்வார்கள். பருத்திச் செடியில் பிறந்த பருத்தி அழகான சித்திர வேலைப்பாடுடைய ஆடைக-ளாகவில்லையா ?

158

எறும்பு கடித்தால் சுறுக்கென்று வலிக்கும்; பார்க்கப்போனுல் எறும்பு எவ்வளவு சிறியதாக இருக்கிறது. அதன் படைப்பு எத்தகையது ? எறும்புபோல பார்ப்பதற்கு சிறியதாகவும் திறமையிற் சிறந்தும் பல பொருள்கள் படைப்பிலிருக்கின்றன.

159

செய்யவேண்டிய காலமறிந்து ஒரு காரியத்தைச் செய்யாமல் அவசரப்பட்டால் அதுவே விஷமாகலாம். பழுத்தால் இனிக்கும் வேப்பம் பழம், காயாயிருக்கும்போது கசக்கிறதல்லவா ?

160

பிரமத்தைக் காணவோ, சிந்திக்கவோ யாராலும் இயலாது. மணற்கிணறு தோண்ட யாரால் முடியும் ?

161

தானதருமங்களுக்கு மூலகாரணம் கடவுளை அடைவதே. அத்தகைய கடவுள் தாய் தந்தையர் வடிவிலிருக்கிறுன். தாய் தந்தையரைப் போற்றுமல் மனிதன் நரகக்குழியில் வீழ்வானேன் ?

162

மரமானது அழகாக நேராக வளர்ந்தால் அதை நல்ல பொருள்களைச் செய்ய உபயோகப்படுத்துவார்கள். மரம் கரடு முரடாக வளைந்து வளர்ந்தால் விறகாக எரிப்பார்கள். அதுபோன்றே மனிதர்களும் வினைகளுக்கேற்ப பயன்படுவார்கள்.

163

கடல் கடையும்போது திருமாலுக்கு லட்சுமியும், சிவனுக்கு நஞ்சும் கிடைத்தன. யாருக்கு எது கிடைக்குமென்று யாரறிவார் ?

164

காட்டில் திரிந்தாலும் கிடைக்காது. ஆகாயத்திலும் இல்லை. உலகில் தீர்த்தயாத்திரை செய்தாலும் கிட்டாது. உன் உடல் மாசு நீக்கி உடையவனைக் காண்பாயாக.

165

அலையிற் பிறந்த குமிழி பிறந்ததுமே அழிகிறது.
கனவிற் கண்ட செல்வம் கைவரப்போவதில்லை.
உலகின் போகபாக்கியங்களும் இப்படித்தான் என்பதை உணரவேண்டும்.

166

பசி என்று வந்த பரதேசிக்கு ஒருகவளச் சோறுவது தரமாட்டான் அற்பன் தாசிகட்கு எவ்வளவாயினும் செலவழிப்பான்.

167

அறிவைவிட இன்பம் எந்த உலகத்திலும் இல்லை. அறிவை அறிவதற்கு அறிவில்லை, அறிவிற்கு இணை அறிவுதான். அறிவே தத்துவமாகும்.

168

வண்ணான் துணிகளை துவைத்து அடித்து அழுக்கு நீக்கி மடித்து வைப்பதுபோல, புத்தி சொல்கிறவன் நம் மன அழுக்கை நீக்க சொல்லால் அடித்தாலும் குத்தினாலும் நல்லதுதான்.

169

தனது நிழலைத் தானே கண்டுகொண்டிருக்கும் குழந்தை. அதுபோல தன்னிழலைத் தானேகண்டு தன்னை மறந்து செயல் செய்யும் மதிமருண்டவர்களை என்னென்பது ?

170

எளிய வெட்டிவேருக்கு மணம் வைத்தவன், உயர்ந்த தங்கத்துக்கு மணமில்லாதபடி செய்துவிட்டான். பிரமனின் படைப்பெல்லாம் இப்படித்தான் முழுநிறைவற்ற வீண் செயலாகத் தோற்றுகிறது.

171

மல்லிகைச் செடிக்கு நன்னீர் ஊற்றாவிட்டால் எப்படிப் பூக்கும் ? வினையாற்றாமல் பயன் கிடைக்குமா ? சமையல் செய்யாமல் சாப்பாடு கிடைக்குமா ?

172

முதன்முதலில் யார் பிறந்தார் என தெரிய விரும்பினுல் அது குறி கேட்பதுபோல சிக்கலை விளைவிக்குமன்றி பயன் இராது. எல்லா வற்றிற்கும் மூலகாரணமான ஆதிசக்தி ஒன்று உண்டென்றும், அது வெட்டவெளியென்றும் நம்புவாயாக.

173

உடும்பின் வாலைப் பிடித்து உறுதியுடன் இழுத்தாலும் அடி பெயராமல் ஊன்றிநிற்கும். அதுபோன்ற உறுதியுடன் முயன்று இன்புறவேண்டும்.

174

இலட்சியமே அகல் ஆக, குணமே திரியாக, வினைகளே எண்ணெ யாக வைத்து ஞான விளக்கேற்றி மெய்ப்பொருளைக் காண்பாயாக.

175

கல்லோடு கல்லைச் சேர்த்து உராய உராய நுண்மையை எய்தும். அதுபோல் எல்லா வினைகளும் முயல முயல எளிதில் கைவரும்.

176

குடம் உடைந்ததும் குடத்திலிருந்த வெளியானது ஆகாயத்திற் கலந்தாற்போல், உடல் மாய்ந்ததும் உயிரும் பிரமத்துடன் லயமாகிறது.

177

சகல கல்வியும் கற்றுச் சிறந்தவரே எனினும் அடிக்கடி பழகுவதால் அவரை எளிதாகக் கருதுவார்கள். வீட்டு முற்றத்தில் இருக்கும் மருந்துச் செடியை யாரும் லட்சியம் செய்யமாட்டார்கள்.

178

குதிரை மிரண்டு ஓடுவதுபோல மனமும் நம்வசமின்றி ஓடுகிறது. அதை நயத்தாலோ, பயமுறுத்தியோ, நம்வசப்படுத்திக்கொண்டு நம்வாழ்க்கைப் பயணத்தை நடத்தவேண்டும்.

179

அஞ்ஞானமெனும் காட்டை ஞானமெனும் வாளால் வெட்டியெறிந்து ஆன்மீகப் பேரின்பத்தை அடைவாயாக.

180

பசும்பாலைப் பீய்ச்சி காய்ச்சினால், உறைந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் என மாறுபாடுறும். அதுபோல தன்னுடலையும் ஆராய்ந்தால் ஆன்ம தத்துவம் தென்படும்.

181

வீட்டுக்குப் பின்னால் கொடி, இங்கிலீகம், பாதரசம் எல்லாம் இருக்க தங்கம் எதற்கு ? சத்தினுடைய துணையுடன் அதைச் சாதிக்க வேண்டும்.

182

கரைமீதுள்ள மண், பாறைகளிலுள்ள கற்கள், புற்றிலுள்ள பாம்பின் சட்டை இம்மூன்றிலும் தங்கம் உண்டாகிறது.

183

கோவணம் கட்டிக்கொண்டு தான் முனிவன் என்று சொல்லி மனதிலுள்ள ஆசைகளை மறக்கமாட்டான். உருவம் வேறு உள்ளம் வேறாகத் திரிகின்றார்கள்.

184

தாமரை இலைத் தண்ணீர்போல வேமனா உலகில் வாழ்ந்து, கடவுளைத் தேடி, மாயையை நம்பக்கூடாதென்று உபதேசிக்கின்றான். இதை மக்கள் உணரவில்லையே !

185

உடலே சிறைச்சாலையாகும். மனைவி விலங்கிட்ட சங்கிலி. மக்கள் சங்கிலி கட்டும் ஆணியாவர். இதிலிருந்து விடுதலைபெற முயல்.

186

நீந்தத் தெரிந்தவனே யெனினும்கூட சில சமயத்தில் கிணற்றில் வீழ்ந்து இறந்துபோவதும் உண்டு. அதுபோல யோகமறிந்தாலும் கூட தவறிவிடுவதும் உண்டு.

187

நான்மறை கற்றும் நடத்தை சரியில்லாதவன் பிராமணனாயினும் பெருமைக்குரியவனாகான். கணவனிருக்க மற்றவனை நினைக்கும் காரிகைக்கு ஒப்பாவான்.

188

ஆற்றைக் கடந்து செல்கின்றவன் கரையை அடைந்ததும் படகை லட்சியம் பண்ணுததுபோல் யோகியும் உடலை அலட்சியப் படுத்துகிருன்.

189

விவசாயி, களையெடுத்து பயிரைக் காத்து அன்புடன் வளர்ப்பது போல, மாயை எனும் களையெடுத்து வலிமையுடன் இருக்கவேண்டும்.

190

எவ்வளவு செல்வம் கூடுகிறதோ அவ்வளவு கவலைகளும் வந்து சேர்கின்றன. கவலைகளால் மனம் கெடுகிறது. கவலையற்று இருப்பதே கெடாத செல்வமாகும்.

191

பத்தாயிரம் ஆடுகள் கூடியிருக்கும் இடத்திலும் தாயை அறிந்து கொண்டு அதன் குட்டி வந்துசேரும். அதுபோல யோகியை அறிந்து பக்தனும் வந்துசேர்வான்.

192

சிறகுகளிருந்தும் பறவையானது பறக்காவிட்டால் அது இதர ஜந்துக்களைவிடச் சிறந்ததாகக் கருதப்படுமா ? அதுபோன்றே யோகமார்க்கம் அறிந்தும் யோகியாகாதவனும் சிறப்புறமாட்டான்.

193

தானுகக் கீழே வீழ்ந்த பக்குவமான பழத்தைத் தின்பவன், பச்சைக் காய்க்கு ஆசைப்படுவானே? அதுபோல பேரின்பநிலை உணர்ந்தவன் சிற்றின்பமான உலக இன்பங்களைக் கருதமாட்டான்.

194

பிறருக்கு உபகாரம் செய்யாவிட்டாலும் அபகாரம் செய்யாமல் இருந்தால், அதுவே கல்யாணம் செய்வித்த புண்ணியத்திற்குச் சமமாகும்.

195

வெற்றிலை பாக்கு சுண்ணும்பு எனும் மூன்றும் வேறு வேறு நிறமேயானுலும் அவை ஒன்ருகும்போதுசிவப்பு வண்ணம் தோன்றுவதுபோல முக்குணங்களும் கலந்து பரமாத்மா விளங்குகிருன்.

196

வாத பித்த சிலேட்டுமங்களே ஒன்ருகவும், பகையும் நட்பும் ஒன்ருகவும், அன்னமும் மருந்தும் ஒன்ருகவும், பொன்னும் ஓடும் ஒன்ருகவும், ஜாதி பேதங்களே ஒன்ருகவும், கரும தருமங்களே ஒன்ருகவும், சுக துக்கங்களே ஒன்ருகவும், இரவு பகலே ஒன்ருகவும் உணர்ந்து, ஆன்மாவின் ஒளிரும் சிவனேத் தெளிந்து மனதொன்றி பேரின்ப நிலேயை உறுவாயாக.

197

உருவை ஆராயின் அருவாகக் கருதலாம். அருவமும் உருவமெனலாம். உருவும் அருவும் அற்ற அற்புதமாக பிரம்மம் விளங்குகிறது.

198

நான், நீ யென்னும் வேற்றுமையை மறந்தவனே சான்ருேனுவான். நான் நீ எனும் பேதத்தை மறந்துவிடுவாயாக.

199

எவ்வளவுதான் கழுவினுலும் எச்சில் போகுமா ? வாயுள்ளவரைக்கும் எச்சிலும் ஊறத்தான்செய்யும். அனுதினமும் பொய் சொல்பவனுடைய வாயும் அப்படித்தான். எவ்வளவு திருத்தினுலும் பொய் கூறுவதை விடமாட்டான்.

200

பெண்ணே விரும்பும்போது இன்பமாக இருக்கும்; அவள் கைக்குக் கிடைத்தால் அவ்வின்பம் தீர்ந்துவிடும்; சிற்றின்பம் இத்தகையது. பேரின்பநிலே இப்படியின்றி நிரந்தர இன்பமாகும்.

201

தயிரிலிருந்து பிறந்தும் தயிரில் மிதக்கின்ற வெண்ணேபோல, உலக மாயையிற் பிறந்த நாமும் தத்துவமுணர்ந்து தனித்திருக்க வேண்டும்.

202

தனக்குள் எல்லாம் இருக்க, தனக்குள்ளே தேடாமல், புற உலகில் தேடுகின்ற உடலேச் சுமந்தலேயும் இந்த மாடுகளுக்கு உண்மையை உணர்த்துவது அரிதாகும்.

203

கயிற்றைப் பாம்பென மயங்கும்போது பயமுறுகின்ருய். பாம்பன்று, கயிறுதான் என உணர்ந்த பின்னர் பயம் நீங்குகிருய். அதுபோன்றே மாயையை விட்டு பயமொழிந்தபின் பிரம்மத்தை உணர்வாய்.

204

மொழிகள் எத்துணையாயினும் கருத்து ஒன்றே. அதுபோல
இறைவன் உலகில் பலவேறு ரூப பேதத்துடன் திகழ்கின்ருன்.
உன்னை நீயே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றுணர்ந்து
உன் குற்றங்களை நீக்குவாயாக. முக்தியடைவாய்.

205

எல்லாத் தானங்களிலும் அன்னதானமே சிறந்ததாகும். நம்மைப் பெற்றவர்களைவிட பெரியோர்கள் இல்லை. குருவைவிட ச் சிறந்தவை வேறென்றுமில்லை.

206

குருவினுடைய கற்பித்தலின்றி ஒருவன் இலட்சியத்தை உணர முடியாது. பிரம்மாவாயினும் அவனுடைய தந்தையாயினும் இயலாது. சாவியின்றி பூட்டைத் திறக்கமுடியுமா ?

207

பெண் தந்தவனையும், பசிக்குண வீந்தவனையும், என்றும் அவர்களை கௌரவிக்க வேண்டும். அப்படிச் செய்யாதவன் கடையனுவான்.

208

நிழல்தரும் மரம், சற்குரு இருவரிடமும் அருகடைந்தால்தான் பயன் பெறலாம். அங்குமிங்கும் அகன்று சென்ருல் பயன் கிட்டாது.

209

வள்ளல் இல்லாத ஊர் பேய்களின் பட்டணமாகும்.
நீதியில்லாத சொல் கல்லாலெறிவதையொக்கும்.
அன்பில்லாத விலைமகள் கூட்டம் பிணத்தைச் சுமந்ததொக்கும்.

210

நாட்களைக் கடத்தி வீணுக்காமல், ஆன்ம தத்துவமுணர்ந்து, உன்னை நீ உணர்வாயாக. இல்லாவிட்டால் உன்னை மாயையானது கெடுத்துவிடும்.

211

நூறு பொய் சொல்லிவிடலாம். ஆனால் எழுதக்கூடாது. எழுத்தைவிட வேறு சாட்சியே வேண்டாம். இல்லாததை எழுதுவது அவமானத்தை உண்டாக்கும்.

212

பாலுக்காக அழும் குழவியை, பசி தாகங்கட்கு வருந்தாமல் தாயானவள் வேலைகளை உடன் முடித்துக்கொண்டு விரைந்து வந்து, எடுத்துக்கொண்டு முத்தமிடுவாள். இதுபோன்றதே ஆன்ம தாகமும் ஆகும்.

213

உண்மை சொல்பவன் உளத் தூய்மை உடையவனாவான். உண்மை சொல்பவனே நன்னெறியாளனாவான். உண்மை சொல்லாதிருப்பது அற்பத்தனமானது.

214

இரும்பும் தீயும், மரமும் பட்டையும், மண்ணும் மரமும் இணைந்தாற்போற் தோன்றினும் தனித்துள்ள தன்மைபோல உடலும் உயிரும் தனித்துள்ளன.

215

நெருப்பில் நீரை ஊற்றினால் கரியாகிறது. நெருப்பில் குடத்தை வைத்து நீரூற்றினால் நீர் கொதிக்கிறது. இந்த விசித்திரத்தை உணர்ந்து பார்ப்பாயாக.

216

மழை என்றால் அஞ்சி உடனே உள்ளே ஓடுகிறார்கள். எவ்வளவு வெயிலானாலும் பொறுத்துக்கொள்கிறார்கள். இவ்வுலகோர் நல்லதைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். ஏனோ தெரியவில்லை?

217

சமுதாயத்தில் எல்லாம் ஒன்றானால் பகையிருக்காது. ஏற்றத்தாழ்வுகளினால்தான் துன்பங்களுண்டாகின்றன.

218

ஒற்றுமை என்றும் மிகவும் அவசியமாகும். அதனுடைய வலிமையினால் எதுவும் கைகூடும். நார் பலகூடி கயிறுக்கி யானையைக் கட்டிப்போடவில்லையா?

219

சிறந்த இரத்தினமணிகளை தங்கத்தில் வைத்து இணைத்தால்தான் சோபிக்கும். மற்ற இரும்பு பித்தளை போன்ற உலோகங்களில் வைத்தால் பிரகாசிக்காது. அதுபோல நல்லோர் நல்லோரிடம் சேரவேண்டும்.

220

பொறுமை கொள்பவனுக்கு பிறருடைய ஆக்கமானது சுவைக்காது. பிடிவாதக்காரனுக்கு சாந்த குணமும் சுவைக்காது.

221

கல்வியிருந்தும் வினயம் (அடக்கம்) இல்லாவிட்டால், சுமங்கலிக்கு மேலான நகைகளிலிருந்தும் மங்கலநாண் இல்லாததற்கொப்பாகும்.

222

உண்ணப்பருக உதவாத மனிதர்கள் இவ் உலகில் பிறந்தாலென்ன அவர்கள் இறந்தால் என்ன? புற்றினுள் கரையான்கள் பிறக்கவில்லையா ? இறக்கவில்லையா ?

223

எவருக்கும் அவரது குணங்களை என்ன சொன்னாலும் மாறுவதில்லை. நாய்வாலை நிமிர்த்த முடியுமா? அதுபோலத்தான் இதுவும்.

224

உண்மை பொய் என்பதை கடவுள்தான் அறிவார். நீர்தான் பள்ளத்தை அறியும். மகனது பிறப்பைப்பற்றிய உண்மை தாய் மட்டுமே அறிவாள்.

225

உடல் தளர்ந்து, பற்கள் கழன்று, நரைதிரை வந்துற்றாலும் கூட மனிதன் மோகத்தை விடுவதில்லை.

226

தன் உள்ளத்தில் வஞ்சகம் இருந்தால் தன்போன்றே மற்றோரும் வஞ்சகராகத் தோன்றுவர். தனதுள்ளத்தில் வஞ்சகத்தை நீக்கி விட்டால் தனக்கெவரும் வஞ்சகனாகத் தோன்றமாட்டான்.

227

பன்றி பல குட்டிகள் போடும். யானை ஒரே குட்டிதான் போடும். உத்தம மனிதன் ஒருவன் போதாதா ?

228

கயவனைக் கயவன்தான் போற்றுவான். அறிவிலாதான் கருத்திசைந்து கஞ்சனைப் போற்றுவான். பன்றியானது சேற்றைப் போற்றுமேயன்றி பன்னீரைப் போற்றுமா ?

229

சொல்லெல்லாம் பொய் - மனதெல்லாம் கள்ளம் இத்தகைய உயிர் எதற்கு! வாழ்க்கைதான் எதற்கு ! சொல் உண்மையானால் அதுவே நூருண்டு வாழ்க்கைக்கு சமமாகும்.

230

எண்ணெயுள்ள விளக்கானது நன்ருக எரியும். எண்ணெ இல்லா விட்டால் விளக்கும் அவிந்து போகிறது. அதுபோல உடல் அழியுமாயின் உள்ளமும் உடன் மாய்ந்துவிடும்.

231

உடல் யாருடைய சொத்து ? பலகாலும் பேணி வளர்க்கின்ருேமே இந்த உடல் யாருக்கு சொந்தம். உயிர் யாருடைய சொத்து? பற்ருேடு வாழ்கின்ருேமே , பணம் யாருடைய சொத்து ? அறம் ஒன்றுதான் நமது சொத்தாகும்.

232

அஞ்ஞானமே சூத்திரத்துவமாகும். மெய்ஞ்ஞானமே பிரம்மத்துவ மாகும். இது சுருதிகளில் கேட்கப்படவில்லையா? அஞ்ஞானத்தில் நீங்கி மெய்ஞ்ஞானமடைந்து வால்மீகி பிரம்ப பதத்தையடைந்ததை ஆராய்வீர்களாக.

233

மருந்துகளில் பலவிதம் உண்டு. ஒருமருந்து வலி தீர்க்கும். ஒரு மருந்து வசியம் சேர்க்கும். ஒருமருந்து நோய் போக்கும். ஒருமருந்து உடல் வலிமை ஆக்கும்.

234

எப்போதும் பொய்சொல்பவனின் வீட்டிலிருந்து திருமகள் வெளியேருமல் ஏன் இருப்பாள்? ஓட்டைக் குடத்தில் நீர் ஊற்றி வைத்திருந்த கதைதானுகும்.

235

அரசர்கட்கு எப்போதும் போர்மேல்தான் நினைவு. முனிவர்கட்கு எப்போதும் பிரம்மத்தைப்பற்றித்தான் நினைவு. அற்பர்கள் எப்போதும் ஆரணங்குகள்மீதுதான் நினைவு.

236

மெய்ப்பொருள் உணர்ந்தவன் - கடவுளை அறிவான். எல்லாவிதமான பற்றுக்களையும் அழித்துவிடுவான். கதலிப்பழம் விழுங்குவது போல விஷத்தைக்கூட விழுங்கி விடுவான்.

237

உயிர்த் தத்துவத்தை அறிந்தால் அறிவென்றும் கெடாது. கடவுட் தத்துவத்தை அறிந்தால் ஞானஒளி உண்டாகும். ஒளி பிறந்தால் இருள் நிற்காதல்லவா ?

238

ஆசையால் மனிதர்கள் ஆயுள்நாள் முழுதும் மயக்கத்தை விட முடியாமல் அலைவார்கள். கள்குடத்தில் மொய்க்கும் ஈக்களைப்போல திரிவார்கள்.

239

ஜபம் முதலிய வெளிப்பூசைகள் ஏராளமாக செய்து பின்னர் கபடத்தை விட இயலாமல் முக்தியை அடையமுடியாமல் மனிதர்கள் இருளில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

240

காற்றில்லாத விளக்குச் சுடர்போல அலைகளும் சுழிகளுமில்லாத கடல்போல சலனமற்று ஆத்மா நிர்விகாரமுடன் இருந்தால் அதை முக்தி என்று சொல்வார்கள்.

241

தேன்நிலை தேனீக்குத்தான் தெரியும். பூந்தாதுநிலை வண்டுகட்குத் தான் தெரியும். பரமயோகியின் நிலை பக்தனுக்குத்தான் தெரியும்.

242

சொல்லை இடரின்றி திருத்திவிடலாம். கல்லையும் நேராக திருத்தி விடலாம். ஆனால் உள்ளத்தை மட்டும் யாராலும் திருத்திவிட முடியாது.

243

இந்தக்கண்களால் எப்படி பிரம்மத்தைப் பார்க்க முடியும். அதைக் காணும் கண்களும் வேறு. பார்வையும் வேறு. பார்வையை உள்ளே செலுத்திப் பார்க்கவேண்டும்.

244

ஒருவர் வயிற்றலடித்து ஒருவர் சாப்பிடுவார்கள். அவர்கள் வயிற்றை மரணமானது சாப்பிடும். சிறு மீன்களை பெரிய மீன் விழுங்குகிறது. அந்த மீனை மனிதன் விழுங்குகிறான்.

245

கற்பாறையைப் பிளந்து விடலாம். மலைகளைக்கூட தூள் தூளாக்கி விடலாம். ஆனால் கடின மனமுடையவனை மட்டும் மனம் நெகிழச் செய்ய முடியாது.

246

பிரம்மம் எங்கே இருக்கிறது என்று பலதடவை கேட்கிறார்கள். அறியாத மக்களின் பைத்தியக்காரத்தனம்தான் இது. பிரம்மம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்துள்ளது.

247

மனமென்னும் வேர் அற்றால்தான் இயற்கை என்னும் மரம் விழும். ஆசை என்னும் பெருங்கிளைகள் காயுமல்லவா?

248

கொடுப்பவனருகில் ஈயாதான் இருந்தால் செத்தாலும் கொடுக்க விடாமல் தடுப்பான். கற்பகமரத்தருகே கள்ளி முளைத்தாற்போலத்தான்.

249

இனிமைகளுள் மிக இனியது உயிர்தான். உயிரைவிட தங்கம் இனியது. தங்கத்தைவிட பெண்ணின் பேச்சுகள் இனிமை யுடையது.

250

கழுதையின் உடலில் சந்தனம் பூசினால் அதொன்றும் உணராமல் உதைத்துத் தள்ளும். பொருத்தமில்லாத பெண்ணை எவ்வளவு போற்றினாலும் நம்மைத் தூற்றத்தான் செய்வாள்.

251

கடன் வாங்கினல் கடவுளேயாயினும் துன்பமாகும். கயவனுடைய நட்பும் அப்படித்தான். பொய் சொல்வதும், பிணயம் வைப்பதும் அப்படியே துன்பத்தைத் தரும்,

252

பிடிக்க விரும்பும் பாம்பு, படத்தைச் சாய்த்துக்கொள்ளும். கெடுக்கப் பார்ப்பவன் நட்பாடி வருவான். கொல்ல விரும்பும் அரசன் அன்பாக ஆதரிப்பான்.

253

சக்கரையை கலந்துகொண்டு தின்ருல் மக்கியதவிடுகூட ருசியாகத் தான் இருக்கும். அதுபோல மோகமிகுந்தால் அடிமைப்பெண்கூட தெய்வீகப் பெண்ணணங்காகத் தோற்றுவாள்.

254

தீமைவந்தால் கடவுளேத் திட்டுவான். நன்மை வந்தால் தன்னேத் தான் புகழ்ந்து கொள்வான். நன்மையும் தீமையும் ஆராயின், தான் செய்த வினேப்பயனே ஆகும்.

255

பசித்தீக்கும், காமத்தீக்கும், சினத்தீக்கும் ஒடுங்காமல் ஒரே மனதுடன் இருந்தால்தான் மோட்சம் கிடைக்கும்.

256

எந்தப்பக்கம் மனம் செல்கிறதோ அந்தப்பக்கத்திற்கு ஐம்பொறிகளும் இழுத்துச் செல்லப்படுகின்றன. உன்பக்கம் மனம் சென்ருல் மற்றெவ்விடத்திற்கும் பொறிகள் செல்லாது.

257

வயிற்றுக்காக ஏன் மனமே குழப்பமடைகிருய். வயிற்றுக்கு எப்போதுதான் திருப்தி உண்டாகிறது. கல்லினுள் தேரைக்கும் வயிறு இருக்கத்தான் செய்கிறது.

258

அழகிருந்தென்ன; செல்வமிருந்தென்ன, படிப்பிருந்தென்ன, நில புலங்கள் இருந்தென்ன, புதல்வரைப் பெருதவர்க்கு உயர்வில்லே.

259

ஆகவேண்டிய வேலைகள் ஆகாமல் போகாது. ஆகாத வேலைகள் எவ்வளவு முயன்றாலும் ஆகவே ஆகாது. விதி வேறென்றிருக்க நம் வசம் என்ன இருக்கிறது.

260

வலிமையற்றவனுக்குதவாத திறமை என் செய்ய? சுற்றத்தைப் போஷிக்காத செல்வம் எதற்கு? நோய் தெரியாத, இயலாத மருத்துவம் ஏன் ?

261

மழை வருவதும், உயிர் போவதும் யாராலும் நிச்சயித்தறிய முடியாது. பெரியோர்கட்கு மட்டுமே உணர முடியும். இதை தெரிந்துகொண்டால் கலியுகம் இப்படி இருக்குமா ?

262

அற்பனுக்கு அதிகாரம் கொடுத்தால், பெரியோர்களையெல்லாம் விரட்டியடிப்பான். செருப்பை கடிக்கும் நாய்க்கு கரும்பின் சுவை தெரியுமா ?

263

மரஞ்செடிகளை வெட்டி, சுற்றிலும் சுவர்வைத்து, இப்படியும் அப்படியுமாக பெரியவீடு கட்டிக்கொண்டு, துள்ளிக் குதிப்பான் மனிதன். ஆனால் மேல்விளையும் தீமைகளைப்பற்றி கருதாமல் கர்வ மடைவான்.

264

மனைவி கணவனது நலத்திற்கு இணங்கி இருந்தால் மனைவி எனலாம். அப்படியில்லாவிட்டால் யமனது தூதன் என்றே க்ருதப்படுவாள்.

265

தும்பைச் செடிக்கு முள் கூடவே பிறக்கும். விதையிலிருந்து வரும் போதே முள்ளும் பிறந்தாற்போல, மூர்க்கனுக்கு தீய எண்ணங்கள் முன்பாகவே பிறக்கும்.

266

செல்வமே உலகிற்கு அடிப்படை. எல்லா தருமங்கட்கும் செல்வமே ஆதாரமாகிறது. செல்வத்திற்கு நற்குணமே ஆதாரமாகும். மனமே முக்திக்கு ஆதாரமாகும்.

267

இல்லை இல்லை என்றால் இல்லவே இல்லை. அல்லன் அல்லன் என்றால் அல்லவே அல்லன். துணையாயுள்ளான் என்றால் இருக்கிறான்.

268

புஸ்தகங்கள், ஜடைகள், புலித்தோல், பிரம்பு, கமண்டலம், முதலியவை எல்லாம் சுமை ஒன்றே தவிர மோட்சம் கிடைக்காது.

269

வேம்பை பால்விட்டு ஆயிரமாண்டு வளர்த்தாலும் அது கசப்பை விட்டு இனிப்பை அடையாது. கயவன் குணத்தை விடுத்து நல்லவனாவானா ?

270

ஆமாம் என ஒருவன் சொன்ன சொல்லை இல்லை என்று மறுத்துக் கூற ஒருகணம் போதும். ஆனால் அச்சொல்லை நிலைநாட்ட அவனது தாத்தாதான் வரவேண்டும்.

271

எந்த வேலையிலும் தாமதம் கூடாது. தாமதத்தை மனிதன் விட்டு விட வேண்டும். அறிவீனன் சோம்பலைப் போற்றுகிறான்.

272

தானமறிந்து செய்யும் வள்ளலைச் சேர்ந்து, மூர்க்கன் கெடு வசனங்கள் பேசுவான். சந்தன மரத்திலே பாம்பிருந்து கெடுப்பது போலாகும்.

273

வனங்களில் திரியும் மகாயோகி கூட மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் மமதையால் கெட்டுவிடும்போது அறிவீனன் கெடுவதில் என்ன அதிசயமிருக்கிறது.

274

வாய்ருசிக்காக ஏதாவதொன்றை தின்ன ஆரம்பித்து அதையே பழக்கமாகக் கொண்டு விடுகிறுன். ஒரு தடவை மரியாதை போய் விட்டால் மீண்டும் அது வருமா ?

275

ஆன்ம செல்வத்தை அறிவெனும் அஞ்சனத்தாலுணர்ந்து அதன்படி நடந்துகொள்வான், யோகி. சேவல் கூண்டிற்குள்ளிருந்தும் பொழுதறிந்து கூவுமல்லவா ?

276

களங்கமுடைய உளமுடையவர்கள் ஆன்ம தத்துவத்தை உணர மாட்டார்கள். சேற்றில் ஞாயிறு காணப்படுவதில்லே. தெளிந்த நீரில் தான் காணப்படும். நல்லவனது உடலும் தெளிந்தநீருக்கு சமமாகும்.

277

மனதை அடக்கி கௌரவத்தையடையும் அறிஞன் அடிக்கடி பேசாதிருப்பது அறமாகும். அடிக்கடி பேசுவதால் அவனது தத்துவமே கெட்டுவிடும்.

278

வாதாடமாட்டான். யாரோடும் அதிகம் பேசமாட்டான். தான் துன்பத்தை வரவழைத்துக் கொள்ளமாட்டான். அறிவாளியாகி பெருமையடைய முயல்வான். இப்படிப்பட்டவனே அறிஞனுவான்.

279

பொன்மான் உலகில் உண்டா இல்லேயா என்று ஆராயாமல் பெண்ணே தனியே விட்டுவிட்டு ராமன் மான் பின் போனுன். கடவுளேயானுலும் பொன்மேல் ஆசைப்படத்தானே செய்கிறுன்.

280

பெண்மேலும் பொன்மேலும் ஆசையில்லாதவன் இவ்வுலகத்திலே இல்லே. இருந்தாலும் அவன் தென்படமாட்டான்.

281

தாயுக்கும் பிள்ளேக்கும்கூட சண்டையை மூட்டிவிடுகிற பணம் இன்பத்தை தராதென்பார்கள். ஆனுல், சம்பாதிக்காமல் காலத்தை எப்படிக் கழிக்கமுடியும். வாழ்க்கைக்குப் போதுமான அளவு சம்பாதிக்கவேண்டும்.

282

சக்கரை கலந்து பால் ஊட்டினுலும் பாம்பு தன்னைக் கொத்தத்தான் வரும். கபடமுள்ளவனை அதுபோலறிந்து விழிப்புடனிருக்க வேண்டும்.

283

அந்தராத்மா சொற்படி நடந்து அனுபவமடைந்து பெரியோரை என்றும் வணங்கி, தவத்தோடு, நீதியாக நடப்பவனுகி புகழ் பெற்றவனே, மனிதன் என்று சொல்லத் தகுந்தவன். அவனுக்கு யாரும் இணையாகமாட்டார்கள்.

284

முனிவர்கள் சாதாரண மனிதர்களைப்போல்தான் இருப்பார்கள், அவர்களது உபதேசம் மேருவுக்குச் சமானமாகும். அது உள்ளிருக்கும் அறிவின் பெருமையேயாகும்.

285

புருவிற்காக தன்னுடல் அரிந்து கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி சரிதம் மறக்கப்படாமல் புகழப்படுகிறது. கயவரை யாரும் கருதார். பரோபகாரியை இந்தப் பாரதம் என்றும் போற்றும்.

286

எவன் பரோபகாரம் செய்வதே கடன் என உணர்ந்து செய்கிருனே அவனே எல்லா யோகங்களும் உணர்ந்த பிரம்மஞானியாவான்.

287

கிடைக்கின்ற எல்லா நற்குணங்களையும் உனதாக்கிக்கொள். பாவகுணங்களை யெல்லாம் தூர எறிந்துவிடு; பெரியோரை யண்டி வழியறிந்து வாழ்.

288

தன்மையறிந்து சொல்லின், ஒரு சொல்லே போதுமானது. வெறும் பேச்சுக்கள் பல பிதற்றுவதால் என்ன பயன் ? உளமார கடவுளை ஒருதடவை கும்பிட்டால் போதாதா ?

289

தசரதன், இராமனுக்குப் பட்டம்கட்ட நினைத்தான்; ஆனுல் அவனே சடாமுடிகளைத் தரித்து வனம் சென்றுன். நாம் நினைப்பதன்றி, நடப்பது கடவுள் செயலல்லவா ?

290

பசுக்கள், உழுதும், பால்கொடுத்தும், உணவாகியும்கூட உதவி மிகுந்த கஷ்டமடைகின்றது. அந்தோ! அதன் வினை கடைத்தேருதா?

291

காந்தம் இரும்பைக் கவர்வதுபோல, ஆத்மாவினுல்
தான் விடுதலைபெற்று பிறரையும் விடுவிப்பான்.
பரமாத்ம சொரூபனுகிருன்.

292

மெய்யான உட்பொருளை அறியமுடியாமல், மதங்களைக் கற்பித்து மக்கள் துன்பப்படுகிருர்கள். கண்ணுடிவீட்டுக்குள் இருக்கும் நாய் கலவரமடைந்தாற்போல மயக்கமடைகிருர்கள்.

293

மண்ணும் விண்ணும் கலந்த நடுவிடத்தில் எத்தனையோ ஜீவராசிகள் வாழ்கின்றன. அவற்றை யாராலும் அளந்தறிய முடியாது. அப்படி இருக்கும் உயிர்களெல்லாம் சாகத்தான்போகிறது. ஆகையால் நிலையாமையை உணர்ந்து நீதி நெறி நில்.

294

வேப்பம்பட்டையைத் தின்ருல் விஷ ரோகங்களும் நீங்கும்; உடல் ஒளியுண்டாக்கும்; வலிமையுண்டாக்கும்; தின்னத்தின்ன அதுவே இனிப்பாகவும் இருக்கும்.

295

அந்தரங்கத்தில் ஆராய்ந்து, சிந்திக்கச் சிந்திக்க, தனக்கு முக்தி கிடைக்கும். வெளிப்பேச்சுக்கள் பேசுவதால் அதை அறியமுடியாது.

296

இதழமுதம் பருகி எல்லாமே மறந்துவிடுகிருன். பெண்ணின் அழகைக் கண்டு தன்னையே மறந்துவிடுகிருன். இன்மொழி கேட்டதும் இலட்சியத்தையே மறந்துவிடுகிருன். ஆதலின் யோகி பெண்மாயையிற் சிக்கக்கூடாது.

297

ஆசையென்னும் கயிற்றை அறுத்து எறியாதவனுக்கு பரம் இல்லை. பெருச்சாளி உண்டியாசையினுல்தானே கூட்டிலகப்பட்டு சாகிறது.

298

மெய்மை பொய்மைகளை உணர யாரால்முடியும் ? அப்போதைய ஸ்திதிகதிகளை (இடம், பொருள், ஏவலைக்கொண்டு) தெரிந்தால் தெளிவாகும். கேட்ட உடனேயே ஆராயாமல் ஒரு முடிவெடுத்துக் கொள்ளக்கூடாது.

299

(சர்க்கஸ்) வித்தைக்காரன் திறமையுடன் ஆடுவதெல்லாம் வயிற்றுக் கஞ்சிக்காகத்தான். அதே திறமையை யோகத்தில் காட்டினால் பேரின்பமடைவான் அல்லவா ?

300

வீட்டு வாசலுக்கு, கதவு, நிலை, தாள்ப்பால் முதலியவை இருப்பது போலத்தான் வாயுக்கும் பல், இதழ் முதலியவை அமைந்துள்ளன. ஆதலின் நியமங்களறிந்து அறத்தாறறிந்து, பேசினால் அவன் சிறந்தோனாவான்.

301

மக்கள் ஜீவாத்ம பரமாத்ம பேதமுணர்ந்து நடந்தால் பாவக்கடலில் விழமாட்டார்கள். கடலில் கப்பலோட்டுபவன் ஆற்றில் மூழ்கி-
விடுவானா ?

302

பரமாத்மாவை உணர்வது அரிதா ? அணுத்துகளில் மிகு நுண்ணிய நிலையிலும் ஆராயும்போது எல்லா உருவங்களிலும் அவன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான்.

303

சாதாதாரண மனிதனே ! ஒன்றைக்கேள். மெய்ப்பொருள் எது ?
பொய் எது ? என்பதை உணர். உனது எண்ணமே பந்தங்களா-
கின்றன. உனது எண்ணமே பந்தங்களைக் கெடுத்து விடுதலையை-
யும் தருகிறது. ஆதலின் உன்னை நீயே உயர்த்திக்கொள்க.

304

இந்த இளமையிலேயே இறை வழிபாட்டுடன் நன்னெறியில் நடந்து இலட்சியத்தை உறுதியுடன் அடைய முயலவேண்டும். இல்லாவிட்டால் இன்புற இயலாது.

305

இப்பொருள் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காதென எப்பொருள்-மேல் பற்றுவைத்து மமகாரத்துடன் இருக்கிறோமோ அதுவே நமது பிறப்புக்கு வித்தாகும்.

306

எல்லா தானங்களிலும் அன்னதானமே சிறந்ததாகும். நம்மைப் பெற்றவர்களைவிட பெரியோர்கள் இல்லை. குருவைவிடச் சிறந்தவை வேறொன்றுமில்லை.

307

இவ்வுடலை இப்பிறப்பில் குருவுக்கு சமர்ப்பணம் செய்பவனுக்கு குருவானவர் மறுமையைக் காட்டித் தருவார். நிலையான அறிவுடன் அறிவை கெடவிடாது ஆராய்ந்து பார்ப்பாயாக.

308

குருவானவன் பசுவுக்கு ஒப்பாவான். சீடன் கன்றுக்கு ஒப்பாவான். குரு, சமயமறிந்து ஒப்பற்ற இலட்சிய அமுதத்தை சீடனுக்கு தருவான்.

309

குருவானவர் வரும்போது உட்கார்ந்துகொண்டு எழுந்திருக்காத கடையருக்கு முக்தி கிடையாது. கணவனை அலட்சியப்படுத்தும் காரிகையின் கதியை அடைவான்.

310

தெய்வத்தைப் படைத்து மக்களைக் கும்பிடச்செய்து. உலகை ஆள்விக்கும்படி செய்பவன் சிற்பிதான். மாங்கல்யத்தைப் படைத்து குடும்ப பந்தங்களை உண்டாக்கி ஆள்பவனும் அவன்தான். நாட்டையும் வீட்டையும் ஆள்பவன் சிற்பிதான்.

311

குழவிப் பருவத்தில்தான் பலவிதத்திலும் பிடித்துச் சுவைத்த முலைகட்கு, இன்று இவ்வளவு மோகமடைவது ஏன்! மூடனே ஆராய்ந்து பார்!

312

வாழ்கின்ற மக்கள் எல்லோரும் முன் மறைந்தவர்களது புண்ணிய சரிதங்களைக் கேட்கவேண்டும்; படிக்கவேண்டும்; அதன்படி நடக்க வேண்டும்; வாழவேண்டும். தனது முடிவை தேவர்களேயானாலும் தெரிந்துகொள்ளமுடியாது.

313

ஜீவாதாரமான நீரும் காற்றும், யாரையும் எதிர்பார்க்காமல் கிடைக்கும்படி செய்த கடவுளின் கருணையை என்னென்பது ?

314

கன்னியின் உடல் கஸ்தூரி வாசனை, கிழவியின் உடல் அழுக்கு நாற்றம் என்பர். பருவமேனியை வர்ணிக்கமுடியுமா ?

315

கடனை வளர்த்து மனிதனைத் தாழ்த்திவிடுகின்ற தந்தையானவன் பகைவனே யாவான். தன்னை மீறிச்செல்லும் மனைவியும் சத்துருவேயாவாள்.

316

தனக்கானவர்கள், நண்பர்கள், சுற்றத்தார், என்று யாரையும் நம்பியிருக்காதே. தனக்கு, தான் ஒருவன்தான் கதி.

317

பறவைகளைக் கண்டால் இன்பமாக இருக்கும். அதன் வகைகளைப் பார்த்தால் ஒவ்வொன்றும் அழகாகத்தான் உளது. கடவுள் தராத அழகு உனக்கெதற்கு ? ஆதலின் உள்ள அழகோடு அமைதிபெறுக.

318

உயிர் போகுமுன்பே உயர் மருந்தளித்து பிழைக்கவைக்கவேண்டும். உயிர்பிரிந்தபின் அம்மருந்தினால் பயன் யாது ? எதையும் காலத்தை தவறவிடாமல் செய்யவேண்டும்.

319

தகுந்த குலத்தவனே யானாலும், தன்னளவு பொருள் கொடுத்தாலும் பிறனொருவனைத் தொடவிடமாட்டாள். உத்தமமான கற்புடைய மகளிர் பிறரைத் தீண்டவிடமாட்டாள்.

320

தந்தை சொற்கேட்டு தாயைக் கொன்ற பரசுராமன் என்ன பலனை யடைந்தான் ? நிற்க நிழலின்றி மகேந்திரமலையை யடைந்தான் அல்லவா ?

321

மகன் யாராயினும் தந்தையைவிட சிறப்புடன் புகழ்பெற்ற பெரியவனே யாறுலும், தந்தையை எளிமைப்படுத்த முனைந்தால் அவன் இகபர சுக மிரண்டையுமிழப்பான்.

322

பெண்களின் நடத்தை கணவனின் நடத்தையைப் பொருத்துத்தான் உள்ளது. புண்ணியவதியாயினும் பாவியாயினும் கணவனே மூலகாரணனுவான்.

323

பிறன் மனைவியானவள் தன்னை ஈன்ற தாய்க்குச் சமானமானவள். இதையுணர்ந்தும் மனிதர்கள் தெளிவதில்லை.

324

தாய் தந்தையரிடமும், வறுமையுற்றோரிடமும், நம்பிய ஏழைக-ளிடமும், அரசரிடமும் பயபக்தியுடன் நடந்துகொள்ளவேண்டும்.

325

திருடனும், விடபுருஷனும் ஒத்தவர்கள்தான். இருவருக்கும் வீட்டிலிருக்கப்பிடியாது. இரவில் வெண்ணிலவும் பிடிக்காது.

326

குற்றவாளியேயாயினும், நீதியற்றவனுயினும், இழிந்தோனுயினும் வள்ளலானவன் அவர்கட்குக் கொடை தரல்வேண்டும்.

327

மகன் வளர்ந்து பெரியோர்களிடம் அடக்கமுடன் நடந்தால் தந்தைக்கு ஆனந்தத்தைத் தரும். பெரியோரால் நிந்திக்கப்படும் மகனுக இருந்தால் மிக்க வருத்தத்தைத் தரும்.

328

நாலுபேரிருக்குமிடத்தில் தான் தலைகாட்டி கௌரவத்தையடைய வேண்டுமானுல், என்றும் உண்மையே பேசவேண்டும்.

329

பிறர் நலம் கண்டு பொருது வீண்பேச்சுப் பேசுவோன் கடையோ-ஞகும், அப்படிப்பட்டவன் வாழ்வு ஏன் ? வீண்தான் ஆகும்.

330

பிறர் பொருளை கவர நினைப்போன் பாவியாவான். பிறர் பொருள்மேல் ஆசையில்லாதவனே புண்ணிய மூர்த்தியாவான்.

331

சூரியன் அரியாததை கவிஞன் அறிகிருன். கவிஞன் அறியாததை சூரியனும் அறியமாட்டான். ஆதலின் ரவியைவிட கவியே சிறந்தவனுவான்.

332

இந்த மாய உலகம் அன்பினுல்தான் வளர்ந்து சிறப்புறுகிறது. காமாந்தகாரத்தில் வீழ்ந்த மக்கள் கடவுளையறியமுடியாது துன்புறுவர்.

333

பிரம்ம தத்துவத்தை அனுபவபூர்வமாக உணரமுடியுமேயன்றி காணவோ, சொல்லவோ இயலாது. சூட்சுமமானது. மனதிற்கு தோற்றுமன்றி அதன் மருமம் உணரமுடியாது.

334

அன்ன தானத்தால் மிகுந்த செல்வம் படைத்து அமரர் உலகம் போற்றும் சிறப்பை யடைவான். அன்னமே பிரம்மமாகும். அதை எல்லோரும் உணரவேண்டும்.

335

கோடானுகோடி சம்பாதித்தாலும் சோற்றுக்கே வாழ்க்கை சரியாகி-விடுகிறது. அதைவிட அதிகம் என்ன அனுபவிக்கமுடியும் ? எல்லாம் அழிகின்றன. இப்படிப்பட்ட மாயவாழ்வு எதற்கு ? உன்னைக் காணும் நாளே நன்னுளாகும்.

336

பத்து தீய செயல்களை பத்து தடவை செய்ததுவே அதில் உறுதி பூண்டு தீயவழியிலே நடக்கும் துணிவெய்துகிருன். ஆனல் அதுமாதிரி நல்வழி நடக்க ஏன் துணிவு உண்டாகவில்லையோ ?

337

'உம் உம்' என்று சொல்லிக்கொண்டு எத்தனை கதைவேண்டுமானுலும் கேட்டுக்கொண்டிருக்கலாம். அதன்படி ஒரேமனத்துடன் முயல்வது அரிதாகும்.

338

எத்தனைநாள் வாழ்ந்தாலும் என்ன பயன் ? சிறியோராயினும், பெரியோராயினும் உயர்வுற்று புகழடையாவிட்டால் பயன் இல்லை. நமது சகோதரர்களும் நண்பர்களும் சாகவில்லையா ?

339

பாம்பிற்கு விஷப்பற்கள் இருக்கும்போது அஞ்சுவதுபோலவே தீயோனுடைய செல்வத்தைக்கண்டும் அஞ்சுவார்கள். விஷப்பற்களை பிடுங்கிவிட்டால் பயமில்லாததுபோல அவன் செல்வமழிந்தால் அஞ்சமாட்டார்கள்.

340

இவ்வுடலில் எப்படி பிரம்மத்தைக் காண்கிருனே அதுபோல எல்லா உடலிலும் பிரம்மம் உளதென உணர்ந்த ஞானியானவன் தன்னையும் எதிராளியையும் சமமாகக் கருதுவான்.

341

ஆசையெனும் கயிற்ருல் கட்டப்பட்டு அகிலலோகமும் விடுதலை யடையாதுள்ளது. அறிவென்னும் வாளால் துணிந்து எறியக்கூடாதா ?

342

தான் அன்பு செலுத்தினுல் தன்னையும் அன்பு செலுத்துவர். தான் விரும்பாவிட்டால் தன்னை யாரும் விரும்பமாட்டார்கள். தனது படாடோபங்களால் யாதொரு பயனும் இல்லை.

343

பாவம் என்பது வேறெங்கோ இல்லை; தன் செயலில்தான் அடங்கி இருக்கிறது. மனிதன் பயன் விரும்பாது கடமைகளை ஆற்றினுல் அவனுக்குப் பயம் என்பதே இல்லை.

★★★

கம்பன் கழகம்

கம்பன் புகழ் வாழ்க

இராஜபாளையம்

தலைவர் :
எஸ். என். ஆர். டி.
ராமசுப்பிரமணிய ராஜா

துணைத் தலைவர்கள் :
டாக்டர் ஜி. வெங்கடேசன்
என். ஆர். கே. சுப்புராம் ராஜா
ஏ. நாகரத்தினம்
என். ஆர். சுப்பிரமணிய ராஜா
கே. ராஜாமணி
ஏ. கே. டி. தர்மகிருஷ்ண ராஜா
ம. பொன்னையா
எஸ். பி. குமாரசாமி
டி. ஏ. ஈஸ்வர ராஜா
எம். ஏ. சுப்பிரமணிய ராஜா
ஏ. பி. உசேன் இப்ராகிம்
எஸ். டேனியல்ராஜ் சற்குணன்
எஸ். எஸ். ராமசுப்பிரமணிய ராஜா
ந. கி. நாராயண ராஜா

பொதுச் செயலர்கள் :
குன்றக்குடி பெரியபெருமாள்
என். எஸ். முத்துகிருஷ்ண ராஜா

பொருளாளர் :
பி. ஆர். விஜயராகவ ராஜா

செயலர்கள் :
பி. ஏ. பி. ராஜு
க. மாரிமுத்து
எஸ். வி. சந்திரசேகர ராஜா
கொ. மா. கோதண்டம்
கு. கார்மேகம்
வி. எஸ். வாசுதேவ ராஜா

இணைச் செயலர்கள் :
கே. பி. அய்யப்ப ராஜா
கே. ஆர். நாராயணசாமி
சு. வேம்புலு
மு. ஞானஜோதி
பி. பி. வேலாயுத ராஜா
கே. கே. அர்ஜுன ராஜா
கே. எஸ். நாகராஜன்

உறுப்பினர்கள் :
பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாத ராஜா
ஏ. ராம்மோகன் ராஜா
எஸ். ஆர். சூரியநாராயண ராஜா
பி. என். சிவசங்கரன்
எஸ். குழந்தைவேலு
எம். சி. ராதாரமணன்
என். ஏ. பி. கண்ணன்
பி. பி. கழுகுமலை ராஜா
பி. எஸ். சக்திவேல் ராஜா
பூ. அ. துரை ராஜா
பி. ஜே. அழக ராஜா
கொ. ச. பலராமன்
அ. இராமச்சந்திரன்
எஸ். எஸ். மாடசாமி ராஜா
ப. ஆதிமூலம்
கே. எல். ஜெகன்னாத ராஜா
எஸ். எஸ். ராம்தேவன்
எஸ். சுப்பையா
சி. கோ. ஆறுமுகம்

★ அலுவலகம் :
6, தாண்டல் கந்தசாமி தெரு
இராஜபாளையம்-626 117

ஜெயராம் பிரஸ், இராஜபாளையம், போன்: 2426.